# காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீயும்



முனைவர் - மு.வளர்மதி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ யும்

முனைவர். மு. வளர்மதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை-600 113.

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீயும் |
| நூலாசிரியர் | : | முனைவர். மு. வளர்மதி |
| வெளியிடுவோர் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை-600 113 |
| வெளியீட்டு எண் | : | 193 |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மொழிபெயர்ப்பு |
| பதிப்பு-ஆண்டு | : | முதற்பதிப்பு-டிசம்பர், 1994 |
| தாள் அளவு | : | 21×14 செ.மீ. |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | X+108=118 |
| படிகள் | : | 1200 |
| விலை | : | ரூ. 18/- |
| அச்சகம் | : | இராசகிளி பிரிண்டர்ஸ்<br>சென்னை – 20 |
| கட்டமைப்பு | : | அட்டைக் கட்டு |
| ஓவியர் | : | எ. எஸ். நடராசன் |

# அணிந்துரை

ஒரு இலக்கியவாதி தனிமனிதனாக இருந்தாலும் சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான பயன்மிக்க சிந்தனை விளை பொருளை உற்பத்தி செய்துத் தரக்கூடிய பொறுப்பு வாய்ந்த உழைப்பாளியாவான். அத்தகையச் சிறப்புமிக்க இலக்கியவாதிகளை அவர்கள் வாழுகின்ற காலத்திலேயே சமுதாயம் மதித்துப் போற்றுதல் வேண்டும்.

புகழ்பெற்ற மராட்டிய சிந்தனையாளரும் எழுத்தாளருமான வி. ஸ காண்டேகரைப் பற்றியும், அவருடைய படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்த்தொண்டாற்றிய அறிஞர் கா.ஸ்ரீ ஸ்ரீ அவர்களைப் பற்றியும் எடுத்துக் கூறும் வகையில் 'காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீயும்' என்ற இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுகிறது.

திராவிட இயக்க வரலாற்றில் காண்டேகருக்குச் சிறப்பிடம் உண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் பாரதிதாசனைக் காண்டேகருடன் ஒப்பிட்டு, 'கவிதைக் காண்டேகர்' என்ற தலைப்பில் 'திராவிட நாடு' இதழில் கட்டுரை எழுதியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. திராவிட இயக்க எழுத்தாளர்கள் பலரும் காண்டேகருடைய சிந்தனைகளை எடுத்துக்கூறியும், இத்ழ்களில் இடம்பெறச் செய்தும் சிறப்பித்து வந்தனர். இத்தகைய முக்கியத்துவம் பெற்ற எழுத்தாளர்களான காண்டேகரையும் கா.ஸ்ரீ ஸ்ரீயையும் தெரிந்து கொள்ளவும் வகையில், அவர்களுடைய பணியைச் சிறப்பிக்கும் வகையிலும் முனைவர் மு. வளர்மதி அவர்கள் இந்நூலை எழுதி வழங்கியுள்ளார்.

"மனிதப் பிறவிக்கு அடுத்தாற்போல் இவ்வுலகில் விந்தையான பொருள் புத்தகம்தான். ஏனென்றால் ஆயிரக்கணக்கான

மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுடனும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களுடனும் நாம் இன்னும் உரையாடி இன்புற உதவும் அரிய சாதனம் புத்தகம்" என்று கூறுகிறார் அறிஞர் கிங்க்ஸ்லி. இவ்வரையறையின்படி காண்டேகரையும், கா.ஸ்ரீ ஸ்ரீயையும் நேரில் சந்தித்து அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்ற குறையை நீக்கும் வகையில் இந்நூலை வழங்கிய முனைவர் மு. வளர்மதி அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

இலக்கியவாணர்களான காண்டேகருக்கும் கா.ஸ்ரீ.ஸ்ரீக்கும் அஞ்சல் தலை வெளியிட இயலவில்லை என்றாலும் அவர்களுடைய உருவங்கள் இந்நூலட்டையில் ஓவியமாக இடம் பெறுமாறு சிறப்பாக வரைந்தளித்த இந்நிறுவன ஆய்வு மாணவரும், ஓவியக் கலைஞருமான நடராசன் அவர்களுக்கு எனது நன்றி. இந்நூலை நன்முறையில் அச்சிட்டு வழங்கிய இராசகிளி அச்சகத்தாருக்கு மிக்க நன்றி.

இந்நிறுவனம் ஆல்போல் தழைக்கவும், சிறக்கவும் துணை புரியும் நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுக்கு இத்தருணத்தில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர். சா. சு. இராமர் இளங்கோ**

**இயக்குநர்**

சென்னை

20-12-94

# முன்னுரை

வி. ஸ. காண்டேகர் மராட்டிய இலக்கிய உலகில் புகழ் பெற்ற புரட்சி எழுத்தாளர்; சிந்தனையாளர்; சீர்திருத்த நோக்கும் சிறந்த மனிதநேயப் பண்பும் கொண்டவர்; மக்களிடம் வற்றாத அன்பும், நம்பிக்கையும் உடையவர்; 'கலை கலைக்காக அல்ல; கலை வாழ்வுக்காக' எனும் கருத்தைத் தமது படைப்புகளின் மூலம் பரப்பியவர்.

வி. ஸ. காண்டேகர் மனித உள்ளங்களை ஆழ்ந்து படித்து அவ்வுணர்வுகளைக் குறையாமல் தமது நாவல்களிலும், சிறுகதைகளிலும், கட்டுரைகளிலும், திறனாய்வுகளிலும், திரைப்படக் கதைகளிலும் வடித்துத் தந்தார். கருத்துகளை உவமைகளில் சித்திரித்துக் காட்டுவது வி. ஸ. காண்டேகரின் தனித் தன்மையாகும். சமூக முரண்பாடுகளை, மூட நம்பிக்கைகளை தமது படைப்புகளின் வழியாகக் கூறுவதில் முதன்மையாகத் திகழ்ந்தார்.

தெய்வத்திற்கு அடிமையாய் மனிதனையும், உடைமையாளனுக்கு அடிமையாய் உழைப்பாளியையும், ஆணுக்கு அடிமையாய் பெண்ணையும் சித்திரித்து வந்த மராட்டியக் கதை உலகில் பெரும்புயலாய் எழுந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நற்கொள்கைகளுக்கான பதாகையை உயர்த்திப் பிடித்தவர் காண்டேகர். தனிமனிதனின் மன விடுதலையிலிருந்து சமூகத்தின் புறவிடுதலை வரையிலும் கதைப்போக்கில் அவரால் எழுப்பப்பட்ட மானுடச் சித்திரங்கள் மகத்தான மனித தத்துவத்தின் மங்காத பிம்பங்கள் எனலாம்.

சிவலோகத்திலும் வைகுந்தத்திலும் இருப்பதாக, கனவுலகச் சித்திரமாகக் காட்டப்பட்ட கற்பனைக்கதா பாத்திரங்களுக்குப் பதிலாய் சகமனிதர்களை கதாபாத்திரங்களாய் அடையாளங் காட்டியவர் காண்டேகர். மராட்டியக் கதை இலக்கியத்திற்கு இன்னும் சொல்லப் போனால் இந்தியக் கதை உலகத்

திற்குச் சரியான திசையை நிர்ணயித்தமாலுமியாய்த் திகழ்ந்தார். சகமனிதர்களுக்கிடையே சட்டென்று அடையாளங்கண்டு கொள்ளக்கூடிய கதாபாத்திரங்கள்-நம் மனதிற்குள்ளே நிகழ்ந்தாலும் நம்மால் எளிதில் அடையாளங் காணமுடியாத இரசாயன மாற்றங்கள்-தனிமனித, குடும்ப, சமூக, அரசியல் முறையிலான ஒடுக்கு முறைகளை எதிர்த்து இயல்பாய் எழ வேண்டியபோர்க்குரல்கள், இயல்பான நிகழ்ச்சிப்போக்குகளின் வழியே உண்மை நிலையை உணரச் செய்யும் உத்திகள்-இவை களே காண்டேகர் என்னும் மராட்டிய இலக்கிய மேதையின் படைப்புகளின் தனிச் சிறப்புகள்.

உலக இலக்கியத் தரத்திற்கு ஒப்பான மராட்டியக் கதை இலக்கியச் சிற்பி வி. ஸ. காண்டேகரின் படைப்புகளைத் தமிழாக்கித் தரும் பெரும்பணியை மேற்கொண்டவர் அறிஞர் கா. ஸ்ரீ ஸ்ரீ காண்டேகரின் படைப்புகளைத் தமிழில் தருவ தையே தமது ஆயுட்பணியாக மேற்கொண்டு அதனை மிகச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளார். கா ஸ்ரீ.ஸ்ரீ தமிழகத்தில் காண்டேகரின் படைப்புகள் வெளிவந்தபொழுது அறிஞர் பெருமக்களும், சாதாரணப் பொதுமக்களும் அவற்றை விரும்பிப் படித்துப் போற்றி வரவேற்றனர்.

அறிஞர் அண்ணா, "சமூக அமைப்பு முறையிலே மிகப் புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்பதற்கான போர் முரசு!—காண்டேகரின் கதைகள்" என்றும், 'காண்டேகர் மராட்டியப் பாரதிதாசன்—உரைநடைப் பாரதிதாசன்—எழுச்சிக்கு வழிகாட்டும் எழில்மிகு ஏடுகளுக்கு ஏற்றம் தந்த எழுத்தாளர்' என்றும் பாராட்டியுள்ளார். 1961ஆம் ஆண்டு செங்கற்பட்டு இலக்கிய மாநாட்டில், காண்டேகரின் படைப்பு களைத் தமிழில் வழங்கிய அறிஞர். கா.ஸ்ரீ.ஸ்ரீயைப் பாராட்டி அறிஞர்அண்ணா பரிசுவழங்கினார்.கா.ஸ்ரீ.ஸ்ரீ இல்லையெனில் தமிழர்கள் காண்டேகரை அறிய இயலாமற் போயிருக்கும். கா.ஸ்ரீ ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் காண்டேகரின் நூல்கள் தமிழ் இலக்கியப் போக்கில் பெரும் மாற்றத்தை உருவாக்கத் துணைபுரிந்தன. மொழிபெயர்ப்பு மொழிகளின் இணைப்புப் பாலம் என்பதுடன், மொழிபெயர்ப்பு மொழிகளின் புதிய

சக்தி என்பதைத் தமது அயராத உழைப்பின் மூலம் உணர்த்தி யுள்ளார் அறிஞர் கா.ஸ்ரீ.ஸ்ரீ.

வி.ஸ. காண்டேகர், கா.ஸ்ரீ.ஸ்ரீ ஆகிய இருவரின் வாழ்வை யும், தொண்டையும் இணைத்து வழங்குகிறது இந்நூல். கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்புப் பணி, காண்டேகரின் மராட்டிய இலக்கியத்தைத் தமிழில் தந்த முயற்சி என்பதை விட, தமிழாகத் தந்த முயற்சி என்றே கூறலாம். இந்நூலில் காண்டேகரின் படைப்புகள் பற்றிய ஆய்வு, கா.ஸ்ரீ ஸ்ரீ அவர் களால் தமிழாகத் தரப்பெற்ற நூல்களைக் கொண்டு செய்யப் பெற்றது என்பது சொல்லாமலேயே விளங்கும் ஒரு செய்தி யாகும். கா.ஸ்ரீ.ஸ்ரீ என்னும் அகப்பையை அறிந்துகொள்ளும் முன், காண்டேகர் என்னும் சட்டியை அறிமுகம் செய்து கொள்வதே இந்நூலின் முதற்பகுதியின் இலக்காகும். கா.ஸ்ரீ.ஸ்ரீயின் பெரும் பணியையும் தமிழுக்கு அவர் அளித்த புதிய நன்கொடையையும் நிரல்பட வகுத்தும் நிறைவுறத் தொகுத்தும் அளிக்கும் ஒரு சிறு முயற்சியே இந்நூல். இந்த நோக்கம் இந்நூலின் இரண்டாவது பகுதியில் நிறைவேற்றப் பெற்றுள்ளது.

அறிஞர் கா.ஸ்ரீ.ஸ்ரீ அவர்கள் கண்சிகிச்சைப் பெற்றுவந்த வேளையிலும், இந்நூலுக்கான தகவல்களை அளித்து, எழுத்துப் பிரதியைத் திருத்தம் செய்து வழங்கியுள்ளார். அவரது உண்மையான உழைப்பும், குன்றாத ஆர்வமும் அளவிடற்கரியன என்பதை உணர முடிகிறது. அவருக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது. காண்டேகர், கா.ஸ்ரீ.ஸ்ரீ. அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கத்தை இம்முன்னுரையை அடுத்து இணைத்துள்ளேன்.

கலைமகள் இதழ் ஆசிரியர் எஸ்.வி. ரமணி, அல்லயன்ஸ் புத்தக நிறுவன வெளியீட்டாளர் சீனிவாசன் ஆகியோர் உரிய தகவல்களை அளித்து உதவியமைக்கு மிக்க நன்றி. இந்நூலை எழுதும் அரிய வாய்ப்பினை நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு எனது இதயங்கனிந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—மு. வளர்மதி

# காண்டேகர், கா.ஸ்ரீ.ஸ்ரீ அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்

ஸ்ரீ

புணே

**20-2-1976**

அன்பார்ந்த வணக்கம்.

தங்கள் 2-2 தேதியிட்ட கடிதம் உரிய சமயத்தில் கிடைத்து, எல்லாச் செய்திகளையும் அறிந்தேன். கடிதத்துடன் நாற்பது ரூபாய்க்குரிய செக்கும் கிடைத்தது.

உங்கள் கடிதத்தில் வெளியீடுபற்றிய புதிய உற்சாகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். அதுபற்றி நீங்கள் என்ன திட்டம் செய்தாலும், எப்போதுமே என் ஒப்புதல் இருக்கும். ஆனால், இப்போதைய நிலைமைகளையும், உங்கள் உடல்நலம் முதலியவற்றையும் கருத்தில்கொண்டு செயற்படத் தொடங்குங்கள். 'கண்ணீர்', 'யயாதி', 'அமுதக்கொடி' என்ற என் மூன்று நாவல்களும் தமிழில் உங்கள் ஆக்கமாகவே வெளிவர வேண்டுமென்பது என் விருப்பம். உங்களுடன் எனக்கு நன்றியுறவு ஏற்பட்டதிலிருந்து, நான் என் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேறு எவருக்கும் அநுமதி தந்ததில்லை. நீங்கள் ஆர்வத்துடன் தமிழாக்கம் செய்ய முன்வந்ததனால், தமிழ் நாட்டில் எனக்கு மக்களின் அன்பு கிடைத்தது பற்றி எப்போதுமே உங்களிடம் நன்றிகொண்டிருக்கிறேன். ஆகையால் பணவிவகாரம் பற்றித் தனியாக எழுத ஏதுமில்லை. ஆனால், நான் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை மனத்திற் கொண்டு, முற்றும் சிந்தித்த பிறகே முடிவு கொள்ளுங்கள்.

'சாபநீக்கம்' என்ற என் கதைத் தொகுதியை அடுத்து, 'முகிலில் மறைந்த நிலவு' என்ற தொகுதி மட்டுமே வெளி வந்துள்ளது. அது உங்களுக்குக் கிடைத்ததா? இல்லையென்றால் ஒரு பிரதி அனுப்பி வைக்கிறேன். சிறிய இரண்டு தொகுதிகளாக வெளிவரக்கூடிய என் கதைகளின் பிரதிகள் கோல்ஹாப்பூரில் உள்ளன. டில்லியிலிருந்து திரும்பி நான்

கோல்ஹாப்பூர் போனதுமே சில கதைகளை உங்களுக்கு அனுப்புகிறேன். நான் 24-ஆம் தேதி விமானத்தில் டில்லி செல்கிறேன். என் உடல்நலம் சுமாராக உள்ளது; ஆனால் இந்த உடல்நலத்தைக் கொண்டே இவ்வளவு நாள் சமாளித்தேன். இந்தப் பயணத்தையும் சமாளிப்பேன் என்று நம்புகிறேன். விவரமாக பின்பு எழுதுவேன்.

இப்படிக்கு

ஸ்ரீ. கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய,
சென்னை—28.

தங்கள்
வி. ஸ. காண்டேகர்

## உள்ளே

### பகுதி I


| | |
|---|---|
| மராட்டிய இலக்கிய உலகம் | — 1 |
| வி. ஸ. காண்டேகர் | — 4 |
| காண்டேகரின் படைப்புகள் | — 8 |
| காண்டேகரின் கொள்கைகளும் சொல்லி வைத்த முறைகளும் | — 21 |
| காண்டேகரின் பிற எழுத்தாக்கங்கள் | — 32 |


### பகுதி 2


| | |
|---|---|
| தமிழும் மராட்டியும் | — 38 |
| அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. | — 42 |
| கா.ஸ்ரீ.ஸ்ரீ.யின்மொழிபெயர்ப்புநோக்கும்போக்கும் | — 67 |
| தமிழிலா எழுதினார் காண்டேகர்! | — 73 |
| பரிசு பெற்ற படைப்பான 'யயாதி'யைப் பற்றி வி.ஸ. காண்டேகரும் கா. ஸ்ரீ.ஸ்ரீ. யும் | — 81 |
| தமிழகத்தில் காண்டேகரின் இலக்கியத் தாக்கம் | — 84 |
| காண்டேகரின் படைப்புகள் | — 101 |
| துணை நூற் பட்டியல் | — 106 |

# மராட்டிய இலக்கிய உலகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் மராட்டிய இலக்கிய வரலாற்றில் ஒரு இன்றியமையாத காலகட்டமாகும். புராணக் கதைகளே இலக்கியம் என்ற எண்ணத்தை அகற்றும் வகையில் மராட்டிய இலக்கியப் போக்கில் புதிய மாற்றத்தை உருவாக்க அக்கால இலக்கியவாதிகள் அரிய முயற்சிகளை மேற்கொண்டனர். 1861 க்கும் 1876 க்கும் இடைப்பட்ட காலத்தில் பல புதுமைக் கருத்துக்களைக் கூறுகின்ற பதினாறு நாவல்கள் மராட்டியில் வெளிவந்தன. இவை பெண்கல்வி, விதவைமணம், மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகிய சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்தின.

பாபா பத்மன்ஜி எழுதிய 'யமுனா பாரியாதன் (1857) மராட்டியில் வெளியான முதல் யதார்த்த நாவலாகக் குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக பிராமண விதவைகளின் துன்பங்களைக் கூறுவது இந்நாவலின் நோக்கமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஏற்பட்ட கருத்து மோதலில் புதிய சீர்திருத்தக் கருத்துக்கள் மக்கள் மனதில் வேரூன்றத் தொடங்கின. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் இப்புதிய கருத்துகளுக்கு வலிவும் பொலிவும் தரும் வகையில் அமைந்தன.

1920 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை வெளிவந்த மராட்டிய சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் ஆகியன மக்களிடையே சமூக மற்றும் அரசியல் விழிப்புணர்வின் தேவையை உணர்த்துகின்ற சீர்திருத்தப் பிரச்சார இலக்கியங்களாகத் திகழ்ந்தன, சமூக நிலையில் சனாதனம், சமூக அநீதி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, பெண் அடிமைத்தனம், மரபுகளின் பிற்போக்குத்தனம், கொள்கை நிலை இழப்பு ஆகியவற்றின் எதிர்ப்புப் பிரச்சாரமாக மராட்டிய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அரசியல் நிலையில் அன்னிய ஆதிக்க

எதிர்ப்புணர்வு, ஒத்துழையாமை இயக்கம், உப்பு யாத்திரை, உழவர்களின் போராட்டம்,காந்தியக் கோட்பாடு, மார்க்சியக் கோட்பாடு ஆகியவற்றின் பிரச்சாரமாக அமைந்தன. இந்த மாறுதலுக்கான முயற்சியில் முதன் முதலாக ஈடுபட்டவர் ஹரி நாராயண ஆப்டே. இவருடைய முதல் நாவலான'மத்லி ஸ்திதி' 1885 இல் வெளிவந்த பொழுது பொது வாழ்க்கையிலும் இலக்கிய உலகிலும் முன்னணியில் நின்றபலரும் புகழ்ந்து பாராட்டினர். இவரை ஹரிபாவ் ஆப்டே என்றே பொதுவாக அழைக்கின்றனர். இவர் வரலாற்றுப் புதினங்களோடு சமூக நாவல்களையும் ஒழுங்குபடுத்தி அவற்றில் ஒரு புதிய அழகியல் சுவையைச் சேர்த்தார், ஹரிநாராயண ஆப்டே எழுதிய சமூக நாவல்கள் பதினொன்றும் வரலாற்று நாவல்கள் பதினொன்றும், முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், பிற படைப்புகளும் மராட்டிய இலக்கியப் போக்கை மாற்ற உதவின.

ஆப்டேவின் படைப்புகள் வெளிவந்த வேளையில் தத்துவ வாதியான பேராசிரியர் வி. எம். ஜோஷி.(prof.V.M. Joshi) முதல் மராட்டியக் கலைக்களஞ்சிய ஆசிரியரும் சமூக நோக்கு உள்ளவருமான டாக்டர் எஸ்.வி. கேட்கர் (S V. Ketkar) ஆகியோர் மராட்டியப் புதினங்களுக்கு ஒரு தத்துவ மற்றும் சமூக நிலைகளைக் கொடுத்தனர் "டாக்டர் எஸ்.வி.கேட்கர் துணிவாக யாரும் எழுதமுற்படாத சமுதாய நிலைமைகளைத் தமது புதினங்களில் கையாண்டார். குறிப்பாக 'விலைமாதர்களின் சந்ததி' (The future of the progeny of prostitutes) குறித்து அவர் எழுதிய போக்குக் குறிப்பிடத்தக்கதாகும்."[1]

ஹரிநாராயண ஆப்டே,பேராசிரியர் வி.எம் ஜோஷி. டாக்டர் எஸ்.வி. கேட்கர், கோல்ஹட்கர் ஆகியோரின் உயிரோட்டம் மிக்க பகுத்தறிவுப் படைப்புகள் மராட்டிய இலக்கிய நிலத்தைப் பண்படுத்தியிருக்கின்றன, இதற்கு முக்கியக் காரணம் கல்வி கற்றவர்கள் மேலைநாட்டு அரசியல், சமூக வரலாறுகளை இலக்கியங்களை அறிந்து கொள்ளத் தொடங்கியமைதான்,

1. V.S. Khandekar, M- D. Hatkanagalekar, Sahitya Akademi Ed. 1989. P.5

அத்துடன் இந்தியா அடிமை நாடாக இருப்பதன் காரணங் களையும் இந்தியச் சமுதாயம் சீரழிந்து கிடப்பதன் காரணங் களையும் அறிந்து கொண்டனர். இந்நிலை மாறவேண்டும் என்ற உந்துதலையும் பெற்றனர்.

ஸ்பென்சர் (Spencer) மோலியர் (Moliere) டிக்கன்ஸ் (Dickens) ஸ்காட் (Scot) ஜேன் ஆஸ்டின் (Jane Austine) ஜார்ஜ் எலியட் (George Eliot) ஜி. டபிள்யு. எம். ரெயினால்டு (G.W. M. Reynold) ஆகியோரின் இலக்கியப் படைப்புகள் மராட்டிய இலக்கியவாதிகளைப் பெரிதும் சிந்திக்கத் தூண்டின.

புதிய சமூக அமைப்பு என்ற இலட்சிய நோக்குடன் வெளி வந்த மராட்டியப் படைப்புகளினால் எழுத்தாளர்களிடத்தும் வாசகர்களிடத்தும் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. ஹரி நாராயண ஆப்டே, எஸ்.வி. கேட்கர், கோல்ஹட்கருக்கு அடுத்து விஷ்ணு ஸகாராம் காண்டேகர் என்ற இலக்கியச் சிற்பியின் படைப்புகள், இவ்விலக்கியப் பரப்பை மேலும் மேலும் விரிவுபடுத்தின.

# வி. ஸ. காண்டேகர்

விஷ்ணு ஸகாராம் காண்டேகர் 1898ஆம் ஆண்டு சனவரி மாதம் 19ஆம் நாள் மராட்டிய மாநிலத்தில் உள்ள ஸாங்க்லீ எனும் ஊரில் எளிய குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை கணேஷ ஆத்மாராம் அக்காலத்தில் சுதேசி சிற்றரசாக இருந்த ஸாங்க்லியில் கிராம அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். ஆகையால் காண்டேகரின் இளமைப் பருவமும், கல்வியும் ஸாங்க்லியிலேயே முடிவுற்றது. காண்டேகர் கல்வியில் சிறந்த மாணவராக இல்லையெனினும், நல்ல அறிவாளி என்று பெயர் பெற்றார். கல்வியைக் காட்டிலும் நாடகங்கள் எழுதி நடிப்பதிலும், விளையாட்டிலும் மிகுதியான கவனம் செலுத்தினார். தொடக்க காலத்தில் புராணக் கதைகளையும், வரலாறு மற்றும் கற்பனைவளம் நிறைந்த கதைகளையும், நாடகங்களாக்கி நடத்திக் காட்டினார்.

காண்டேகர் மாணவராக உள்ளபொழுதே 'வதுபரிக்ஷா' (Vadupariksha) 'சனி மாகாத்மியம்' (Shani-Mahatmya) ஆகிய இவர் எழுதிய நாடகங்கள் அரங்கேற்றம் பெற்றது குறிப்பிடத் தக்கது. 'வது பரிக்ஷா' என்ற நாடகத்தைப் பார்க்க ஸாங்க்லீயிலிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள மீரஜ் (Miraj) என்ற ஊருக்கு காண்டேகர் நடந்து சென்று வந்துள்ளார். இவர் 1913ஆம் ஆண்டு தனது பள்ளி இறுதி வகுப்பை முடித்ததும் புனாவில் உள்ள பர்கூஸன் கல்லூரியில் உதவித் தொகை பெற்றுப் படித்து வந்தார். இருப்பினும் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள இரண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தபடியால் தினமும் நடந்தே புனா நகரத்திற்குச் சென்று சேர்வார். காண்டேகர் எவ்வளவு கொடிய வறுமையில் வாழ்ந்தார் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

காண்டேகர் புனாவிற்கு வந்தபொழுதுதான் அவருக்கு கட்கரி (Gadkari) கோல்ஹட்கர் (Kolhatkar) போன்ற சிறந்த

எழுத்தாளர்களின் அறிமுகம் கிடைத்தது. காண்டேகர் கோல்ஹட்கரின் சிறந்த இரசிகர். கோல்ஹட்கரின் கட்டுரைகளையும், நாடகங்களையும் காண்டேகர் விரும்பிப் படித்தார். காண்டேகரின் எழுத்தில் கோல்ஹட்கர் மற்றும் கட்கரியின் தாக்கத்தை நன்கு காணமுடியும்.

காண்டேகர் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாத நிலை உருவாகியது. 1916ஆம் ஆண்டில் அவரது மாமா விஷ்ணு ஸகாராம் இவரைத் தனது வாரிசாக தத்து எடுத்துக் கொண்டார். ஆனால் கல்லூரிப் படிப்பிற்கு அவர் பெரிதும் உதவுவார் என்ற காண்டேகரின் எண்ணம் ஈடேறவில்லை. அவருடைய கணேஷ் ஆத்மாராம் காண்டேகர் என்ற பெயர் விஷ்ணு ஸகாராம் காண்டேகர் என மாறியது மட்டும்தான் அவருக்குக் கிடைத்த பலன். படிப்பைத் தொடரமுடியாததால் சாவந்தவாடியில் இருந்த தமது சகோதரியின் வீட்டிற்குக் காண்டேகர் சென்றார். வறுமை, உடல்நலக் குறைவு, ஆகியவற்றால் காண்டேகர் பாதிக்கப்பட்ட நிலையிலும் பல நூல்களைப் படிப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபட்டிருந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் தமது முதல் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையைக் காண்டேகர் எழுதினார். அந்தக் கட்டுரை நவயுக் (Navayug) என்ற பத்திரிகையில், சிறந்த திறனாய்வாளரான ஸி. டி. மாட்கோல்கர் (Madkholkar) எழுதிய 'கேசவஸுதரின் சிந்தனைப் போக்கு' (The School of Keshavsut) என்ற கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரையாகும்.

தன்னலமற்ற சீர்திருத்தவாதியும், எளியோரிடம் மிகுந்த பரிவுள்ளவருமான ஆகர்கர் என்பவரின் தொண்டு மனப்பான்மை காண்டேகரின் உள்ளத்தை ஈர்த்தது. "நமது பண்பாட்டு மரபுகளும், வாழ்க்கை முறைகளும் ஒரு சில குறைபாடுகளையும் தீங்குகளையும் கொண்டுள்ளன. முதற்கண் நாடு அடிமைப்பட நேர்ந்ததன் காரணமே அவைதான். எனவே முதலில் அக்குறைபாடுகளும், தீங்குகளும் களையப்படுதல் வேண்டும். அப்போதுதான் நமது மக்கள் ஆரோக்கியம் பெறுவார்கள்; அவர்களது வாழ்க்கை வன்மையுடையதாகும்;

முற்போக்கு வளரவேண்டும்; பகுத்தறிவும் அதன் துணையான ஆராய்வுப்பான்மையும் நமது மக்களுக்குத் தேவை''[2] என்ற கருத்துடையவர் ஆகர்கர். அவரைப் பின்பற்றும் வகையில், 1920ஆம் ஆண்டில் ரத்நாகிரிக்கு அருகிலுள்ள 'ஷிரோடே' என்ற சிற்றூரில் இருந்த ஒரு பள்ளியில் காண்டேகர் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அவரது மாத ஊதியம் இருபது ரூபாயாக இருந்தபோதிலும் மாணவர்களிடையே ஒரு புதிய சமூக உணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் பணியாற்றினார். காண்டேகரின் சமூகச் சீர்திருத்தச் செயற்பாடுகளுக்குக் கிராம மக்களிடமிருந்து எதிர்ப்புகளும், அச்சுறுத்தல்களும் ஏற்பட்டபொழுதும் தமது பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். பள்ளியின் வளர்ச்சிக்காகத் தம்மால் முடிந்த அளவு முயற்சிகளை மேற்கொண்டார். 'தீண்டாதவர்' எனச் சமூகம் ஒதுக்கி வைத்த தாழ்த்தப்பட்ட இனத்தவரின் பிள்ளைகளைத் தமது பள்ளியில் சேர்த்துக் கல்வியறிவு புகட்டியதுடன் அவர்களைப் பண்பாளர்களாகவும் ஆக்கினார். குடிசைவாசிகளான தமது மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலில் பெரிதும் இன்புற்றார். மாணவர்களைக் கடற்கரை, மலைச்சாரல் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று, பல அரிய செய்திகளை விளக்கிக் கூறுவார் காண்டேகர். பின்னாளில் அவருடைய மாணவர் பலரும் வாழ்வில் உயர்வடைந்துள்ளனர். தனது இவ் ஆசிரியர் பணி அனுபவத்தைத் தனது நாவல்களில் இலட்சியப் பாத்திரங்களின் வழியாக எடுத்துரைத்துள்ளார்.

1920-25ஆம் ஆண்டுகளில் காண்டேகர் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். 1923இல் அவரது முதல் சிறுகதையான 'கர்கொணாசே' (யாருடைய வீடு?) என்பது வெளிவந்தது. காண்டேகரின் நண்பர் மேக ஷ்யாம் ஷிரோட்கர் (Meghasyam Shirodkar) ஸாவந்தவாடியிலிருந்து நடத்திய 'வைணதேய'

---

2. ஹரிநாராயண ஆப்தே, ஆர். பி. ஜோஷி, (தமி) சரோஜினி பாக்கியமுத்து, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1985, ப. 8

(Vinateya) என்ற வாராந்திர பத்திரிகை ஒன்றின் இலக்கியப் பகுதிக்குக் காண்டேகர் ஆசிரியரானார்.

ரத்னாகர் (Ratnakar), யஷ்வந்த்(Yashwant) மனோரஞ்சன் (Manoranjan), ஸ்வயம் ஸேவக் (Swayam Sevak) போன்ற புகழ் பெற்ற பத்திரிகைகளில் காண்டேகரின் சிறுகதைகள் இடம் பெற்றன. இலக்கிய உத்தியில் காண்டேகர் கோல்ஹட்கரைப் பின்பற்றினார். 1926இல் கோல்ஹட்கர் காண்டேகரைத் தமது வாரிசு என்று பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தினார். இவரின் வேண்டுகோளின்படியும், தமக்கையின் அறிவுரையின்படியும் பெல்காம் மாவட்டத்திலுள்ள அஸோகே (Asoge) என்ற ஊரில் மனோரீகர் குடும்பத்தைச் சார்ந்த மனுதாய்(Manutai) என்ற பெண்ணை மணந்தார்; அவருக்கு காண்டேகர் 'உஷா' என்று பெயரிட்டார். இவர் காண்டேகரின் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு, அவரது இலக்கியப் பணிகளுக்குத் துணையாய் நின்றார்.

# காண்டேகரின் படைப்புகள்

காண்டேகர் ஒரு முற்போக்கு இலட்சிய இலக்கியவாதி. தனது இளம் வயதிலேயே இலக்கியம் என்பதைச் சமூக மாற்றத்தை உருவாக்கவல்ல ஆற்றல்மிக்க கருவியாகக் கண்டார். இலக்கியம் என்றால் இலட்சியம் என்ற வகையில், அதற்குரிய பண்புநலன்களுடன் தமது சீர்திருத்தச் சிந்தனைகளைப் படைப்புகளாக வழங்கியுள்ளார்.

பதினைந்து நாவல்கள், ஏறத்தாழ முந்நூறு சிறுகதைகள் பதினெட்டு திரைக்கதைகள், பதினெட்டு கட்டுரைத் தொகுதிகள், ஆறு நீதிக்கதைத் தொகுதிகள், ஐந்து இலக்கியத் திறனாய்வுகள், ஒன்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள், மூன்று சொற்பொழிவுத் தொகுப்புகள், இரண்டு சுயசரிதை நூல்கள் ஆகியன காண்டேகரின் படைப்புகளாக மிளிர்கின்றன.

''சமுதாயத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதவர்க்கத்தினரிடையே ஏற்படுகின்ற இன்ப துன்பங்களைக் கதைப்போக்கில் அப்படியே சுவைகுன்றாமல் நம் கண்முன் கொண்டு நிறுத்துபவர் காண்டேகர். இதைப் படித்த பலரும் பிரமித்துப் போனதுண்டு. காண்டேகருடைய இலக்கியங்கள் எல்லாம் காலத்தால் அழியக் கூடியது அல்ல. ஒவ்வொரு நாளும் புத்துணர்வு பெற்று வருகின்றது. இன்றைக்கு நமது சமுதாயத்தில் நாளுக்குநாள் முறைகேடுகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இந்தச் சூழ்நிலையைப் பல வருடங்களுக்கு முன்னரே காண்டேகர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்''[3] காண்டேகரின் படைப்புகள் யாவும், மனித நேயம், பரிவு, பாசம். அன்பு, காதல் ஆகிய மனித உளவியல் போக்கினை எடுத்துக்கூறும் பாங்குடையனவாகும். மனித நேயமே அனைத்திலும் உயர்ந்

3. கண்ணீர், வி.ஸ. காண்டேகர், (தமி) கா, ஸ்ரீ. ஸ்ரீ., அல்லயன்ஸ் வெளியீடு. டிச 1991. ப. 4

தது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவராக காண்டேகர் திகழ்ந்தார்.

**நோயிலும் நல்லிலக்கியம் படைத்தவர்**

ஷிரோட என்ற கிராமத்தில் காண்டேகர் வாழ்ந்த பொழுது ஒருநாள் மலைப்பகுதியில் உலாவிவிட்டு வருகையில் அவரைக் கடும் நஞ்சுள்ள பாம்பு தீண்டிவிட்டது. அவர் வீட்டுக்கு வந்ததும் பாம்பு தீண்டியதை கேட்டு அவருடைய மனைவி மிகவும் வேதனையுற்றார். 'தேளைவிடச் சிறிது அதிக விஷமுள்ள பாம்பு என்னைக் கடித்திருக்கிறது. இதற்காகக் கவலைப்படாதே' என்று அவர் தமது மனைவியைத் தேற்றினார். எவ்வளவோ மருத்துவங்கள் செய்தும் நஞ்சின் விளைவு வாழ்நாள் முழுவதும் அவரை வருத்தியது. அவர் எப்போதும் ஏதாவதொரு நோய்க்கு ஆளானார். உடம்பில் வெள்ளைத் தழும்புகள் பரவின; சிலர் அவருக்கு வெண்குஷ்டம் நோய் கண்டிருப்பதாகக் கருதினர். ஆனால் அது தவறு; பாம்புக் கடியினால் ஏற்பட்ட நஞ்சின் விளைவே அந்த வெள்ளைத் தழும்புகள்.

காண்டேகர் முதன் முதலில் 'பணஜி' என்ற ஊரில் இலக்கியச் சொற்பொழிவாற்றினார். அன்று முதல் காண்டேகர் சிறந்த இலக்கியப் பேச்சாளர் என்று அறிஞர்களால் பாராட்டப்பட்டார், உடலில் வெள்ளைத் தழும்புகள் மிகுதியாகப் பரவியதால் வெளியிடங்களுக்குச் செல்வதைக் கைவிட்டு சிறந்த இலக்கியப் படைப்புகளை வீட்டிலிருந்தே உருவாக்குவதில் முழுமையாக ஈடுபட்டார்.

நோய்வாய்ப்பட்டிருந்தும் காண்டேகர் இலக்கியத்தில் பற்றும் சமூகநலன்களில் ஆர்வமும் கொண்டு ஓயாமல் நூல்களை உருவாக்கித்தந்தார். மாட்கோல்கர் என்ற மராட்டிய எழுத்தாளரிடம் ஒரு வாசகர், எப்போதுமே நோய்களினால் வாடும் காண்டேகர் எப்படி இத்தனை நூல்களை எழுதுகிறார்? என்று கேட்டார். அதற்கு மாட்கோல்கர், 'காண்டேகர் தமது இலக்கியச் சிந்தனைகளில் நோயை மறந்து நிறைய

நூல்களை எழுதுகிறார். பின்னே அவர் எழுதாமல் இத்தனை நூல்களையும் பிசாசா எழுதுகிறது'' என்று வேடிக்கையாக விடை பகர்ந்தார்.

காண்டேகர் தாம் நோயுற்ற நிலையிலிருந்தும் கூடத் தமது நண்பர்களுக்கும் வாசகர்களுக்கும் ஏராளமான கடிதங்கள் எழுதிவந்தார். காண்டேகர் மறைந்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு 1980 ஆம் ஆண்டு 'தீபக்ருஹ' (விளக்கு-வீடு) என்ற தலைப்பில் அவருடைய கடிதங்களின் தொகுதியை வி. வா. பத்கீ என்பவர் வெளியிட்டார். அக்கடிதங்கள் யாவும் தனி மனிதனின் முன்னேற்றத்திலும் சமூக நலனிலும் காண்டேகர் கொண்டிருந்த அக்கறையையும் ஆர்வத்தையும் துடிப்பையும் உணர்த்துவனவாகும்.

**காண்டேகரின் நாவல்கள்**

வி.ஸ. காண்டேகர் மராட்டிய இலக்கியப் போக்கில் புதுமை செய்தார். சமூக நிகழ்வுகளில், சமூகக் கட்டுப்பாடுகளில் பாதிக்கப்பெற்ற தனிமனிதர்கள் கதைமாந்தர்களாயினர் பெண்களின் உள்ளக் குமுறல்களை, எண்ணப் போக்குகளை, சிக்கல்களைச் சித்தரிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஹ்ருதயாசீ ஹாக (இதயக்குரல்), காண்டேகரின் முதல் நாவலாக 1930 ஆம் ஆண்டு வெளிவந்தது. காஞ்சன் ம்ருக (தங்க மான்), உல்கா (எரிநட்சத்திரம்), தோன் த்ருவ (இருதுருவங்கள்), ஹிர்வா சாப்பா (மனோரஞ்சிதம்), பாண்டரே டக (வெண்முகில்), தோன் மனே (இருமனம்), ரிகாமா தேவ்ஹாரா (வெறுங்கோயில்),ஸீகாசாசோதள (சுகம்எங்கே),பஹிலேப்ரேம (முதற்காதல்), ஜளலேலா மோஹர் (கருகியமொட்டு), க்ரௌஞ் சவத (கிரௌஞ்ச வதம்), அஷ்ரு (கண்ணீர்), யயாதி (யாயதி) அம்ருத்வேல் (அமுதக்கொடி), ஆகிய பதினைந்து நாவல்கள் காண்டேகரின் சிறந்த படைப்புக்களாகும்.

காண்டேகர் நாவல் எழுதத் தொடங்குவதற்கு முன் 'ரங்காசே ராஜ்ய' (ஏழையின் ராஜ்யம்) என்னும் நாடகத்தை

1928 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். அக்கால கட்டத்தில் கட்கரியின் சிறந்த நாடகங்களும், கோல்ஹட்கரின் மொழி நடையும் மராட்டிய இலக்கிய உலகில் பெரிதும் போற்றப் பட்டன. இவர்களே வி.ஸ. காண்டேகரின் இலக்கிய முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

காண்டேகர் கிராமத்தையும் அங்கு வாழும் ஏழை எளிய மக்களையும் ஆசிரியர் தொழிலையும் நேசித்து அதன்படி வாழ்ந்து வந்த அனுபவத்தை ஹிருதயசீ ஹாக' (இதயக்குரல்) கதையின் கதாநாயகனான சுதாகரனிடம் காணலாம். இந்தக் கதையின் கதாநாயகன் சுதாகரன் கிராமத்தைச் செழிப்பாக்க வேண்டும், கிராம மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்ட வேண்டும்' என்ற எண்ணத்துடன் ஒரு கிராமத்திற்கு ஆசிரியராகச் செல்கிறான். அங்கே சுதா என்ற விதவையைக் காதலிக்கிறான். அதற்காகப் பல துன்பங்களையும் சமூகத்தின் எதிர்ப்புகளையும் துணிவாக எதிர் கொள்கிறான். தொன்று தொட்டு வரும் பண்டை மரபு, பழக்க வழக்கம், நம்பிக்கைகள் என்ற போக்கினைக் கண்மூடிக்கொண்டு பின்பற்றிச் செல்லாமல், மனித மனங்களிடையே விரிசல்களை, சிக்கல்களை உருவாக்கும் எதனையும் களைய முற்படவேண்டும் என்ற முற்போக்குச் சிந்தனையுடன் தமது முதல் நாவலைக் காண்டேகர் வெளிக் கொணர்ந்துள்ளார். 'நமது சிந்தனையிலும் புத்தகத்திலும் பெண் என்பவள் தெய்வம்; ஆனால் நடைமுறையிலோ அவள் அடிமை வீட்டில் வளர்க்கபெறும் மிருகம். இந்த நிலையிலிருந்து பெண்கள் தங்களை மீட்டுக்கொள்ள வேண்டும்'[4] என்று இக்கதையின் மூலம் உணர்த்துகிறார்.

பொதுவாகக் காண்டேகரின் நாவல்களில் சமூகப்பற்றுள்ள பள்ளியாசிரியர், அல்லது கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் இடம் பெறுவதைக் காணலாம். சமூகசேவை என்பது அன்பின் பரந்த உருவம், தன் வீட்டினிடம் அன்பு செலுத்த முடியாதவன், தன் மனிதர்களிடம் அன்பு செலுத்த முடியாதவன் சமூகத்தினிடம்

4. காண்டேகர் மணிமொழிகள், அன்புப் பழம் நீ, பாரி நிலையம், சென்னை, பதி. 1986 ப. 17

அன்பு செலுத்த முடியாது என்ற கருத்துடன் இப்பாத்திரப் படைப்புகள் உள்ளன. காண்டேகரின் 'உல்கா'(எரிநட்சத்திரம்), அஷ்ரு (கண்ணீர்), ரிகாமா தேவ்ஹார (வெறுங் கோயில்), கிரௌஞ்ச வத (கிரௌஞ்ச வதம்) ஆகியநாவல்களில்இலட்சிய நோக்குடைய ஆசிரியர் சிறந்த கதாபாத்திரமாக அமைகிறார். 'ரிகாமா தேவ்ஹாரா' என்ற நாவலில் 'டாக்டர் அதிகமாகப் போனால் உடலில் உள்ள நோய்களைத்தான் தீர்க்கலாம், புரப சரோ இளைஞர் உலகத்தின் மனநோயைத் தீர்க்க முடியும் என்று, நினைத்துத் தான் புரொபசரானேன். ஆனால் அழகிய பழத்தைப் பார்த்து பறவை அதை மூக்கால் கொத்த, அது மர மாம்பழமாயிருந்து அதன் மூக்கு வலித்தால் எப்படி இருக்கும்? அப்படித் தான் ஆயிற்று என் நிலை[5] என்று ஆசிரியரின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் காண்டேகர்.

'உல்கா' வில் வாழ்க்கையில் ஏற்படும் துயரங்களின் மூலம் எது என்பதைக் கண்டறிய முயல்கிறார் காண்டேகர். பெண் களின் வாழ்க்கை முறை, சமூக உணர்வும், தியாக உணர்வும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் புரட்சியும் என்ற கோணங்க களில் கதை விளக்கப்பட்டுள்ளது. இந்தப் புதினம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. 'உல்கா' விற்குப் பிறகு 'தோன் த்ருவ' (இரு துருவங்கள்) என்ற நாவலில் கலைக்கும் வாழ்க்கைக்கும் எதிரானப் போக்கைச் சித்திரிக்கும் முறையில் 'அன்புதான் அனைத்துக்கும் அடிப்படையானது' என்பதைச் சித்திரிக்கிறார் காண்டேகர். ''சமூகத்தில் வேரூன்றிப் போன தீமைகளைக் காண்கிறார். மக்கள் அறியாமையிலிருந்து என்று விடுபடுகிறார் களோ அன்றுதான் சுதந்திரம் வரும் எனக் கூறுகிறார். கிராம மக்களின் கூக்குரல் அவரை அறிவுபூர்வமான புத்தக உலகினின்று விலகி, உண்மையான வாழ்க்கை நிலையை அறியச் செய்கிறது. சமூக ஏற்றத்தாழ்வை உணர்ந்தவர் காண்டேகர். காந்திஜியின் அஹிம்சைக் கொள்கை போதுமான தல்ல என்பது காண்டேகரின் கருத்து. குறிப்பாக வன்முறை

---

5. வெறுங்கோயில், வி ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அலமு நிலையம் வெளியீடு, சன. 1985, ப. 8.

ஏற்படும்போது அதைச் சரிசெய்ய அஹிம்சை போதுமானது அல்ல என்று கருதினார் "[6] காந்தியத்தில் ஈடுபட்டுப் படிப் படியாக மார்க்சியத்தை நோக்கிச் சென்ற சிந்தனைப் பாங்கைக் காண்டேகரின் நாவல்களில் காணமுடிகிறது.

பாண்டரே டக (வெண்முகில்) 1939ஆம் ஆண்டு வெளி வந்தது. இந்த நூலின் தலைப்பில் அந்தக் காலத்திய சமூகத்தின் எதிர்பார்ப்பையும் ஏமாற்றத்தையும் குறிப்பாக அமைத்திருப் பது இதன் தனிச்சிறப்பாகும். இரண்டாம் உலகப்போர் நடந்து வந்த காலத்தில் நடுத்தர வகுப்பினரின் ஏமாற்றத்தை இந்நாவல் பிரதிபலித்தது. "சாதகப் பறவைபோல எளி யோர், மேகத்தினின்று மழையை எதிர்பார்க்கிறார்கள். இந்த வெள்ளையான மேகத்திற்குப் பின் கடுமையான துன்பம் தரக் கூடிய மேகங்கள் உள்ளன. மனித குலத்திற்கு அமிர்தம் கொணர்ந்த கருடனைத் தவிர மற்ற எல்லோருக்கும் அந்த மேகங்களினால் துன்பமே"[7] என்பது இந்நாவலின் கருப் பொருள். காண்டேகரின் சில நாவல்களில் கதை முக்கியமாக இருக்கும் சில நாவல்களில் பாத்திரச் சித்திரஙகள் முக்கியமாக இருக்கும். இந்த நாவலில் இரண்டுமே நன்றாக இணைந்தி ருக்கின்றன. தமக்கு அழியாப் புகழைத் தந்த உருவகக் கதை களை நாவலில் சேர்க்கும் முறையையும் ஆசிரியர் இதில் கலந்தி ருக்கிறார். அவருடைய இலக்கியப் பண்புகள் பலவும் கனிந்து உருவானது என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது இந்த நாவல்.

இதற்கு அடுத்து 'தோன்மனே' (இருமனம்) 'ஹிர்வ சாப்பா (மனோரஞ்சிதம்) ஆகிய இருநாவல்களும் 1938இல் வெளிவந்துள்ளன இவை பிராய்டின் உளவியல் பார்வையின் மூலம் யதார்த்தமான நட்பின் எதிர்காலத்தைப் பற்றிக் கூறு

---

6. V. S. Khandekar, M.D. Hatkanagalkar, Sahitya Akademi, 1986, p. 21.

7. வெண்முகில், வி. ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு 1985 ப.1

கின்றன. மனிதனின் வெளித்தோற்றமும் நடத்தையும் அவன் உள்மனத்தினின்றும் வேறுபட்டுள்ளன. வெளியுலக சமூதாய உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டு உணர்ச்சிகளை நிலையான மனப்பாங்கு இல்லாமல் கட்டுப்படுத்தும் மனிதனைப் பற்றி எண்ணுகிறேன் என்ற காண்டேகரின் கருத்து இவ்விரு நாவல்களுக்கும் பொருந்தும். சான்றாக 'மனோரஞ்சிதம்' என்ற நாவலில் ரஞ்சிதம் உயர்கல்வி பயின்று டாக்டராகி, பாரிஸ்டரான விஜயனுடன் பழகுகிறாள். அவள் அவனிடம் ஈடுபடுகிறாளே தவிர மையல் கொள்ளவில்லை. ரஞ்சிதம் இலட்சியவாதியாக, தியாகியாக, விளங்கிய ஒரு வேலைக்காரியின் மகனான ஏழை முகுந்தனைப் பெரிதும் விரும்பி அவனிடம் காதல் கொள்கிறாள். அவன் கல்லூரியில் பயிலும்பொழுது மாந்தரின் வாழ்க்கையை ஊன்றி கவனித்தான். அதனால் கல்லூரிப் பாடப் புத்தகங்களிலிருந்து தனது கவனத்தைத் திருப்பி சமூகத்தில் நடக்கின்ற அநீதிகளைக் களைய தனது சுக வாழ்வை வெறுத்தான். சமூக சீர்திருத்தத்துக்கும் நாட்டு விடுதலைக்கும் பாடுபடுகிறான். ரஞ்சிதமும் முகுந்தனுடன் அப்பணிகளில் பங்கேற்று அவனது வழியிலேயே செல்கிறாள் என்பது இந்நாவலின் கதையாக உள்ளது. ''கிறிஸ்துவின் பிறப்புக்கு முந்திய காலத்துப் புத்தகங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது சுத்த முட்டாள்தனம். நிகழ்காலம் என்பது ஓடுகிற ஆற்று வெள்ளத்தைப்போல, சென்ற காலமாகிய மலையிலிருந்துதான் அது உதித்தது என்றாலும் எதிர்காலமாகிய கடலை நோக்கித் தானே அது ஓட வேண்டும்.''[8] .'ஹிர்வசாப்பா' என்ற நாவல் சொல்லவந்த இந்தக் கருத்தை முகுந்தன் என்ற கதாபாத்திரத்தின் வழியாக இவ்வாக்கியங்களிலேயே பொதிந்து வைத்துவிடுகிறார் வி. ஸ. காண்டேகர்.

'ரிகாமா தேவ்ஹாரா' (வெறுங்கோயில்) வை முற்றிலும் ஒரு புதுமையான நாவலாகக் காண்டேகர் அமைத்திருக்கின்

---

8. மனோரஞ்சிதம், வி.ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு. சென்னை, டிச 1988, ப. 256.

றார். இந்தநாவலிலும் காண்டேகருக்குப் பிடித்தமான கல்லூரி ஆசிரியர் பாத்திரமாக அசோகன் சித்திரிக்கப் படுகிறார். அத்துடன் நாத்திகக் கொள்கையைப் பின்பற்றுபவராக, சமுதாயக் குறைபாடுகளைக் களைய முற்படுபவராக, ஆசிரமங்களில் நடக்கும் சில முறைகேடுகளைக் கண்டிப்பவராக, தியாகத் தன்மை பொருந்திய ஒரு சிறந்த மனிதனாக அசோகன் பாத்திரம் இந்நாவலில் அமைகிறது. அவர் எழுதிய தேவதா (கடவுள்) என்ற திரைக்கதையை மூலமாகக் கொண்டது இந் நாவல்.

ஸீகாசா சோத (சுகம் எங்கே?), பஹிலே ப்ரேம (முதற் காதல்), ஜளலேலா மோஹர் (கருகிய மொட்டு) ஆகிய நாவல் களில் மனித வாழ்வின் பல்வேறு வகையான சிக்கல்களை, மன உளைச்சல்களை, பாதிப்புக்களை அருமையாக வடித்துக் காட்டுகிறார்.

சூழ்நிலைக் கைதியாக வாழும் பெண்ணின் மனத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது, ஸீகாசா சோ தநாவல், காதல் தோல்வியடைந்த உள்ளம் எவ்வாறு துன்பத்தில் உழலும் என்பது 'பஹிலே பிரேம' என்ற நாவலின் கதைக்கரு. 'நாம் முதற்காதல் என்று கூறும் பொருள் உண்மையான காதலினின் றும் பெரிதும் வேறுபட்டது சௌந்தரியமே முதற்காதலின் உயிர் [9] என்று காண்டேகர் இந்நாவலின் முன்னுரையில் குறிப் பிடுகிறார். இளம் வயதில் ஆண் பெண் இருவர் ஒருவரை யொருவர் விரும்பி எந்தக் காரணத்தாலோ பிரிந்தால் அவர்கள் உயிர் போகும் வரை அந்தக் காதல்-அதன் நினைவு-உள்ளத்தை விட்டு பிரிந்து அகலாது. பிறகு இருவரும் வாழ்க்கையில் பிரிந்து வேறு மனிதர்களை மணம் புரிந்து கொண்டு இன்ப மாகக் கூட வாழலாம். மன உறுத்தல் இல்லாமல் வாழலாம். ஆனால் முதன் முதலாக உள்ளத்தில் நிலைத்த காதல் அணை யாது. அதை வேரறுத்துக் களைய முடியாது என்ற வாழ் வியல் உண்மையைக் கூறுவது இந்நாவலின் நோக்கமாகும்.

---

9. புயலும் படகும், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, கலைமகள் காரியாலய வெளியீடு 1940, ப.2.

ஜளலேலா மோஹர் (கருகிய மொட்டு) என்ற நாவலில் காண்டேகர் தாம் சந்தித்த நண்பர்கள், வாசகர்களின் அனுபவங்கள் பற்றிப் பேசுகிறார். "இயல்பாகவே இந்த நாவலில் என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் என் நண்பர்கள், என் நடவடிக்கைகள் முதலிய விஷயங்களைப் பற்றியும் அடிக்கடி குறிப்பிடுவது இன்றியமையாததாயிற்று"[10] என இந்நாவலின் முன்னுரையில் காண்டேகர் குறிப்பிட்டுள்ளார். ஏராளமான வாசகர்கள் தங்களுடைய அனுபவங்களை, கடிதங்கள் மூலமாக, காண்டேகருடன் பகிர்ந்து கொண்டனர். 'கடிதம் எழுதியவர்களில் ஒவ்வொருவரும் கடைசியில் ஒரு வாக்கியத்தை மட்டும் எழுத மறக்கவே இல்லை. 'இந்தக் கடிதத்தைப் படித்தவுடனே கிழித்துப் போட்டுவிடுங்கள்'[11] எனக் குறிப்பிட்டிருந்தனர். அந்தக் கடிதங்கள் யாவும் ஒவ்வொருவரின் துன்பத்தை வெளிப்படுத்தின. அந்தக் கடிதங்களை காண்டேகர் கிழித்துப் போடும் பொழுது கடிதம் எழுதியவர்களின் துன்பத்தை விட மிகப் பெரிய துன்பத்திற்கு ஆளானார். அவருடைய படைப்புகளில் கதாபாத்திரங்களை இயல்பான உரையாடல்களுடன், நிகழ்ச்சிகளுடன் அமைக்க இக்கடிதங்கள் உதவின.

'கிரௌஞ்ச வத' என்ற நாவல் 1942-ஆம் ஆண்டில் வெளிவந்தது இது வாசகர்களின் பெரும் பாராட்டைப் பெற்ற நாவல். 'செயல்தான் மனிதனுடைய முன்னேற்றத்துக்கு உதவ முடியும். இந்த வடிவம் வாயினாலோ கண்ணாலோ பேசாது அது எப்போதும் கையினால் பேசும். தன் இரத்தத்தைப் பாய்ச்சிப் பிறருடைய வாழ்க்கையை அது மலர வைக்கும். சொல் கண்ணீர், இரத்தம் மூன்றும் பிறக்கும் இடம் ஒன்றுதான், ஆனால் அவற்றின் உலகங்கள் மாறுபட்டிருக்கின்றன என்பதை விளக்குகிறது இந்த நாவல்[12] மராட்டியத்தில் தோன்றிய வேறு

---

10 கருகிய மொட்டு, வி. ஸ காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, பாரதி பதிப்பகம், 1985, ப.2.

11 மேற்படி, ப. II

12 கிரௌஞ்சவதம், வி.ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, கலைமகள் காரியாலயம், சென்னை .1971, ப.1

பட்ட கொள்கைகளை, சிந்தனைகளை பிரதிபலிக்கும் வகையில் கையாளப் பெற்றது. பிறருக்காக வாழ்பவனே மனிதன் என்ற அடிப்படைக் கருத்து இந்நாவலில் எடுத்துரைக்கப் பெற்றது.

காண்டேகரின் கதாபாத்திரப் படைப்புகளுள் தினகரன் என்ற பாத்திரப்படைப்பு அனைவரின் மனத்தையும் கவரும் வகையில் அமைதுள்ளது தனிச் சிறப்பாகும். ஏறத்தாழ இந்தக் கதாபாத்திரம் போன்றே அஷ்ரு (கண்ணீர்) என்ற அடுத்து வந்த நாவலின் கதாநாயகன் சங்கரன் என்ற பாத்திரப் படைப் பையும் காண்டேகர் வழங்கியுள்ளார். பொதுவாக நடுத்தர மக்கள் பின்பற்றிவரும் பழைய மரபுகளுக்கும், அதையொட்டி வரும் பழக்கவழக்கங்களுக்கும் வளர்ந்து வரும் பொருளாதார நிலைகளுக்குமிடையே சிக்கித்தவிக்கின்ற மிகவும் முக்கியமான ஒரு சிக்கலைக் காண்டேகர் முன்வைத்துள்ளார்.

இதற்கு அடுத்து 1964 ஆம் ஆண்டு 'யயாதி' என்ற ஒரு புராணக்கதை நவீனக் கருத்துடன் வெளிவந்துள்ளது. இது காண்டேகரின் நாவல்களில் தனித்துவம் வாய்ந்தது. இச்சையை விரும்பும் யயாதி மகாபாரதத்தில் இல்லை; பிற்காலத்தில் அப்படி ஒரு கருத்துச் சேர்க்கப்பட்டது. அதை அப்படியே காண்டேகர் தமது புதினத்தில் கையாண்டார்.

'யயாதி' சாகித்ய அகாதெமிப் பரிசு பெற்ற உயர்ந்த நாவல். காண்டேகரின் இந்நாவல் தொன்மையான கதையை மையமாகக் கொண்டதாயினும் வாழ்வில் என்றும் நிலையாக உள்ள தத்துவங்களைக் கொண்டு புனைந்த அற்புதக் காவிய மென பெருமை பெற்றது. மனிதன் மேலும் மேலும் இன்பத் தைத் தேடி அலைகிறான். அவனுடைய இன்ப நாட்டம் அளவிலாதது. எவ்வளவு இன்பத்தை நுகர்ந்தாலும் அவன் மனநிறைவு கொள்வதில்லை. மனிதனுடைய இத்தகைய வேட்கைக்கு அடையாளமாக இருப்பவன் யயாதி. ''யயாதி யின் வேட்கைக் கதை, தேவயானியின் குடும்பக் கதை. சர்மிஷ்டையின் அன்புக் கதை, கசனுடைய பக்திக் கதை

ஆகிய நான்கினையும் பொற்கம்பங்களாக அமைத்து இந்த மணிமண்டபத்தைக் காண்டேகர் நிறுவியிருக்கிறார்''[13]

யயாதிக்குப் பிறகு அமிர்தவேல் (அமுதக்கொடி) 1967ஆம் ஆண்டு வெளிவந்தது. ''சிதைந்த கனவின் துணுக்குகளைத் தழுவிக் கொண்டு சோர்ந்து கிடப்பதற்காக மனிதன் பிறக்க வில்லை. வெறுமே 'கடந்த காலம்' என்ற இரும்புச் சங்கிலி கொண்டு மனத்தை இறுகக்கட்டி வைக்க முடியாது. வருங் காலம் என்ற கருடச் சிறகும் மனத்துக்குப் பெருவரமாகக் கிடைத்திருக்கிறது. கனவு ஒன்று காண்பது; அதை மலர்விப் பது; நடைமுறையில் அதை உண்மையாகக் கொண்டுவரப் பாடுபடுவது; அப்படிப் படுகிறபாட்டில் ஆனந்தத்தைக் கொள்ளை கொள்வது; இந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக அந்த கனவு சிதைந்து அழிந்தாலும் சிறிதும் சோர்வுறாமல் அந்தக் கனவுத் துண்டுகளின்மீது இரத்தம் தோய்ந்த காலால் நடந்து, வேறொரு கனவை நோக்கி ஓடுவது—இதுதான் மாந்தரின் மனப் பண்பு. வாழ்வுக்குப் பயன் உண்டு என் கிறோமே அது இதனால்தான்''[14] என்று காண்டேகர் இந் நாவலில் வெளிப்படுத்துகிறார். நந்தா, வசுந்தரா, தேவதத்தன் என்ற மூன்று கதாபாத்திரங்களின் எதிர்பார்ப்புகளும், ஏமாற் றங்களும் மிகவும் நுணுக்கமாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

முதற் காதலின்போது மனிதன் தன் மனத்தை ஒரு கண்ணாடிப் பாத்திரமாகக் கருதுகிறான். ஆகையால் எதிர் பாராத தோல்வியினால் மனம் உடைந்துவிட்டால் தனது வாழ்க்கையே முடிந்து போய்விட்டது என்று அவன் நினைக் கிறான். ஆனால் மனிதனுடைய மனம் கண்ணாடிப் பாத்திர மன்று; வெள்ளிப் பாத்திரம். தவறிப் போய் விழுந்தால் அது

---

13. யயாதி, வி. ஸ. காண்டேகர், (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. மங்கள நூலகம். 1968, ப. 26.

14. அமுதக் கொடி, வி.ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, ப. 4.

நசுங்குமே தவிர, உடைந்துபோய் சுக்கலாகிவிடாது என்ற கருத்தை 'அமுதக்கொடி' எனும் இந்நாவல் எடுத்துரைக்கிறது.

காண்டேகர் இறுதியாக எழுதிய 'சோனேரீரி ஸ்வப்ன' (தங்கக் கனவுகள்) என்ற நாவல் முற்றுப் பெறவில்லை. பொதுவாக காண்டேகரின் எழுத்துகள், வாழ்க்கை என்ற ஓடத்தில் மனிதனுக்குச் சுயநலமற்ற அன்பு தேவை, அப்படிப்பட்ட சுயநலமற்ற அன்பைப் பெறுவது கடினம். அந்த அன்பு அழிவற்றது. அது மனிதனை எப்பொழுதும் உயிரோடு வைத்திருக்கும் என்பதை வலியுறுத்துகின்றன.

### காண்டேகரின் சிறுகதைகள்

மராட்டிய இலக்கியத்தின் மிகப்பெரிய வளர்ச்சிக்குக் களமாக அமைந்தன காண்டேகரின் சிறுகதைகள். புதிய மராட்டிய இலக்கியம் வளரத் தொடங்கிய காலத்தில் (1920) பத்திரிகைகளில் மேலைநாட்டு எழுத்தாளர்களான பிரெஞ்சு நாவலாசிரியர் மாபசான், ரஷ்ய எழுத்தாளர் செக்காவ்போன்றோரின் சிறுகதைகள் மராட்டி மொழியில் இடம்பெற்று வந்தன. அக்காலகட்டத்தில் ஹரிநாராயண ஆப்டேயின் கதைகள் பலவெளியாயின. எனினும் அவை சிறுகதை என்ற வரம்புக்கு உட்பட்டிருக்க வில்லை என்ற கருத்து கூறப்படுகிறது. ஏனெனில் சிறுகதைகளுக்கே உரித்தான விதிமுறைகள் அவற்றில் இல்லை. அவை நாவல்கள் போல் அமைந்திருந்தன. அனுபவத்தைக் கூறவில்லை. ஆனால் நீதி போதித்தன, 'கரமணூக்' என்ற பத்திரிகையில் ஹரிபாலூவும், 'மனோரஞ்சன், என்ற பத்திரிகையில் குர்ஜரும் மராட்டிய வாசகர்களுக்குப் பல கதைகளை வழங்கினர்.

மராட்டிய சிறுகதை வரலாற்றில் திவாகர் கிருஷ்ண (Diwakar Krishna), மாஞ்ஜ்ரேக்கர் (Manjrekor), கமலாபாய் திலக் (Kamalabai Tilak), சோர்கடே (chorgode), குஸுமாவதி தேஷ்பாண்டே (Kushmavati Deshpande) ஆகியோரின் படைப்புப் பணி குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய சிறுகதைகள் மராட்டிய வாசகர்களிடம் அறிமுகமான நிலையில் காண்டேகரின் சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. ஆசிரியரின் கவித்

கோஷ்டீ (தத்துமகன் முதலிய கதைகள்), தவி பிந்தூ (பனித் துளி), நவ சந்த்ரிகா (புதுநிலவு), பூஜன் (வழிபாடு), பாகள்யா (மலரிதழ்கள்), ஸமாதீவரில் புலே) சமாதி மலர்கள்), ஹஸ்தாசா பாவூஸ் (ஹஸ்தநட்சத்திர மழை), ஸூர்ய கமளே (சூரியகாந்தி மலர்கள்), ஊன் பாவூஸ் (வெயில் மழை), கல் சர்ட் மோதீ (செயற்கை முத்து), அஜஸூ ஸ்வப்னே (இன் றைக் கனவுகள்), கரட்யா பாஹேர் (கூட்டுக்கு வெளியே), நவா ப்ராதஹ்கால (புதிய விடிவு) பஹில்யா வஹில்யா (முதல் வேகம்), பஹிலீ லாட (முதல் அலை), புலே ஆணி தகட (மலரும் கல்லும்) ஸ்திரீ ஆணி புருஷ (ஆணும் பெண்ணும்), சந்தேரீ ஸ்வப்னே (நிலவுக் கனவுகள்), ஸாஞ்ஜ—வாத (மாலை விளக்கு), அஷ்ரு ஆணி ஹர்ஸ்ய (கண்ணீரும் சிரிப்பும்), ப்ரீதீசா சோத (காதலைத்தேடி) ப்ரஸாத (அருள்), முரலீ (வேய்ங்குழல்). உச்—சாப (சாப விலக்கு), டகா ஆட்சே சாந்தனே (முகிலின் பின் நிலவு) ஆகியன காண்டேகரின் சிறு கதைத் தொகுதிகளாகும். இவை அனைத்தும் நவீன காலத் தின் சமூக அமைப்பு, சூழ்நிலை, குழப்பமான எண்ணப்போக்கு கள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் சிறுகதைகளாகும், சமூக ஆய் வுக்களங்களாகவும் இவை அமைந்துள்ளன. சான்றாகச் சுய நலம் என்ற கூட்டிலிருந்து விடுபட்டு ஒவ்வொருவரும் வெளியே வரவேண்டும் என்பது கரட்யா பாஹேர் (கூட்டுக்கு வெளியே) என்ற கதை மூலம் உணர்த்தப்படுகிறது. பெரிய பண்டிதரின் மனைவி பேரறிவு மிக்கவளாக இல்லையெனினும் பெண் என்ற நிலையில் மனித உணர்வுகளை எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டிருக்கிறாள் என்பதைப் பூஜன் (வழிபாடு) சித்திரிக் கிறது.

இக்கதைகள் யாவும் படிப்பவர்க்குத் தாங்கள் நேரடியாக வாழ்க்கையில் சந்திக்கின்ற பிரச்சினைகளாகத் தென்பட்டன. இவை மனத்தில் ஆழமாகப் பதியும் கதாபாத்திரங்களாக உரு வாக்கப் பட்டிருநததால் படிப்பவர் மனத்தை ஊடுருவிச் சென்றன, சிந்திக்கத் தூண்டின. மகிழ்வூட்டின. மராட்டிய சிறு கதை வளர்ச்சியில் பெரும்மாற்றத்தை காண்டேகரின் படைப்பு கள் ஏற்படுத்தின என்பதுடன் இந்திய இலக்கியப் போக்கிலும் புதிய மாற்றம் ஏற்பட உறுதுணையாய் அமைந்தன.

# காண்டேகரின் கொள்கைகளும் சொல்லி வைத்த முறைகளும்

காண்டேகர் இம்மனித சமூக நடப்புகளைப் பற்றி அறிவார்ந்த கொள்கைகளை உடையவராகத் திகழ்ந்தார். இக்கொள்கைகளை எடுத்துக்காட்டும் வகையிலான கதை மாந்தர்களைத் தனது கதைகளின் மூலம் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். இதனால் பல்வேறு கருத்தோட்டங்கள், உவமை நயங்கள் அறிமுகமாயின.

காண்டேகர் தமது நூல்களுக்குத் தரும் முன்னுரை முக்கியத்துவம் வாய்ந்தவை 'ஒரு நூலே ஆசிரியரின் உள்ளத்தின் வெளிப்பாடு என்று சொல்வதும் உண்டு. அந்த வகையில் தன்னுடைய உள்ளம் எவ்வாறு நூலில் வெளிப்படுத்தபடுகிறது என்று ஆசிரியரே கணக்குப் போட்டு பார்த்துக் கூறும் வழக்கம் உண்டு. வெளியாகும் நூல் தொடர்பான உள்ளத்தை நெகிழ வைக்கும் சம்பவங்கள் முன்னுரையில் எழுதப்படுவதும் உண்டு. 'ஆகையால் ஒரு படைப்பின் முக்கியத்துவத்தைப் படைப்பாளன் எடுத்துக் கூறும்பொழுதுவாசகர்களின் புரிதல் உணர்வு மேலும் பெருக வாய்ப்புண்டு. ஜளலேலா மோஹர் (கருகிய மொட்டு) என்ற நூலின் முன்னுரையில், ''கீதையிலுள்ள ஒரு சுலோகத்துக்கு நூற்றுக்கணக்கான அர்த்தங்கள் கண்டுபிடிக்கத் தலைமுறை தலைமுறையாக முயன்று வருகிற நம்முடைய புத்தி சாலித் தனத்துக்குச் சமூகத்திலுள்ள தாழ்ந்த வகுப்பினர் நூற்றாண்டுக் கணக்காக எப்படி வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஆராயவேண்டும் என்ற அவசியம் தோன்றவில்லை[17] என்று இந்தச் சமூகத்தைப் பற்றிய தனது கோபத்தை வெளியிட்டியிருக்கிறார். தான் எந்த சிந்தனையை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாவலை எழுதகிறேன் என்பதை காண்டேகர் முன்னுரையில் வாசகர்களுக்குத் தெளிவுபடுத்தி விடுகிறார்

---

17 கருகிய மொட்டு, வ.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அலமு நிலையம் வெளியீடு,பதி. மார்ச் 1985 ப. X-XI

சமுதாய நடவடிக்கைகளோடு, தனிமனிதன் தொடர்புடையவன் என்ற சிந்தனை காண்டேகரின் படைப்புகளில் நூலிழை போன்று பின்னிப் பிணைந்துள்ளது. சான்றாக கிரௌஞ்சவதம் எனும் புதினத்தில், பின் வரும் காட்சி இடம் பெறுகிறது.

''1930-32 ஆம் ஆண்டுகளுக்கிடையே சட்ட மறுப்பு இயக்கம் நடந்தபோது யாராவது தலைவர் கைதானால் மாணவர் இப்படித்தான் வெளியே நின்று அமர்க்களம் செய்வார்கள். வகுப்பெல்லாம் வெறிச்சென்று இருக்கும். அந்தக் காலத்திலே கும்மாளம் அடித்த மாணவர்களை நோக்கித் தாமே சொன்ன ஒரு வார்த்தை இப்போது ஞாபகம் வந்தது. ''கல்லூரி என்பது கலைமகளின் கோயில், இது சந்தைக் கடை அல்ல'' என்று பேராசிரியர் அப்பண்ணா) சொன்னார்.

மாணவர்களின் சார்பில் தினகரன் இதற்குக் கூறிய மறுமொழியும் அவருக்கு ஞாபகம் வந்தது. சந்தைக் கடை கூடினால் எல்லா மக்களுக்கும் உணவு கிடைக்கும். கோயிலிலோ பூசாரிக்கு மட்டுமே நைவேத்தியம் கிடைக்கிறது. மீதிப்பேர் பட்டினி கிடக்க வேண்டியதுதான் என்று அவன் காரசாரமாகப் பேசினான்''[18]

பேராசிரியர் அப்பண்ணா, தினகரன் என்ற பாத்திரப் படைப்புக்கள் வழியாக மானுட அன்பைப் போற்றும் பொது உடைமைச் சிந்தனை, நாத்திகவாதம், தியாக உணர்வு, பெருந்தன்மை ஆகிய பண்பு நலன்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. பெரும்பாலும் இத்தகையப் போக்குகளை உணர்த்தும் பாத்திரப்படைப்புகளைப் புதினங்களிலும் சிறுகதைகளிலும் காண்டேகர் அமைத்து வழங்கியுள்ளார். அவர் நாத்திகக் கொள்கைகளை ஆதரிப்பவராக இருந்துள்ளார். 'இறைவன்' 'தெய்வமும் கோயிலும்,' 'திருட்டு தெய்வம்' 'கூழாங்கல்,' 'பூமி எப்படித் தணிந்தது' ஆகிய சிறுகதைகள் தெய்வக் கோட்பாட்டை நாத்திகவாத நோக்கில் ஆய்ந்தறியத் தக்கனவாக உள்ளன. சமூக சீர்திருத்தவாதியாக ஒரு கதாபாத்திரத்தை

18. கிரௌஞ்சவதம், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. கலைமகள் காரியாலயம், சென்னை 1971 ப.26.

அமைப்பது காண்டேகரின் தனிப்பாங்கு. அப்பண்ணா, தினகரன் சுலோசனா, (கிரௌஞ்சவதம்), அசோகன் (வெறும் கோயில்) முகுந்தன் (மனோரஞ்சிதம்), சங்கரன் (கண்ணீர்) உஷா, ஆனந்தன் (சுகம் எங்கே?) நந்தா (அமுதக் கொடி) ஆகிய சுதா பாத்திரங்கள் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

காண்டேகருக்குப் பெண்கள் சமூகத்தின் மீது தணியாத அக்கறை இருந்தது. நடுத்தர மராட்டியக் குடும்பத்தினரின் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்திரிப்பதில் குறிப்பாக மராட்டியப் பெண்களின் வாழ்க்கை முறையைச் சித்திரித்துக் காட்டுவதில் காண்டேகர் நிகரற்றவர். இவர் படைத்துக் காட்டும் பெண்கள், மராட்டிய மண்ணில் மட்டுமல்ல ஏறத்தாழ இந்தியா முழுவதிலுமுள்ள பெண்களின் நிலையைப் பிரதிபலிப்பதாக அமைகின்றனர். பெண்களின் அப்பாவித் தனம், உள்ளக்கிடக்கை, அவர்களுக்கு நேரும் துன்பங்கள் போன்றவற்றைத் தெளிவாக வெளிக் கொணர்ந்தார். பெண் என்பவள் சுகமளிப்பவள் மட்டுமல்ல, அவள்தான் உள்ளக்கிடைக்கையின் பலம். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் அழுத்தமாகக் கூறும் ஒரு தத்துவம் தன் குழந்தைகளுக்காகவே உயிர் வாழ்பவள் என்பதை, 'சந்திரகோர்' (சந்திரப்பிறை), 'ஆய்' (தாய்) 'ஜஞ்சாவாத்' (கடும்புயல்), 'பாஹலீ'(விளையாட்டுப் பொம்மை) ஆகிய கதைகள் மூலம் உணர்த்தியுள்ளார். திருமணமாகாத பெண்களின் நிலை காய்ந்துபோன நிலத்திற்கு ஒப்பானது; அவர்களுக்கு வாழ்க்கையில் பிற நிலைகளில்வெற்றியும் புற இன்பங்களும் கிடைக்கலாம் என்பதை 'பர்தா'(திரை) என்ற கதை வாயிலாக உணர்த்துகிறார். வாழ்வில் பெண்கள் படும் துன்பங்களை, துயரங்களை இயல்பாக எடுத்துக்காட்டுவது காண்டேகருக்கு கை வந்த கலையாகும். 'உல்கர்,' தோன் துருவ' ஹிர்வாசப்பா, ஸீகாசாசோத, பாண்டரே டக, அமிருத் வேல், ஜளலேலா மோஹர் ஆகிய நாவல்களில் வரும் பெண் பாத்திரங்கள் வாசகர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளன. இதைப் போன்றே சிறுகதைகளில் இடம் பெறுகின்ற பெண் கதை மாந்தர்கள் படிக்கும் வாசகர்களிடம் மனம்திறந்து பேசுவதுபோல வழங்கியுள்ளார். 'ஆண் மணம்' என்ற சிறு

கதையில் ஒரு பெண் எப்பொழுதும் ஆணையே சார்ந்து வாழ்ந்து தீர வேண்டியுள்ளது. இறுதியில் அவள் எல்லோரா லும் கைவிடப்படுகிறாள். சிறுவயது முதல் வழிபட்டு வரும் இராமன் கூட ஆண் கடவுள்தானே! அது கூட நம்மைக் காப் பாற்ற முடியாது என்று அந்த பெண்மணி வயதான நிலையில் முடிவுக்கு வருகிறாள்.படிக்கும் வாசகர் பெண்ணாக இருந்தால் அவர் இக்கருத்தைப்பற்றி சித்திக்கத் தொடங்கிவிடுவார்.

எண்ணிறந்த படைப்புக்களில் காலங்காகமாகச் சொல்லப் பட்டு வருவது காதல் காலமும், சமூக நிலையும் மாறும் பொழுது காதலுக்குரிய பிரச்சினைகளையும், கொள்கை களையும் பரிசீலிக்கவேண்டியது கட்டாயம் என்பது காண்டே கரின் கருத்து. ''சமூகத்தையே குலுக்கி, அதனுடைய மாபெரும் உள்ளத்தில் பெரிய சிந்தனை அலைகளை எழுப்புவதுதான் முட்டுக்கட்டைகளை உடைப்பதற்கு முதல் படி.'' [19] எனவே பெண்மை காதல் என்ற இரண்டையும் பற்றிப் பேசும்பொழுது பண்பாடு என்ற பெயரில் நடைமுறையில் இருந்து வரும் மரபுவழியான கொள்கைகளை மறுக்கிறார்.

''கண்டதும் கவர்ச்சி அடைவதுதான் காதலா? அல்லது கவர்ச்சி அடைந்த பின்பும் பரிட்சைகள் செய்து பார்க்க வேண்டுமா? காம உணர்ச்சிக்குக் கண் கிடையாது என்பார் கள்; காதலையும் அப்படிச் சொல்வது சரியா? அவதூறா? ஆணின் காதலுக்கும் பெண்ணின் காதலுக்கும் பேதங்கள் உண்டா? அல்லது, இதிலும் அவர்கள் 'சரிநிகர் சமான'மாகத் தான் இருக்கிறார்களா? காதல் அந்தகாரமா, ஒளியா? மனிதர் கள் தங்கள் காதலை—காதல்களை எப்படியெல்லாம் போர்த்தி மூடிவைக்கிறார்கள்? காதலுக்கு அடிப்படை சௌந்தரியமா, குணமா, குலமா அல்லது எல்லாமுமா? காதலே இல்லாவிட் டால் வாழ்க்கை எப்படி இருக்கும்? இவ்வாறு காதலைப்பற்றி நாம் விடுவிக்க வேண்டிய புதிர்கள், தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாக உண்டு. காண்டேகர்

19. இருதுருவங்கள், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, டிச 1989.ப .6.

இவற்றை அலசி உண்மையைக் காட்டுகிறார். பொதுவாகக் காதலின் அடிப்படையான அம்சத்தைக் குறிப்பிட்டு, அதன் பல சாயைகளை பல வண்ணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார் டி.எச்.லாரன்ஸ். அவர், 'காதல் கற்றுத்தேற வேண்டிய விஷயம்' என்கிறார். காண்டேகரும் 'காதலைக் கற்க முடியும்' என்று நிரூபிக்கிறார். நாகரிகம் வளரவளர, நம் வாழ்க்கைச் சிக்கல்களும் வளர்ந்து வருகின்றன. வாழ்க்கையில் காதல் இல்லாவிட்டாலோ அது வறண்டுவிடுகிறது. காதல் துறையில் ஏற்படும் சிக்கல்களை விடுவிப்பதும் மிகவும் சிரமமான காரியம். ஏனெனில் காதல் வெளிப்பார்வைக்குத் தனிப்பட்ட இருவரின் விஷயமாகத் தோன்றினாலும் அது சமூகம் முழுவதையுமே அளாவியதாக இருக்கிறது. இருவரிடையே காதல் ஏற்படுகிறது என்றால், இருவரும் ஒருவருக்கொருவர் கொடுக்கவும் கொள்ளவும் செய்கின்றனர். ஒருவருடைய தனிப் பண்பை மற்றவருடைய பண்போடு சமரசப் படுத்துகின்றனர். மிகப் பெரிய, மிக விரிவான காதலில் தனி மனிதர்கள், பல்லாயிரம் நுணுக்கமான முறைகளில் மனித சமூகத்தோடு ஐக்கியமாகும்பொழுது தங்கள் தனிப்பண்புகளை இழந்து விடாமலும் காத்துக் கொள்கின்றனர்.''[20] இவ்வாறு மனித வாழ்வின் மையப்புள்ளியாக உள்ள காதலைப் பற்றிப் பல்வேறு விதமான அனுபவங்களின் மூலம் வெவ்வேறு வகையான கருத்துகள் பெறப்பட்டன.

காதல் என்பதின் கருத்து நிலையையும், அதன் செயல் வடிவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது காண்டேகர் தன் கண் முன் காணும் உண்மை நிலையை, கதாபாத்திரங்கள் வாயிலாகப் பேச வைக்கிறார்.

''வாழ்நாள் முழுவதும் ஒரே ஆணிடம் கவர்ச்சிகொண்ட பெண் உலகத்தில் கிடைக்கமாட்டாள். அப்படியிருக்க ஒரே பெண்ணிடம் ஆசை கொண்ட ஆணைத் தேடுவது என்பது முயற்கொம்பைத் தேடுவது போல்தான் பல பேரிடம் கவர்ச்சி கொள்வது ஒன்றும் பாவமன்று இது இயற்கையின்

20. இருதுருவங்கள், வி. ஸ. காண்டேகர். (தமி) கா.ஸ்ரீ ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி, பதி. டிச. 1989. ப. 6.

வன்மை; சீர் திருத்தம் என்றால் இயற்கையையும் சமூகத்தையும் இன்பகரமாகப் பிணைக்க நாணயமாக முயல்வது என்று அர்த்தம்''[21] 'அமுதக்கொடி' என்ற நாவலில் நந்தா என்ற கதாபாத்திரத்தின் வழியாகக் கூறப்படும் இக்கருத்து வாசகர்களைச் சிந்தனையில் ஆழ்த்திவிடும்.

காண்டேகரின் பொருளாதாரக் கண்ணோட்டமும் வேறுபட்டதே. ''சாப்பிட அவசியமில்லாதவன் பசிக்காக ஒரு போதும் திருடமாட்டான். ஆனால் பசியினால் தவித்துக் கொண்டிருப்பவன் இந்தத் திருட்டுத் தொழில் தூய்மையானதா இல்லையா என்று தத்துவ ஆராய்ச்சி செய்துகொண்டிருக்க மாட்டான்''[22] என்று கூறுகிறார். ஏனெனில் வறுமையில் உழலும் மனிதர்கள் பல துண்டுகளான இந்தச் சமூகத்தின் தயாரிப்புகளே என்று காண்டேகர் கருதுகிறார்.

இத்தகைய மனவோட்டத்தை, கதாபாத்திரத்தின் மூலம் வாசகர்களுக்குப் பளிச்சென்று புரியவைப்பது காண்டேகரின் தனித்தன்மையாகும். ''அவன் பரபரவென்று நடந்தான். 'என் வீட்டு வாசலில் ரோஜா மலர்ந்ததடீ!' என்ற பாட்டின் இசை இலேசாக அவன் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. தம் வீட்டு வாசலில் ரோஜாவை மலர வைக்கும் இவர்களுக்கு அந்தப் பூக்களின் செந்நிறம் யாருடைய இரத்தத்தால் ஆகியது என்பதைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்றது அவன் மனம்.

ஆலைக்கு அருகிலிருந்து குப்பத்தில் நுழைந்து சென்றான். எல்லாம் சிறு மண் குடிசைகள், அவற்றுக்கு வாசல் ஏது? ஆகவே வாசலில் ரோஜா மலர்வதைப் பற்றிப் பேச்சே இல்லை''[23] என்ற சிந்தனையின் மூலம் கதாபாத்திரத்தின்

---

21. அமுதக்கொடி. வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி. 1978 ப. 86.
22. காண்டேகரின் மணிமொழிகள். அன்புப் பழம் நீ, பாரி நிலையம், சென்னை. பதி. 1986. ப. 19.
23. கூட்டுக்கு வெளியே, வி.ஸ. காண்டேகர், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அலமு நிலைய வெளியீடு, டிச. 1984 ப. 41—42.

முழுத்தன்மையையும் விளக்கிச் சொல்லி விடுகிறார் காண்டேகர்.

கருத்துக்களை வெறும் தத்துவங்களைப் போல் சொல்லாமல் சுவையான உவமைகளுடனும், கதைப்போக்குடனும் கலந்து குழைத்துத் தருவதால் வாசகர்கள் சலிப்பின்றி ஆவலுடன் படிக்கவும் சிந்திக்கவும் முடிகிறது.

''ரஞ்சிதத்தின் மனம் அந்தப் பூக்களோடு ஒன்றிவிட்டது. உலகத்தின் யந்திர நாகரிகத்தில் எத்தனை மனிதப்பூக்கள் இப்படி கூழாகின்றனவோ! உலகம் இப்படித்தான் நடக்குமோ! ஏழைகளுக்கு உதவவே அவள் டாக்டர் தொழில் செய்ய எண்ணியிருந்தாள். மலைகளைப் போலவே லட்சியங்களும் தொலைவிலிருந்து அழகாகத்தான் தென்படுகின்றன. நேற்று முகுந்தனுடைய தங்கை வீட்டில் அவள் பெற்ற அனுபவம், 'மாளிகையில் மெத்தையிலும், திண்டிலும் உருளுவதால் ஏழைகளின் துன்பத்தைக் குறைத்துவிட முடியுமா' தொழிலாளிகளுக்குச் செத்தபிறகுதான் ஓய்வு' என்ற முகுந்தன் சொல் பொய்யா? ஆயிரமாயிரம் மக்களை இப்படிக் கொல்லும் இந்த வறுமை நோய்க்கு என்ன மருந்து இருக்கிறது? ரஞ்சிதத்துக்குச் சிந்தனையே ஓடவில்லை. பணம், புகழ், காதல், எதிலும் இது வரைக்கும் அவள் ஈடுபட்டதில்லை. அதனால்தான் தன்னை அறியாமலே அவள் லட்சியத்தில் பற்றுக்கொண்டிருந்தாள்.[24] உவமை, தத்துவம், உலக இயல்பு, மனப்போராட்டம் எல்லாவற்றையும் சரியாக இணைத்தும், பிணைத்தும் தான் சொல்ல வந்த கருத்தைத் தனக்கென உரிய முறையில் வழங்குவதில் காண்டேகருக்கு நிகர் காண்டேகரே.

இவ்வாறு காண்டேகரின் பல்வேறு உத்திகள் வாசகர்களை மீண்டும் மீண்டும் அவரது படைப்புகளைத் தேடிச் சென்று படிக்க வைத்தன. வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது காண்டேகரின் உவமைகள்.

---

24. மனோரஞ்சிதம், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி, பதி. டிச 1988. ப. 107.

''நினைவுகளாகிய தேனீக்கள் அவனைக் கொட்டின''
(கருகிய மொட்டு ப. 56)

"காட்டுத்தீயிலே சிக்கிய மான்கூட்டம் போல அவனுடைய உள்ளம் பித்துப் பிடித்து இங்கு மங்கும் அலைந்தது".
(மனோரஞ்சிதம் - ப.188)

''தூண்டிவிட்ட பாம்பை போல் அவன் மனம் துடித்தது''
('ஓடும் ரெயிலிலே' ப. 9)

என்ற உவமைகளில், பாதிக்கப்பட்ட மனம் படுகின்ற அவதியைப் படம்பிடித்துக் காட்டிவிடுகிறார் காண்டேகர்.

இந்த இரவுகள் எல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தன. வாழ்க்கையில் புதிதாக வரும் இன்பமானாலும் சரி, துன்பமானாலும் சரி, நம்மைக் கலக்காமல் விடுவதில்லை. தீப்பெட்டியில் அடைத்து வைத்த பொன்வண்டு போல நம் மனம் தவிக்கிறது.''
(நள்ளிரவு—38)

''அந்தச் சாளரத்தின் வழியே தலையை நீட்டி அவன் வெளியே பார்த்தான். கார்காலத்துஅந்த நள்ளிரவில் வானம் எவ்வளவு தெளிவாக இருந்தது. தொட்டியிலிருந்து உற்றுப் பார்க்கும் குழந்தையின் கண்போல நிர்மலமாக இருந்தது.''
('நள்ளிரவு'—ப. 39)

என்று புதியமுறையில் மன உணர்வுகளை வெளிப்படுத்தினார் காண்டேகர்.

**காண்டேகரின் உருவக்கதை**

சமூகநிலை குறித்த பல சிக்கல்களையும், விடுவிக்க வேண்டிய முறைகளையும் விளக்க, உருவகக்கதை என்ற சிறிய இலக்கியவடிவை மராட்டியில் முதன்முதலில் படைத்தவர் காண்டேகர். இதற்குரிய இயல்புகளை, தனித்தன்மையை காண்டேகர் 'கலிகர்' (அரும்பு) என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். ''சின்னஞ்சிறு கதை என்று சொல்லப்படும் இலக்கிய உருவத்துக்கும் இதற்கும் இயல்பில் வேற்றுமை உண்டு.

சின்னஞ்சிறு கதையில் மிகவும் முக்கியமான அம்சம் அதன் ஆச்சரியகரமான முடிவு. அநேகமாக அந்தச் சமத்காரம் வெறும் அறிவுப்பயிற்சியோடு சரி? ஆனால் வெறும் அறிவுப் பயிற்சியினாலோ கற்பனைக் குவியிலினாலோ உருவக்கதையை நிறம்பெறச் செய்ய முடியாது. வேடிக்கைக் கதைகளைப் போலவே சின்னஞ்சிறு கதையும் பொழுதுபோக்குக்கு ஏற்ற தாக இருந்துவிட்டால் போதும். உருவகக்கதையிலோ பொழுது போக்கு மட்டும் அன்றி சிந்தனையையும் உணர்ச்சி யையும் தூண்டும் தன்மை கட்டாயம் இருக்கவேண்டும். இழை யும்படியான குறைந்த சொற்களைக் கொண்டு சூழ்நிலையை உண்டாக்கி தேர்ந்தெடுத்த அதிசயமான கற்பனைகளினால் அழகைத் தெளிவுப்படுத்தி, இவற்றோடு கூடவே சிந்தனையை யும் உணர்ச்சியையும் கலந்து உண்மையான வாழ்க்கையையும் வாழ்க்கை மதிப்புக்களையும் வாசகர்களுக்குத் தீவிரமாக உணர்த்தவல்ல இந்த உருவகக்கதை என்னும் இலக்கிய உருவம் காவியத்துக்கு சமமானது''[25] என்று உருவகக்கதையைப் பற் றிய தனது உயர்வான கருத்தை வெளியிட்டுள்ளார்.

காண்டேகரின் உருவகக்கதை உத்தியை விளக்கும் வகையில் சான்றாக ஒரு கதை இங்கு இடம்பெறுகிறது.

## ஆகாயமும் பூமியும்

''ஆகாயம் பூமியை எப்போதும் துச்சமாக மதிப்பது வழக்கம். அருணோதயத்தின் செம்மையைக் காண்பித்து இது காதலின் நிறம். உன்னிடம் இது எங்கே இருக்கப் போகிறது? என்று அது பூமியைக் கேட்கும்.

விதவிதமான வண்ணங்கள் கலந்த சாயங்கால மேகத்தைக் காண்பித்து இதோபார், என் விளையாட்டுப் பொம்மை. உன்னிடம் இப்படிப்பட்ட பொம்மை இருக்கிறதா? என்று கேட்கும்.

---

25 அரும்பு, வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. பாரதி பதிப்பகம் சென்னை பதி 1945. ப. XI

இரவில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் பற்றியோ அதற்கு மிகமிக கர்வம். உன் பூக்கள் இன்று மலர்ந்து நாளைக்கு வாடிப்போகின்றனவே! இதோ பார் என் பூக்களை! இவை யுகயுகமாக மலர்ந்தவாறே இருக்கின்றன என்று அது பூமியைப் பரிகாசம் செய்யும்.

பூமி சாது. ஆகாயம் என்பது வெறும் தோற்றம் என்று அதற்குத் தெரியாது. தென்படுவது போலத்தான் ஆகாயம் உண்மையில் இருக்கிறது என்பது அதன் நினைப்பு. தன்னிட மிருந்து நீரைக் கொள்ளையடித்து ஆகாயம் மேகங்களை உண்டாக்குவதையும், அவற்றைக் கொண்டு விளையாட்டுப் பொம்மைகள் ஆக்குவதையும் இந்தக் கடன் வாங்கிய நீரைத் திருப்பிக் கொடுக்கும் போது அது நன்றிகெட்டு வசைமொழி களைக் கடகடவென்று முழக்கி, மின்னலாகிய சாட்டையை வீசுவதையும் பூமி நினைத்துகூடப் பார்க்கவில்லை. ஆகாயம் தண்ணீர் கொடுத்துத் தனக்கு உபகாரம் செய்ததாகவே அது நினைத்தது.

சோம்பேறியும், சுகானுபவியும் நன்றி கெட்டதுமான ஆகாயத்தைக் கண்டு நட்சத்திரங்களுக்கெல்லாம் கோபம் வந் தது. அவை கோபத்தோடு. நிறநிறமான மேக உடைகளையும் அருணனாகிய கள்ளையும் தவிர்த்து இந்த ஆகாயத்துக்கு வேறு ஒன்றுமே தெரிவதில்லை. அந்தப் பூமியும் இருக்கிறது பாருங் கள்! வயிற்றில் நெருப்புப் பற்றிக் கொண்டு எரிந்தால்கூட ஆகாயத்துக்கு வேண்டிய மட்டும் தண்ணீர் கொடுக்கிறது. தன் இருதயத்தில் அடிபட்டால்கூடத் தன் முதுகிலுள்ள பிராணிகளை அன்னையைப்போல அன்போடு பராமரிக்கிறது. நீங்கள் அதனிடம் ஓர் இனிய பேச்சுப் பேசுங்கள். உடனே அது பதிலுக்கு நூறு இனிய சொற்களை உங்களிடம் பேசு கிறது. அப்படிப்பட்ட பூமியை விட்டு இந்த ஆகாயத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதால் பிரயோஜனம் என்ன? வாருங்கள் போவோம். இந்த ஆகாயத்தில் நட்சத்திரங்களாக இருப் பதை விட, பூமியில் போய்க் கற்களாக இருப்பது எவ்வளவு மேலானது'' என்றன.

ஒரு நட்சத்திரம் அறுந்தது. ஒரு நட்சத்திரம் விழுந்தது. மற்றொரு நட்சத்திரம் அறுந்தது; மற்றொரு நட்சத்திரம் விழுந்தது.

பரபரவென்று நட்சத்திரங்கள் கீழே விழுந்தன. பொடி சூர்ணமாகும்போது கூட அவை சிரித்துக்கொண்டே இருந்தன. நட்சத்திரங்கள் யாவும் விழுந்துவிடவே, ஆகாயத்தின் சௌந்தரியம் அழிந்தது. அதற்குப் பைத்தியம் பிடித்தது, அந்தப் பைத்திய வேகத்தில் அதுவும் கீழே குதித்தது.

ஆகாயம் இடிந்து விழுந்தது.

அது இடிந்து விழுந்ததனால் யாருக்கும் ஒரு நஷ்டமும் உண்டாகவில்லை. அதற்கு மாறாக பூமிக்கும் சொர்க்கத்துக்கும் இடையே மறைத்துக்கொண்டு இருந்த திரை இல்லாது ஒழிந்தது?

அந்தப் புரட்சியைச் செய்தது எது?

அந்த முதல் எரிநட்சந்திரம்!''[26]

இச்சின்னஞ்சிறு கதையை முதலாளி, தொழிலாளி அல்லது ஏழை, பணக்காரன் இந்த இரண்டு எதிரெதிர் நிலைகளை விளக்கும் வகையில் ஒரு கருத்தோவியமாக வழங்கியுள்ளார் காண்டேகர். இவ்வாறு புரட்சிக் கருத்துக்களைப் புதுமையான முறையில் கூறும்பொழுது, இரத்தத்தை நீராக்கும் தொழிலாளிகள் இல்லாமற் போனால் உயர் வர்க்கத்தினரின் சுக போகங்கள் ஏது? என்று படிக்கும் வாசகர்களைச் சிந்திக்க வைத்து விடுகிறார் காண்டேகர்.

---

26, அரும்பு, வி. ஸ, காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. பாரதி பதிப்பகம், சென்னை, பதி 1945. ப. X

## காண்டேகரின் பிற எழுத்தாக்கங்கள்

காண்டேகர் சிறந்த நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதித் தமக்கென ஒரு தனித்துவத்தை உருவாக்கியதுடன் மராட்டிய இலக்கியங்களைப் பற்றிய மதிப்பீடுகளை வழங்கு வதிலும் துணிவு மிக்கவராக விளங்கினார்.

மராட்டிய நாவல், நாடகம், சிறுகதை. கவிதை ஆகியவற் றைப் பற்றி காண்டேகர் வழங்கிய திறனாய்வுகள் பலவும் அவரது பரந்த அறிவையும் ஆழ்ந்த சிந்தனையையும் காலத்து டன் பொருத்திப் பார்க்கும் அணுகுமுறையையும் காட்டுவன வாகும். காண்டேகர் ஒரு நடுநிலையான திறனாய்வாளராக விளங்கினார். ''கவிதைகளுக்கு அவர் எழுதிய திறனாய்வுகள் பலரைத் திடுக்கிடச் செய்தன. அரச பரம்பரையைச் சேர்ந்த மூவர் சேர்ந்து எழுதிய கவிதைத் தொகுப்பு 'டிரிடல்' என்ற நூலாகும் அன்று தலைசிறந்து விளங்கிய அறிஞர்கள் வழங் கிய முன்னுரையும் விளக்கங்களும் அந்நூலில் இடம் பெற்றிருந் தன. அக்கவிதை தரமற்றது என்று காண்டேகர் அறிந்தார். அக்கவிஞர்கள், இந்தக் கவிதைகளுக்குத் தவறான முறையில் சான்றளித்தனர். அந்த அறிஞர்களை காண்டேகர் கடிந்து கொண்டார். மேலும் இலக்கிய அறிவுடையவர்கள் தங்கள் பொறுப்பை உணரவேண்டும்'' [27] என்று வலியுறுத்தினார்.

1. கட்கரி—வ்யக்தி ஆணி வாங்மய, (கட்கரி-வாழ்வியல் இலக்கியம்)
2. மராடீசா நாட்டிய ஸம்ஸார (மராட்டிய நாடக உலகம்)
3. வி.எம். ஜோஷி-வ்யக்தி ஆணி விசார, (வி எம். ஜோஷி — வாழ்வும் சிந்தனைகளும்)

---

27. V.S. Khandekar, M. D. Hatkanagalekar, Sahitya Akademi, Ed. 1986. P. 44

4 அகர்கர்—வ்யக்தி ஆணி விசார, (அகர்கர்-வாழ்வும் சிந்தனைகளும்)

5. கேஂப் ஆணி கோஂபன, (சாட்டையும் கவண்கல்லும்)

6. புலே ஆணி காண்டே, (மலரும் முள்ளும்)

7. ரங்க ஆணி கந்த, (வண்ணமும் மணமும்)

8. ரேஷா ஆணி ரங்க (கோடும் வண்ணமும்)

9. த்வஜ படகதா டேவா (கொடியைப் பறக்கவே வைப்போம்)

ஆகியவை காண்டேகர் வழங்கிய திறனாய்வுகளாகும். இவை மராட்டிய இலக்கிய உலகத்தையும், மராட்டிய சமுதாயத்தையும் முழுமையாக அறிந்து கொள்ள உதவும் அரிய சாதனங்கள்.

இவையல்லாமல் காண்டேகர் பொதுக்கட்டுரைகள் பலவும் எழுதி வழங்கியுள்ளார். 'மராட்டிய மொழியில் சொந்தக் கட்டுரையின் தந்தை காண்டேகர் என்று அழைப்பது சாலப் பொருந்தும். அவர்தாம் முதன்முதலில் மராட்டியில் சொந்தக் கட்டுரை எழுதினார் என்பதனால் மட்டுமல்ல; அவருடைய சமகாலத்தவர்களில் அவரைப் போல் உண்மையான மற்றும் தரமான சொந்தக் கட்டுரைகள் யாரும் எழுதவில்லை. ஆங்கில எழுத்தாளர்களைப் பின்பற்றியும் அவர் எழுதவில்லை. அவரது முதல் கட்டுரைத் தொகுதியான வாயுலஹரி (காற்றலை) 1936இல் மராட்டியில் வெளிவந்தது. சாந்தேன்யாந்த (நில விலே), அவினாஷ (அவிநாசன்), மந்தாகினி (மந்தாகினி), கல்பலதா (கற்பகக் கொடி), மஞ்ஜிர்யா (பூங்கொத்து), நவகிரண (புதிய கிரணம்) திஸரா ப்ரஹர் (மூன்றாவது யாமம்), ஜிம்ஜிம் (கடுமழை), ஆகியன காண்டேகர் எழுதிய கட்டுரைத் தொகுதிகளாகும். இவை கட்டுரை என்ற வகையில் அடங்கியதாக இருந்தாலும் ஒரு கதைக்குரிய கருக்களே இக்கட்டுரைகளின் மையப்புள்ளிகளாக அமைந்தன. "அவ்வப் போது தோன்றும் சிறிய சிறிய எண்ணங்களைக் கண்டு நான் பரவசமடைந்தேன். கவனத்தைக் கவரக்கூடிய சில அனுபவங்கள் நான் ஆசிரியராக இருந்தபோதும் பின்பு வெளியுலகில் பழகும்

போதும் ஏற்பட்டன. இவை என் மனத்தில் ஆழ்ந்திருந்தன. நான் கடற்கரையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது அவை என் நினைவுக்கு வரும். அவையனைத்தும் கற்பனை போல் எனக்குத் தோன்றின. அவற்றுக்கு ஓர் உருவம் கொடுக்க முடியவில்லை. அவற்றைக் கதைகளாகவும் ஆக்க முடியவில்லை ஆகையால் அவை சிறு கட்டுரைகளாக வெளிவந்தன''[28]என்று இக்கட்டுரைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் காண்டேகர்.

திரைப்படத்துறையிலும் காண்டேகர் ஈடுபாடுகொண்டிருந்தார். 1935இல் 'சாயா' என்ற திரைப்படத்திற்குக் கதை எழுதினார். 1936இல் அந்தத் திரைப்படம் கோஹர் பரிசு பெற்றது. அவரது திரைக்கதைகள் மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றன. எல்லாத் தரப்பு மக்களையும் கவர்ந்த திரைப்படத்துறை மூலம் சமுதாய முன்னேற்றத்தைச் செய்ய விழைந்தார். காண்டேகரின் 'சாயா'தான் மராட்டியில் முதல் சமூகப் படம். ஏதுமறியாத ஓர் அப்பாவி மனிதன் இந்த சமூகததால் எப்படிக் கொடுமைப்படுத்தப்படுகிறான் என்பதைச் சித்திரிக்கிறதுஇப்படம். காண்டேகர் எழுதிய திரைக்கதைகள் யாவும் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை. அவை, சாயா (நிழல்), ஜ்வாலா (ஜ்வாலை), தேவதா (தெய்வம்), ஸீகாசா சோத (சுகத்தைத் தேடி), அம்ருத (அமுதம்), லக்ன பஹாவே கரூண (கலியாணம் பண்ணிப்பார்), ஸர்க்காரீ பாஹுனே (சர்க்கார் விருந்தினர்), துஜாச (உன்னுடையவனே). ஸங்கம (சங்கமம்), தர்மபத்தினி (தர்மபத்தினி—தெலுங்கு), மாஜே பாள (என் குழந்தை), படீமா (பெரியம்மா—இந்தி). ஸுபத்ரா (சுபத்திரை), தானாபானீ (உணவும் நீரும்), மாண ஸாலா பங்க் அஸ்தே (மனிதனுக்குச் சிறகுகள் உண்டு) என்பன.

காண்டேகர் வழங்கிய இறுதி திரைப்படக் கதையான 'மாணஸாலா பங்க் அஸ்தே' மாநிலப் பரிசு பெற்றது. உலக இலக்கியப் போக்கை அறிந்து அதற்கேற்ப மராட்டிய இலக்கிய உலகைப் புதுப்பிக்க முயன்றார். நாடகம். நாவல், சிறுகதை,

---

28. V.S. Khandekar, M.D. Hatkanagalekar, Sahitya Akademi, Ed. 1986. P. 39

திறனாய்வு, கட்டுரை என இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் தனக்கென ஒரு தனித்த முத்திரையை உருவாக்கியவர் காண்டேகர், கிராம வாழ்க்கையும், எளியமனிதர்களின் மீது அவருக்குள்ள நேசமும் காண்டேகரை மாபெரும் இலக்கியச் சிற்பியாக உருவாக்கியது எனலாம். 'தடங்கல்களுக்கிடையே என்னால் உயர்தரப்படிப்பை முடித்து எங்கோ ஓர் இடத்தில் ஒரு பேராசிரியராக இருந்திருக்க முடியும். ஆனால் நான் மக்கள் தொகை அதிகமில்லாத ஒரு குக்கிராமத்தில் ஆசிரியராக வேலை பார்ப்பதையே விரும்பினேன். 1938ம் ஆண்டு வரை என்னுடைய எல்லா நாவல்களும் குக்கிராமத்தில் எழுதப்பட்டவையே.[29] என்று குறிப்பிடுகிறார் காண்டேகர்.

இப்படி எளிய மனிதராக அவர் வாழ்ந்ததினால்தான் வாழப் பிறந்தவன் வாழ்வில் வாடி வதங்குவதை உணர்ந்து, அனுபவித்து அதை எழுத்தில் வடித்தார். அவை புதுமைக் கருத்துக்களைத் தாங்கிய வந்த புரட்சி ஏடுகளாக அமைந்தன. ''அவருடைய முயற்சி அவ்வளவும் திறமை முழுவதும் முன்னால் ஏற்பட்ட எண்ணங்கள் ஏற்பாடுகள்—முறைகள், ஆகியவற்றை முறியடித்து மனிதத் தன்மையின் மேன்மையை உயர்த்த வேண்டும் என்பதுதான்!''[30]

### மராட்டிய இலக்கியச் சிற்பி வி. ஸ. காண்டேகரின் மறைவு

மொழிகளின் எல்லை கடந்து காண்டேகரின் படைப்புகள் இந்திய மொழிகள் பலவற்றுள் மொழிபெயர்ப்பாக இடம் பெற்று வாசகர்களின் மனத்தில் நீங்காமல் நின்றன. இலக்கிய உலகின் இருளகற்ற வந்த அந்த மெல்லிய உருவம் இலக்கிய வானில் முழுமதியாக உலா வந்தது. 1960இல் சாகித்திய அகாதெமிப் பரிசும், 1968இல் 'பத்ம பூஷண்' விருதும், 1970இல் சாகித்திய அகாதெமி இலக்கியப் படைப்பாளிகளுள்

---

29. V. S. Khandekar, M. D. Hatkanagalekar, Sahitya Akedemi, New Delhi, Ed. 1986. P. 18-19

30. கழகக் குரல், இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த காண்டேகர் (கட்) அறிஞர் அண்ணா, 28-3-76, ப. 6.

முக்கியப் பிரமுகர் என்ற கவுரவமும், 'யயாதி' என்ற அரிய நவீனத்துக்காக 1974இல் ஞானபீடப் பரிசும் காண்டேகரைத் தேடி வந்தன. அதே ஆண்டு கோல்ஹாபூர் சிவாஜி பல்கலைக் கழகம் காண்டேகருக்கு இலக்கியத்திற்குரிய டாக்டர் பட்டம் வழங்கிப் போற்றியது. தமது இறுதிக் காலத்தில் 'யயாதி'யை எழுதி வரும்பொழுது கண்பார்வை மங்கியது. இதனால் அவர் கதையைச் சொல்லிக் கொண்டுபோக, பிறர் உதவியால் அதை அப்படியே எழுதி முடித்தார். இவருடைய மகள் சுலபா கபாடி யின் இஸ்லாம்புர் இல்லத்தில் இருந்தபொழுது 2-8-1976ஆம் நாளன்று காண்டேகர் மறைந்தார். காண்டேகரின் மறைவு கேட்டு உலக இலக்கிய மேதை ஒருவர் மறைந்ததாகவே மக்கள் வருந்தினர். அவர் உடல் மறைந்தாலும், அவருடைய படைப்பு கள் சொல்லோவியங்களாக மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும்.

# பகுதி – II

# தமிழும் மராட்டியும்

தமிழ்-மராட்டிய உறவு பன்னெடுங்காலப் பழமை வரலாறு உடையது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மராட்டி தமிழுடன் மொழிவழியாக, பண்பாட்டு வழியாக இணைந்து வந்துள்ளதை தமிழிலக்கியச் சான்றுகளும் வரலாற்றுச் சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

'மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும். யவனத் தச்சரும்,
தண் தமிழ் வினைஞர் தம்மொரு கூடிக்
கொண்டு இனி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்கால் பன்மணிப் போதுகை'......

(19 : 107 — 112)

என 'மணிமேகலை' காட்டும் குறிப்பு தமிழகத்தில் சிறந்த கட்டிடக் கலைக்குப் பெருமை அளித்த தமிழ்ச் சிற்பிகளுடன் மற்ற நாட்டவரும் சேர்ந்து நட்புறவோடு பணியாற்றினர் என்பதற்குச் சான்றாகும்.

வாசவதத்தை மராட்டிய தேயத்து அணிகளைப் புனைந்து மகிழ்ந்ததை 'அம்புகை கழுமிய அணிமாராட்டம்' என்று பெருங்கதை (2:19:72) புகலுவதையும் இக்கருத்திற்குச் சான்றாக்கலாம். தஞ்சைமன்னன் சரபோஜி (கி.பி. 1798-1832), வீர சிவாஜியைப் பிறப்பித்த போன்ஸ்லே வம்ச சரிதத்தை மிகப் பெரிய கல்வெட்டாகப் தஞ்சை பெரியகோயில் பிரகாரச் சுவர்களில் பொறித்துவைத்திருப்பது மராட்டிய-தமிழ் உறவுக்கான சிறந்த வரலாற்றுச் சான்றாகும். ''உலகிலேயே மிகப்பெரிய இக்கல்வெட்டு 110 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருப்பது''[1] குறிப்பிடத்தக்கது. இந்நூலின் பெயர் ''போன்ஸ்லெ வம்ச சரித்திரம்'' என்பதாகும். தென்னகத்தை ஆண்ட நாயக்க

---

1. அமுதசுரபி, (கட்) தமிழ் மொழிக் குடும்பத்தில், கா.ஸ்ரீ.ஸ்ரீ தீபாவளிமலர். 1978, ப. 76.

அரசர்களும், மராட்டி மன்னர்களும் பயன்படுத்திய படைக் கலன்களும் நூல்களும், கலைப்பொருள்களும் தஞ்சை சரஸ்வதி மஹாலில் சேமிக்கப் பெற்றுள்ளன. இவை யாவும் தமிழ்-மராட்டிய உறவினை வரலாற்றுத் தொடர்புடன், பண்பாட்டுத் தொடர்புடன் புலப்படுத்துகின்ற சான்றுகளாகும்.

அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. 'தமிழ்மொழிக் குடும்பத்தில்' என்ற கட்டுரையில் மராட்டிய மொழி, தமிழ்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்ற கருத்தைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டு கிறார். ''மராட்டி மொழி ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தது' என்று எழுதி வந்த போதிலும் இந்திய நாட்டின் மொழி ஒற்றுமைகளைப் பயின்று அறியாமல் ஆராய்ச்சி என்ற பெய ரால் தவறான பல செய்திகளைப் பாடமாக்கி வைத்திருந்த போதிலும் பொதுமக்கள் வழங்கி வளர்ந்து இணைந்தமொழி ஒற்றுமைகளின் உண்மையைப் புறக்கணிக்க இயலாது அப்பா, ஆய், தாய், அண்ணா, அக்கா, அத்தை, மாமா, மாமி முதலிய உறவுச் சொற்களும், பெயர்ச்சொற்களேயன்றி வினைச்சொற் களும் தமிழிலும் மராட்டியிலும் ஆயிரக்கணக்கின் சமமாக இருப்பதை உற்று நோக்க வேண்டும். 'பஞ்ச திராவிடத்தில் மராட்டி ஒன்று என்று வாயளவில் சொல்லி வந்த போதிலும் 'மராட்டி திராவிட மொழி இனத்தைச் சேர்ந்தது' என்பதற் கான முழு ஆராய்ச்சி நடைபெறாதது வருந்தத்தக்கது. அண்மையில் இதற்கான முயற்சிகள் பிறந்துள்ளன''[2] என கா. ஸ்ரீ ஸ்ரீ குறிப்பிடுகிறார்.

இக்கருத்தை நிறுவிக்காட்டும் வகையில் ஆராய்ச்சிக்குரிய சான்றுகளை கா. ஸ்ரீ ஸ்ரீ எடுத்துக்காட்டியுள்ளார். வரலாற்றுக்கு முந்தைய பழங்காலத்தில் தமிழ்மொழியே இன்றைய மராட்டிய மாநிலத்தில் வழங்கிவந்தது என்பதற்கானச் சான்றுகளை முதல்முறையாகக் கண்டுபிடித்து 'திராவிட மஹாராஷ்டிரர்' என்ற ஆய்வுநூலை, ஸ்ரீ விச்வநாத கைரே என்ற பொறியியல் அறிஞர் வெளியிட்டுள்ளதை கா. ஸ்ரீ ஸ்ரீ ஒரு முழுமை

---

2. அமுதசுரபி. (கட்), தமிழ்மொழிக் குடும்பத்தில். கா. ஸ்ரீ. ஸ்ரீ. தீபாவளிமலர், 1978. ப. 76

யான சான்றாகக் குறிப்பிடுகிறார், இவ் ஆராய்ச்சியை மேற் கொண்ட ஸ்ரீ விச்வநாத கைரே, கா. ஸ்ரீ. ஸ்ரீ யின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

''மராட்டி என்ற மொழிப் பெயரும் இந்த மாநிலத்தி லுள்ள தேவூர், ஜெஜீரி, பைடன், பவயீ, காஞ்ஜீர், குர்லா முதலிய பலபல ஊர்களின் பெயர்களும் கண்டோபா, மாண் டர், மான்ஸா, பாணாயி. துளஜா, போலாயீ, முதலிய கிராம தேவதைகளின் பெயர்களும் மந்தா, கோதா முதலிய ஆறுகளின் பெயர்களும் தமிழிலிருந்தே வந்துள்ளன. வடமொழியிலிருந்து இவை வருவது சாத்தியமில்லை என்பதை இவர் ஐயந்திரிபற நிரூபித்திருக்கிறார். பழங்குடி மக்களிடையே வழங்கும் கதை கள், பழக்கங்கள், மொழியியல். புவியியல், தாவரஇயல், வரலாறு முதலிய பல சான்றுகளை இவர் தமது ஆராய்ச்சிக்கு ஆதாரமாகக் கொண்டு 'நாலாயிரம் ஆண்டுகளாகவே தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் மராட்டிய மாநிலத்தில் நிலைத்து வந்துள்ளன,' என்றும் 'தமிழ்க் குடும்பத்தில் கலந் தது மராட்டி' என்றும் நிறுவியிருக்கிறார்-தமிழில் காணும் ஐந்திணை மக்களே வேதம் குறிக்கும் 'பஞ்சஜனர்' என்பது இவர் கொள்கை.'[3] ஸ்ரீ விச்வநாத கைரேவின் இவ் ஆராய்ச்சி உண்மைகளை கா. ஸ்ரீ. ஸ்ரீ மராட்டி தமிழ்மொழிக் குடும்பத் தைச் சார்ந்தது என்பதற்கான சான்றாகக் கூறுகிறார்.

முதல் முதலில் மராட்டி மொழி அகராதியைப் பதினேழாம் நூற்றாண்டிலேயே வழங்கிய பெருமை தமிழ் மண்ணுக்கே உரியது என்றும் இந்த அகராதியில் பதினாயிரம் சொற்களே இருந்தாலும் சுமார் ஐந்நூறு மராட்டியச் சொற்கள் தமிழ் மொழி அமைப்பிலேயே காணப்படுகின்றன என்றும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. குறிப்பிடுகிறார். மராட்டி, தமிழ்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்ற ஆய்வுக்கு இச்சான்றுகள் யாவும் பெரிதும் துணைபுரிவனவாகும்.

---

3. அமுதசுரபி, (கட்) தமிழ்க் மொழிக் குடுப்பத்தில், கா ஸ்ரீ ஸ்ரீ. தீபாவளி மலர், 1978, ப. 76.

இலக்கியம், மருத்துவம், விலங்கியல், இசை, நாட்டியம். சமயற்கலை முதலியவற்றைப் பற்றிய அறிவுக் களஞ்சியத்தைத் திரட்டித் தமிழகத்துக்கு வழங்கிய சரபோஜி மன்னரின் நற்கொடை தமிழ் மராட்டிய உறவுக்கு அடிப்படையான வரலாற்றுச் சான்றாகும்.

தற்கால தமிழ் இலக்கியப் போக்கில் மராட்டியின் பங்களிப்பை உற்றுநோக்கும்பொழுது மராட்டி இலக்கியச் சிற்பியான வி. ஸ. காண்டேகருக்கு அத்தகைய பெருமை உண்டு என்பதை உணர முடியும். வி. ஸ. காண்டேகரின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்த அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ யின் அறிவுப்பணி இதற்கு முக்கியக் காரணம் என்பதை தமிழ் ஆர்வலர் எவரும் மறுக்கமுடியாது. அத்தகைய சிறப்பு மிக்க அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ யின் இளமைப்பருவம், வாழ்க்கை, படைப்புப்பணி, மொழிப்பெயர்ப்புப்பணி ஆகியவற்றை இனி காணலாம்.

# அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

**இளமைப்பருவம்:**

'கா ஸ்ரீ ஸ்ரீ' என்ற மூன்றெழுத்துக்களில் புகழ்பெற்ற கா.ஸ்ரீ ஸ்ரீ நிவாஸாசாரியர். உத்திரப் பிரதேசத்தில் வடமதுரைக்கு அருகிலுள்ள பிருந்தாவனம் என்ற ஊரில், 1913-இல் பிறந்தார். இவருடைய தாயும் தந்தையும் காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள கிராமங்களைச் சார்ந்தவர்கள் இவர்கள் பழமையான ஆசார முறைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள். 'தாயார் நல்ல கேள்விஞானமுள்ளவர்; திவ்யப் பிரபந்தம் கற்றவர். அவர் காலமாவதற்கு இரண்டு நாள் முன்பு கூட

ஆசைவாய்ச் சென்ற சிந்தைய ராகி,
அன்னை அத்தன் என் புத்திரர் பூமி,
வாசலார் குழலாள் என்று மயங்கி,
மாளும் எல்லைக்கண் வாய் திறவாதே,
'கேசவா புருடோத்தமா!' என்றும்,
கேழலாகிய கேடிலீ!' என்றும்,
பேசுவா ரவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் எம் பரமன்றே
(பெரியாழ்வார் திருமொழி 1-5-1)

என்ற பாசுரத்தை ஓதினார். இதிலிருந்தே அவரது வாழ்க்கை நோக்கத்தையும் வாழ்வுநிலையையும் அறியலாம்.' என்று கா.ஸ்ரீ ஸ்ரீ. தனது தாயாரைப் பற்றி நினைவு கூறுகிறார்.

கா.ஸ்ரீ ஸ்ரீயின் தந்தையார் ஸ்ரீரங்காச்சாரியர் சமஸ்கிருதச் சாத்திரங்களிலும், பாஞ்சராத்திர ஆகமத்திலும் வல்லவர். தாய்மொழி தமிழைத் தவிர இந்தி, தெலுங்கு, வங்கமொழி ஆகியவற்றைக் கசடறக் கற்றவர். "வடநாட்டில் பல இடங்களில் மந்திரசித்தி பெற்ற அவர், கோவில்களில் மூர்த்தி

பிரதிஷ்டை செய்து பெரும் புகழ்பெற்றவர்''[4] காஞ்சிபுரம் ஸ்ரீரங்கம் முதலிய ஊர்களிலிருந்து பண்டிதர்களும் பட்டாசாரியர்களும் தங்களுக்கு ஏற்படும் அய்யப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள அவரை நாடிவருவர். அவர் பிருந்தாவனத்தில் வங்க நாட்டில் 'தாடாஸ்' என்ற சமஸ்தானத்து அரசரின் ஆதரவில், பத்துப் பன்னிரண்டு உரைகளுடன் ஸ்ரீபாகவதத்தைப் பதிப்பித்தார். பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட அந்தக் கிரந்தத்தை, அல்லும்பகலும் பாடுபட்டு அய்ந்து ஆண்டுகளில் அப்பணியை நிறைவேற்றினார். இதனால் மகிழ்ச்சியடைந்த அரசர் அவருக்குப் 'பண்டிதராஜர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

இத்தகையப் பெருமகனாருக்கு மகனாகப் பிறந்த கா ஸ்ரீ ஸ்ரீயும் வடமொழிப் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். அவர் தம் சிறுவயதிலேயே தந்தையாரிடமும் வடமொழிக் காவியங்களையும், நாடகங்களையும் வைணவநூல்களையும் பயின்று வந்தார்.

பிருந்தாவனத்திலிருந்த கா. ஸ்ரீ ஸ்ரீயின் தந்தையைப் பம்பாயில் இருந்த 'ஸேட்கேமராஜ்' என்பவர் சமஸ்கிருத-இந்தி நூல்களைப் பிழையின்றிப் பதிப்பிக்கத் தமது அச்சுகூடத்துக்கு வருமாறு அழைத்தார். அந்த அழைப்பை ஏற்ற இவரது தந்தையார், பம்பாய்க்கு அருகில் 'கல்யாண்' என்ற இடத்திலிருந்த லஷ்மி வேங்கடச்வர அச்சகத்தில் பணியாற்ற வந்தார். அப்போது கல்யாணில் தமிழ் கற்கும் பள்ளி இல்லாமையால், கா.ஸ்ரீ ஸ்ரீ. வீட்டிலேயே தமிழ் படிக்கவும் எழுதவும் கற்றார். மராட்டிப் பள்ளியில் சேர்ந்து மராட்டியும் ஆங்கிலமும் பயின்றார். மராட்டியில் நன்றாகப் பேசவும் எழுதவும் பழகினார். மராட்டியில் ஏழாம் வகுப்பு படிக்கும் பொழுது இவரது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இவரது வலது காதில் கடுமையான வலியுடன் சீழ்க்கட்டத் தொடங்கியது.மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. எனவே இவரது பெற்றோர் இவரைச் சென்னைக்கு அழைத்து வந்து, அந்தக் காலத்தில்

4 கா.ஸ்ரீ.ஸ்ரீ. இந்நூலாசிரியருக்கு எழுதியகடிதம் 23-5-1994.

தொண்டை-மூக்கு-காது மருத்துவத்தில் பெரும்புகழ் பெற்றிருந்த டாக்டர் சங்கரநாராயணனை அணுகினர். அவர் இவரது காதின் பின்புறத்தில் துளையிட்டு அறுவைச்சிகிச்சைசெய்தார். அக்காலத்தில் இது மிகக் கடுமையான அறுவைச்சிகிச்சை முறையாகும்.

இந்த அறுவைச் சிகிச்சையினால் உடல்மெலிந்த கா.ஸ்ரீ.ஸ்ரீ தமது கிராமத்தில் ஆறுமாதங்கள் ஓய்வு கொண்ட பின்பு, தமது தாயின் ஆதரவில், காஞ்சிபுரத்திற்கு வந்து, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து, படிப்பைத் தொடர்ந்தார். காஞ்சிபுரத்தில் ஒரு வேதப் பண்டிதரிடம் இவர் வேதக்கல்வி பயின்றார். ஏற்கனவே இருந்த இந்திமொழி அறிவை வளர்த்து அதில் புலமை பெற்றார். 1930-இல் நிகழ்ந்த பள்ளியிறுதிப் பொதுத்தேர்வில் சென்னை, காஞ்சிபுரம், சிதம்பரம் ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிகளில், ஆங்கிலம், சமஸ்கிருதம் தமிழ் ஆகிய மொழிப்பாடங்களில் முதல் மாணவராக வெற்றி பெற்ற கா.ஸ்ரீ.ஸ்ரீ தங்கப் பதக்கம் பெற்றார்.

இவர் பள்ளிப்படிப்பை முடித்ததுமே, அந்தக் கால வழக்கப்படி இவரது பெற்றோர் இவருக்கு மணம் முடிக்க விரும்பினர். இவரது படிப்பாற்றலைக் கண்ட பலர் இவருக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். காதல் திருமணம் நடைமுறையில் வராத காலம் அது. ஆயினும் இவர் தாம் விரும்பும் ஒரு பெண்ணையே மணக்க விரும்புவதாகத் தந்தைக்குக் கடிதம் எழுதினார். அதன்படியே இவர் தந்தை சென்னைக்கு வந்து, இவர் விரும்பிய இலட்சுமி அம்மாள் என்ற பெண்ணையே மணம் முடித்தார். இவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. யின் இலக்கியப் பணிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் குடும்பப் பொறுப்பை முழுவதும் தானே ஏற்று நடத்திவந்தார்.

### மீண்டும் கல்யாணில்

பள்ளிப்படிப்பை முடித்த கா.ஸ்ரீ.ஸ்ரீ. குடும்பத்துடன் வாழக் கல்யாணுக்குச் சென்றார். குடும்பப் பொறுப்பினால் இவர் கல்லூரியில் சேரமுடியவில்லை. வர்த்தகக் கல்வி பயின்று

G.D.A. (Government Diploma in Accountancy) என்ற பட்டம் பெறவேண்டுமென்ற இவரது ஆவலும் நிறைவேறவில்லை. வேலையும் கிடைக்கவில்லை. ஆண்கள் முடிதிருத்தம் செய்து 'கிராப்' வைத்துக்கொண்டிருந்த அந்தக் காலத்தில், இவர், பஞ்சகச்ச வேட்டியணிந்து, தலையில் குடுமியும், நெற்றியில் திருமண்காப்புமாக மிக்க ஆசாரத்துடன் விளங்கினார். ஆறு மாதம் ஒரு சிறுகோவிலில் அர்ச்சகராக இருந்தார். பிறகு பல உரைகளுடன் வால்மீகி இராமாயணத்தைப் பதிப்பித்து வந்த தந்தைக்கு உதவியாளராகச் சேர்ந்தார். அப்போது இவரது மாத ஊதியம் இருபத்தைந்து ரூபாய். இரவு நேரங்களில் தந்தையிடம் வைணவ நூல்களைப் பயின்றார்.

**மீண்டும் சென்னைக்கு**

1934ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கா. ஸ்ரீ. ஸ்ரீக்கு காதில் வலி ஏற்பட்டதால் அச்சமுற்ற தந்தை இவரைச் சென்னைக்கு அனுப்பினார். இவர் மருத்துவரைச் சந்தித்ததும் அவர், காதில் பழுதில்லை; மூக்கில் தொந்தரவு என்று கூறி மூக்குச் சதையில் ஊசி மருந்தேற்றினார்.

கல்யாணில் இருந்தபோதே இவர் ஸ்ரீஹர்ஷன் இயற்றிய 'நாகானந்தம்' என்ற நாடகத்தை நெடுங்கதை வடிவில் எழுதி, மதுரை ஈ.எம். கோபாலகிருஷ்ணகோனுக்கு அனுப்பி யிருந்தார். அதைப் படித்து மகிழ்ந்த எஸ். ஜி. ராமானுஜ நாயுடு, தாம் ஆசிரியராக இருந்த 'அமிர்த குணபோதினி' என்ற மாத இதழில் அதை வெளியிட்டார். எனவே அவர் சென்னை வருமுன்பே, தமிழகத்தில் இவரது எழுத்து பரவி யிருந்தது. சென்னையிலேயே இவர் வேலைதேட முனைந்தார்.

கா.ஸ்ரீ.ஸ்ரீ இந்திப் பிரச்சார சபையின் செயலராக இருந்த ஹரிஹர சர்மாவைக் கண்டு பேசினார். அவர் இவருக்கு மாதம் முப்பது ரூபாய் ஊதியத்தில் இந்திப் பிரச்சார சபை அச்சகத் தில் வேலை கொடுத்தார். தவிர இரண்டு, மூன்று மாதங்களில் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளை அவற்றின் லிபி யுடன் ஓரளவு கற்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தார். அதன்படியே சில மாதங்களில் இவர் அந்த மொழிகளை

ஓரளவு கற்றார். அச்சுக் கூடத்தில் காலை எட்டரை முதல் மாலை அய்ந்தரை மணிவரையில் அச்சுப்படி பிழைதிருத்தப் பணி செய்யும் கடுமையான வேலை. ஒரு மணிநேர இடை வேளையில் இவர் வீட்டுக்குச் சென்று உண்டுவருவார். மாலையில் அச்சுக்கூட வேலை முடிந்ததுமே, பெரம்பூருக்குச் சென்று இந்தி வகுப்பு நடத்துவார். இவர் நடத்திய அந்த வகுப்பில் பெரும்பாலும் இரயில்வே பணியர்ளர்கள் இருந் தனர். வகுப்பு முடிந்ததும் இரவில் வீடு திரும்புவார்.

பிறகு இவர் நுங்கம்பாக்கத்தில் அரிசனக் குடியிருப்பில் முதன்முதல் இந்த வகுப்பைத் தொடங்கியபோது, ஜே. சிவ சண்முகப்பிள்ளையும், வழக்கறிஞர் பாஷ்யமும் தலைமை தாங்கிய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தீண்டத்தகாதவராக உயர்சாதியினர் கருதி நடத்தி வந்த காலத்தில், உயர்சாதி வைதிக வகுப்பைச் சேர்ந்த கா. ஸ்ரீ. ஸ்ரீ. அரிசனக் குடியிருப் பில் இத்தகைய முயற்சியைத் தொடங்கினார் என்பது பெரிதும் போற்றுதற்குரியது.

**காந்தியின் வரவும் கி. வா. ஜ.வின் அறிமுகமும்**

*1937*ஆம் ஆண்டு மார்ச் மாதம் மகாத்மா காந்தி சென்னை வந்தார்; அனைத்திந்திய இலக்கியங்களை இந்தி மொழியில் கொண்டுவரும் நோக்குடன், காந்தியின் தலைமை யில் நிறுவிய 'பாரதீய ஸாஹித்ய பரிஷத்'தின் மாநாடு இந்திப் பிரச்சார சபையில் கூடியது. அத்துடன் இந்தி சாகித்ய சம்மேளனமும் நடைபெற்றது. ஒரு நாள் காலை, கா. ஸ்ரீ ஸ்ரீ அலுவலகத்துக்குள் சென்ற சிறிது நேரத்தில் ஹரிஹர சர்மா வந்து, கா.ஸ்ரீ.ஸ்ரீயிடம், 'இது மகோமகோபத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதிய தமிழ் வரவேற்புரை. இதை உடனே இந்தியில் மொழிபெயர்க்க வேண்டும். ஐயரவர் களின் சீடர் ஜகந்நாதன் வீட்டுக்குச் சென்று உடனிருந்து அங்கேயே இந்தியில் ஆக்கி மாலையில் அச்சுக்குக் கொடுங்கள்" என்று உத்தரவிட்டுவிட்டு வேறு வேலைகளைக் கவனிக்கப் பறந்தார்.

சென்னையில் திருவல்லிக்கேணி சுபத்ராள் தெருவில் கி. வா. ஜ. குடியிருந்தார். தந்தை, தாய், மனைவி, பள்ளியில் பயிலும் சிறுவன், தம்பி, சிறுமி தங்கை கொண்ட குடும்பம். அவருடன் அமர்ந்தே இந்தியில் கா ஸ்ரீ. ஸ்ரீ. எழுதினார். விளக்கம் கேட்டு அதன்படியே மொழிபெயர்ப்புச் செய்தார். உ. வே. சாமிநாத ஐயரவர்களின் வரவேற்புரை இந்தியில் அச்சேறிய மறுநாள், மாநாட்டில் மகாத்மா காந்தி, ஐயரவர் களின் உரையைப் பாராட்டி, 'இந்த மகானின் திருவடியில் அமர்ந்து தமிழ் கற்க ஆவலுறுகிறேன்'[5] என்று பேசினார். கி. வா. ஜ அவர்கள் கா. ஸ்ரீ. ஸ்ரீ யிடம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். கா. ஸ்ரீ ஸ்ரீ வேலை மிகுதியினால் மாநாட்டுக்குச் செல்லவில்லை. 'இந்தக் கி. வா ஜ.வுடன் நீ இனி நாற்பது ஆண்டு பழகப் போகிறாய் என்று எவ்வளவு கொம்பனான ஜோஸ்யன் சொல்லியிருந்தாலும் அன்று நான் நம்பிருக்கமாட்டேன்'[6] என்று கா. ஸ்ரீ. ஸ்ரீ குறிப்பிடுகிறார்.

**தமிழுக்காக வாதாடிய கா. ஸ்ரீ. ஸ்ரீ**

பாரதிய சாஹித்ய பரிஷத் மாநாட்டில் கலந்துகொள்ள இந்திப் பிரச்சார சபைக்கு வந்திருந்த இந்தி எழுத்தாளர் களைக் கா. ஸ்ரீ. ஸ்ரீ சந்திக்கச் சென்றார். "ஹிந்தியைத் தவிர வேறு இந்திய மொழியில் சிறந்த இலக்கியம் இல்லை; நாமே இலக்கியச் சக்கரவர்த்திகள் என்ற தோரணையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஹிந்தியைவிடச் சிறந்த கதை கட்டுரைகள் தமிழில் இருக்கின்றன என்று வாதாடினேன். என் பேச்சைக் கேட்டு அவர்கள் வியந்தனர். தமிழில் நவீனக் கதை இலக்கியம் இருப்பதையே அறியாத அறிவிலிகளாகவும் கர்விகளாகவும் இருந்தனர்...அன்றையிலிருந்து மிக்க ஊக்கத் துடன் நான் தமிழ்க் கதை கட்டுரைகளை ஹிந்தியில் ஆக்கி யும் தமிழ் இலக்கியம் பற்றிய அறிமுகக் கட்டுரைகளை எழுதி

---

5. கலைமகள், பொன்விழா மலர், (கட்) கலைமகளின் கோயிலிலே. கா. ஸ்ரீ. ஸ்ரீ டிச 1981, ப. 442.

6. மேற்படி. ப. 443.

யும், பிரசித்த ஹிந்தி இலக்கியப் பத்திரிகைகளில் வெளியிடலானேன்"[7] என்று கூறுகிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ. தமிழ் இலக்கியங்களை பிறமொழியினர் அறியும் வண்ணம் செயல்பட வேண்டும் என்பதில் முனைந்து நின்றார்.

### தமிழ் எழுத்தாளர்களைப்பற்றி இந்தியில்

இந்திமொழி இலக்கியவாதிகளுக்குத் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகம் செய்யவேண்டும் என்று கருதி ஊக்கத்துடன் அந்தப் பணியில் ஈடுபட்டார் கா. ஸ்ரீ ஸ்ரீ. தமிழ்க் கதை கட்டுரைகளை இந்தியில் ஆக்கியும், தமிழ் இலக்கியம் பற்றிய அறிமுகக் கட்டுரைகளை எழுதியும், புகழ்பெற்ற இந்தி இலக்கியப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார். மாதவையா முதல் சிதம்பர சுப்பிரமணியன் வரையில் பன்னிரண்டு எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளை இந்தியில் எழுதி, எழுத்தாளர் பற்றிய அறிமுகத்துடன் 1938இல் வெளிவரச் செய்துள்ளார். புகழ்பெற்ற இந்தி நாவலாசிரியர் பிரேம்சந்தின் புதல்வர் ஸ்ரீபத்ராய் காசியில் இதை வெளியிட்டார். முதன் முதலில் இந்தியில் வெளிவந்த இந்தத் தமிழ்க் கதைத் தொகுதி இரண்டு பதிப்புக் கண்டது.

'ஹம்ஸ்', 'விசாலபாரதி', 'விச்வமித்ர', 'கிசோர்', 'ஆஜ்கல்', 'நவநீத்', முதலிய பத்திரிகைகளில் தமிழ் எழுத்தாளரைப்பற்றிய அறிமுகம், கதை, கட்டுரை, சொல்லோவியம் முதலியவை நிறைய வெளிவந்தன. பாரதியாரின் 'தராசு', இந்தி வடிவில் பாரதிப் பிரசுராலய வெளியீடாக வந்தது. "நாட்டுப்புறப் பாடல்களும் பழமொழிகளும் மிக்க வளம் கொண்டவை. இந்தத் துறையில் இன்னும் பரந்த ஆழ்ந்த முயற்சிகளை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். தோண்டத் தோண்டத் தோண்டச் சுவைக்கும் சுரங்கம் இது"[8]

---

7. கலைமகள், பொன்விழா மலர், (கட்) கலைமகளின் கேயிலிலோ, காஸ்ரீ. ஸ்ரீ. டிச. 1981. ப. 442.
8. கலைமகள் பொன்விழா மலர். (கட்) கலைமகளின் கோயிலிலே, கா. ஸ்ரீ. ஸ்ரீ, டிசம்பர் 1981, ப. 443.

என்று கூறுகிறார் அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. வேதங்களைக் கற்றறிந்த கா. ஸ்ரீ. ஸ்ரீ நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்பையும் போற்றிப் பாராட்டுவது அவரது பரந்த போக்கைப் புரிந்துகொள்ளப் போதுமான சான்றாகும்.

**கலைமகளில் கா. ஸ்ரீ. ஸ்ரீ.**

இந்திப் பிரச்சார சபையில் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது வாழ்வில் சாதனை ஏதும் காணவில்லை என்று கருதி, ஒரு நாள் கா. ஸ்ரீ. ஸ்ரீ அந்தச் சபையிலிருந்து விலகினார். நண்பர்களின் நல்லுரையையும் அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. பிறகு, கி. வா. ஜ. அவர்களைச் சந்தித்துத் தமது நிலையை விளக்கினார்.

''நாடகத்தில் ஒருவர் போவார்; திரைவிழும், திரைஎழுந்ததுமே மற்றொருவர் வருவார். அதுபோல இந்தச் சமயத்தில் கலைமகளில் பல ஆண்டுகள் துணையாசிரியராக இருந்த த. நா. சேனாபதி உடல்நலம் குன்றி வேலையை விட்டுப் பள்ளியாசிரியர் துறைக்குத் திரும்பினார். அவரது நாற்காலி காலி. அப்போது கி. வா. ஜ.வின் தந்தை காலமாகி கி. வா. ஜ. வெளியூர் சென்றிருந்தார். நடுவில் 'ஏக் தின்கா சுல்தானா'க வந்த ஒரு தமிழறிஞரைக் கலைமகள் அதிபர் ஆர். நாராயணஸ்வாமி ஐயருக்குப் பிடிக்கவில்லை. ஐயரின் செல்வமகனார் ராமரத்தினம் கலைமகளைப் பொறுப்புடன் நிர்வகித்து வந்தார். ஏற்கனவே இருந்த பழக்கத்தில் ஒருநாள் இருவரையும் சந்தித்தேன். கி. வா. ஜ திரும்பி வந்ததுமே, காலி நாற்காலியில் என்னை அமர்த்தி, என்னைத் தமது பொருளாக்கிக் கொண்டார்.

இனி எங்கே போவது, என்ன செய்வது? என திகைத்துச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நிற்கிறான் ஓர் இளைஞன். ஒரு வண்டி புறப்பட இருக்கிறது. இதில் ஏறிக்கொண்டு டிக்கட் செக்கரிடம் ஏதாவது சமாதானம் சொல்லலாம். பிறகு நடப்பதைப் பார்த்துக்கொள்வோம்

என்று நினைத்து வண்டிக்குள் புகுகின்றான். இந்த இளைஞனைப் போன்ற நிலையில்தான் நான் கலைமகள் கோயிலுக்குள் புகுந்தேன்"[9] என அந்த நிகழ்ச்சியைச் சுவைபடக் குறிப்பிடுகிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

## உத்தர ராமசரிதம்

கலைமகள் மாத இதழுடன் கலைமகள் வெளியீடுகளையும் ஆசிரியர் குழுவே அப்பொழுது பதிப்பித்து வந்தது. கே.சந்தானம் மொழிபெயர்த்த 'உத்திர ராமசரிதம்' கலைமகள் வெளியீடாக வந்தது. இந்தப் பணியைப் பற்றிக் கா.ஸ்ரீ ஸ்ரீ குறிப்பிடும் பொழுது, "என் சம்ஸ்கிருத அறிவைக் கொண்டு அதைக் கூடியவரை திருத்தமாகப் பதிப்பித்திருந்ததனால் அதில் பெருமிதம் கொண்டிருந்தேன். ராஜாஜி அதற்கு முன்னுரை எழுதினார். அந்த முன்னுரை தனியே கலைமகளில் வந்தது. ராமாயணத்தில் உத்தரகாண்டத்தை எதிர்த்துத் தமது கொள்கையையும், அது தேவையற்றது என்பதையும் குறிப்பிட்டிருந்தார். இதைக் கண்டித்துப் பல துறைகளிலிருந்து ஏராளமான கண்டனக் கடிதங்கள் வந்தன.

வால்மீகி ராமாயணத்துக்குச் சுமார் முப்பது சிறந்த உரைகள் உள்ளன. எல்லா உரைகளும் உத்திரகாண்டத்துக்கும் உள்ளன. இந்தக் காண்டமும் சேர்ந்துதான் இருபத்து நான்காயிரம் சுலோகங்கள் அமைகின்றன. 'அங்கனமதிள்' என்று தொடங்கும் பதிகத்தில் இராமாயணச் சுருக்கம் தந்த குலசேகரப் பெருமாள் மூன்று பாடல்களில் உத்தர காண்டத்தை இணைத்திருக்கிறார். முடிசூடிய பின்பு நிகழ்ந்த இராமகாதையை வைத்து வடமொழியில் பல காவியங்களும் நாடகங்களும் தோன்றியுள்ளன.

பத்திரிகாசிரியரின் தர்மம் என்ற வகையில் கி. வா. ஜ.வும் ராமரத்தினமும் ஐம்பது அறுபது கட்டுரைகள் அடங்கிய மறுப்புக் கோவையை எடுத்துக்கொண்டு ராஜாஜிபிடம் சென்று

---

9. கலைமகள், பொன்விழா மலர் (கட) கலைமகளின் கோயிலிலே, கா. ஸ்ரீ. ஸ்ரீ. டிச 1981, ப. 444

காண்பித்தனர். ராஜாஜி தமது அரசியல் யுத்தியைக் கொண்டு அவற்றை வெளியிட வேண்டாம் என்று தடுத்துவிட்டார். அவை வெளிவந்திருந்தால் வாசகர்களுக்கு இரண்டு பக்கத்துச் சாதகபாதக நியாயங்கள் விளங்கியிருக்கும். அரசியல் வலிமையினால் இலக்கிய பிரச்சாரம் தடைபடுகிற இன்னலுக்கு இது ஓர் உதாரணம். பொதுவாகப் பார்த்தால் கலைமகளில் அரசியலைவிட இலக்கியத்துக்கே ஆதிக்கம் மிகுதியாக இருந்துள்ளது.''[10] என்று குறிப்பிட்டுள்ளார். கா ஸ்ரீ ஸ்ரீ. மொழிபெயர்ப்பாளராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கியதுடன், புதிய நாவல் படைப்பதிலும் ஈடுபாடு காட்டியுள்ளார்.

**காந்தம்-நாவல்**

கா.ஸ்ரீ.ஸ்ரீ. எழுதிய முதல் நாவலின் பெயர் 'காந்தம்.' இவர் இந்த நாவலை எழுதி முடித்துப் பல மாதங்களாகியும் கையெழுத்துப் பிரதி அச்சுக்குப் போகவில்லை. கா.ஸ்ரீ.ஸ்ரீ.யின் கோபம் இந்த நாவல் வெளிவர உதவியுள்ளது. எப்படியெனில், கலைமகள் அதிபர் ஆர். நாராயணஸ்வாமி ஐயர் கா.ஸ்ரீ ஸ்ரீ. யைச் சிறந்த நண்பராகக் கருதியவர். கையெழுத்துப் பிரதி அச்சுக்குப் போகாமல் அவரிடமே இருந்தது என்ற மன உறுத்தலில் இருந்த கா.ஸ்ரீ.ஸ்ரீ. ஒருநாள் ஆத்திரத்துடன் ஆர். நாராயணஸ்வாமி ஐயரை அணுகி,நாவல் வெளியீடு தாமதமாவதை நினைவூட்டினார். அவர், ''எத்தனையோ கையெழுத்துப் பிரதிகள் வரிசையாகக் கம்பியில் தொங்குகின்றன. சமயம் வரும்போது உங்களதை எடுத்துக் கொள்வேன்'' என்றார், புன்முறுவலுடன். அவர் பதில் சாதாரணமாக இருந்தும் கா.ஸ்ரீ.ஸ்ரீ அமைதியாக வில்லை. ''நீங்கள் உடனே வெளியிடா விட்டால் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறித் திரும்பிவிட்டார். அடுத்தகணமே ஆர். நாராயணஸ்வாமி ஐயர் கி. வா. ஜ. வை அழைத்துப் பேசினார்; அன்றைக்கே அந்தப் பிரதி அச்சுக்குப் போயிற்று. இராணுவம் ஆயிரம் பிரதி வாங்கிக்கொண்டது. ஏனெனில் இராணுவத்தினர் விரும்பிப் படிக்கும் வகையில்

---

10. கலைமகள். கா.ஸ்ரீ.ஸ்ரீ. (கட்) கலைமகளின் கோயிலிலே, டிசம்பர் 1981, ப. 444

இந்த நாவல் அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும். 1945 ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடாகக் 'காந்தம்' வெளிவந்தது. இரண்டு பதிப்புக்கள் வந்தன.

தாலியைக் கட்டி முடித்ததுமே அதிகப் பணம் கேட்ட மணமகன் வீட்டாரையும், மணமகனையும் எதிர்த்து, என்னை மணக்கிறாயா? பணத்தை மணக்கிறாயா? இந்தா, நீ கட்டிய தாலி' என்று காந்தம் என்ற மணப்பெண் கணவனின் முகத்தில் தாலியை எறிய அது அவன் நெற்றியில்பட்டு இரத்தம் வழிகிறது; பணத்துக்கு ஏற்பாடு செய்யச் சென்ற அவள் தந்தை, ஓர் சமூக ஊழியர், இன்னமும் திரும்பி வர வில்லை. திருமண மண்டபத்திலிருந்து அடுத்த கணமே காந்தம் மறைகிறாள். இப்படி வீராவேசத்துடன் தொடங்கும் நாவலில் காந்தம் பின்பு சமூகத் தொண்டாற்றி வாழ்வதையும் அவளது கணவனின் வருத்தத்தையும் துடிப்பையும் சித்திரித்து, மனத்தத்துவ முறையில் கதையோட்டத்தை அமைத்து இறுதி யில் இருவரும் தியாகத் தவத்தின் பின்பு கூடுவதாக விவரித் துள்ளார். புரட்சி எழுத்தாளர் வ. ரா போற்றிய நாவல் இது.

**காற்றாடி**

கா. ஸ்ரீ. ஸ்ரீ. இரண்டாவதாக எழுதிய நாவல் 'காற்றாடி' முதன்முதலில் கலைமகளில் தொடர்கதையாக வந்த முதல் மூலத் தமிழ் நாவல் இது. 1949 ஆம் ஆண்டு பழனியப்பா பிரதர்ஸ் இந்த நூலை வெளியிட்டுளளனர். மூன்று பதிப்புக் கள் வெளிவந்துள்ளன. பதமநாபன் என்ற இளைஞன் தன் அத்தை மகளைக் காதலிக்கிறான். ஆனால் அத்தைமகள் அவனை அசட்டையுடன் ஒதுக்குகிறாள். அத்தையின் கணவர் இறந்ததும் கிராமத்தில் அவருடைய நிலபுலன்களைப் பத்ம நாபனின் தந்தை கவனித்துக்கொள்கிறார். பெறறோர் ஏற் பாடு செய்த பெண்ணைப் பத்மநாபன் மணக்கிறான் பத்ம நாபனின் தந்தை மீது பல குற்றச்சாட்டுக்களை ஒருவர் வந்து அத்தையிடம் முறையிடவே குடும்ப விரோதம் வளர்கிறது. பத்மநாபன் மணந்தபெண் எப்போதும் நோயாளியாக இருந்து இறக்கிறாள். பத்மநாபனின் தந்தை கிராமத்து வேலையைத்

துறந்தபின்பு, அவர் எவ்வளவு தன்னலமின்றி வயலில் பாடு பட்டுள்ளார் என்பதை அத்தை அறிந்து, குடும்பத்தில் அமைதி ஏற்பட்டு அத்தைமகளைப் பத்மநாபன் கைப்பிடிக்கிறான். வாசகர்கள் போற்றிய நாவல் இது.

**சிறுகதைகள்**

'நீல மாளிகை' என்ற சிறுகதைத் தொகுதி 1946ஆம் ஆண்டு பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகத்தால் வெளியிடப் பட்டுள்ளது. இவருடைய 'அன்னபூரணி' என்ற சிறுகதைத் தொகுதியை 1951 ஆம் ஆண்டு அல்லயன்ஸ் கம்பெனி வெளி யிட்டுள்ளது. முதல் சிறுகதைத் தொகுதிக்குப் புதுமைப் பித்த னும், இரண்டாம் சிறுகதைத்தொகுதிக்கு டாக்டர் மு. வ.வும் முகவுரைவளித்தனர்.

கா. ஸ்ரீ. ஸ்ரீ என்ற பெயரைக் கேள்வியுறும் எவருக்கும் அவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதுதான் நினை வுக்கு வரும். ஆனால் அவர் ஒரு சிறந்த படைப்பாளர் என்பதை அவரது எழுத்துக்களைப் படிக்கும் எவரும் புரிந்து கொள்ளலாம்.

**அல்லயன்ஸ் நூல் வெளியீட்டளாரும் கா ஸ்ரீ. ஸ்ரீயும்**

கா. ஸ்ரீ. ஸ்ரீ என்னும் அறிஞரை அடையாளம் காட்டிய பெருமை கலைமகள், மஞ்சரி இதழ் நிறுவனத்தாரையும், அல்லயன்ஸ் நிறுவனத்தாரையும் சென்று சேரும். "தமிழ்ப் புத்தக வெளியீட்டார்களின் முன்னணியில் கதிரொளி வீசும் படிக் கடும் போராட்டத்துடன் உழைத்து வெற்றி கண்டவர் அமரர் வி. குப்புஸ்வாமி ஐயரவர்கள். அவர் அந்தக் காலத்தில் எல்லா எழுத்தாளர்களையும் ஊக்கமூட்டி எழுத வைத்து வாழச் செய்தார், டிராமில் டவுனுக்குச் செல்லும் போது 'புரூப்' களைத் திருத்தியவாறு அமர்ந்திருப்பார். தமது இறுதி நாளன்று காலையிலும் 'புரூப்'களைத் திருத்திக் கொண்டிருந் தார் அந்த உத்தமர். சுமார் பத்து ஆண்டுகள் தமது வீட்டி லேயே எனக்கு வாழ இடம் கொடுத்து, என் இலக்கியப் பணி

களுக்கு உதவி என் குடும்பத் தலைவராகவே விளங்கினார். அவருடைய மகனார் கே. வி. எஸ். மணியும், பாட்டனாரைப் போலவே நூல் வெளியீட்டுத் தொண்டில் ஆர்வமும் ஊக்கமும் கொண்ட வி. சீனிவாசனும் இன்று அல்லயன்ஸ் கம்பெனியை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு என் நன்றி''[11] என்று கா. ஸ்ரீ. ஸ்ரீ அல்லயன்ஸ் நூல் வெளியீட்டாளரின் ஆதரவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வெளியீட்டாளரின் மூன்று தலைமுறைகளின் தொடர்புகளைப் பெற்றவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. 1940 களில் தொடங்கிய காண்டேகரின் இலக்கியப் பணியை இன்று வரை பல்வேறு இடையூறுகளுக்கிடையே தொடர்ந்து ஊக்கத்துடன் செய்து வருவதாக வி. சீனுவாசன் குறிப்பிடுகிறார். அன்றைய நூல் விற்பனையில் காண்டேகரின் நூல்கள் தமிழ் நாட்டில் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மொழி பெயர்ப்பு மூலமாக, தமிழில் மட்டுமல்லாமல், மராட்டி, இந்தி, வங்காளி, குஜராத்தி ஆகிய மொழிகளில் காண்டேகரின் இலக்கியம் இத்தகைய பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வி.ஸ. காண்டேகர், பங்கிம், சந்திரர், சரத் சந்திரர் ஆகிய மூன்று மாபெரும் இந்திய இலக்கியச் சிற்பிகளின் படைப்புகளை மொழி பெயர்ப்பு வழியாகத் தமிழில் வழங்கி வருவோர் அல்லயன்ஸ் கம்பெனியார்.

காண்டேகரின் 'யயாதி' முதற்பாகம் 1968 ஆம் ஆண்டு வெளிவந்தது. கா. ஸ்ரீ..ஸ்ரீ. நோயில் நலிவுற்ற போதிலும் தன்னுடைய பணியை தொடர்ந்து மேற்கொண்டார். யயாதியின் முதற்பகுதியை மங்கள நூலகத்தார் வெளிக் கொண்டு வந்துள்ளனர்.

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வாசகர்களின் கையில் இருக்க வேண்டிய இந்த நாவல் இவ்வளவு தாமதமாக வெளிவருவதற்கு, என் உடல் நலமின்மையும் என் வாழ்வைச் சார்ந்த பல இடையூறுகளுமே காரணம். மங்கள நூலகத்தார்

---

11. மனோரஞ்சிதம், வி. ஸ. காண்டேகர், (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு, 1988, ப.6,

எனக்கு மேன்மேலும் ஊக்கமூட்டியதனாலும், காண்டேகர் அவர்கள் தமது இயல்பான அன்பினால் பல கடிதங்கள் எழுதி எனக்கு அவ்வப்போது அமைதி விளைத்ததனாலும் இந்த நாவலின் முதற்பாகம் நிறைவேறி இன்று வெளிவருகிறது, இரண்டாம் பாகம் விரைவிலேயே அடுத்து வரும்; வாசகர்களின் பொறுமையை வேண்டுகிறேன்''[12] என்று கா. ஸ்ரீ. ஸ்ரீ 1968 ஆம் ஆண்டு வெளிவந்த யயாதி முதல்பாகத்தின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இடையில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லயன்ஸ் வி. சீனுவாசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க யயாதியின் இரண்டாவது பகுதியை கா. ஸ்ரீ ஸ்ரீ தமிழில் மொழிபெயர்த்தளிதுள்ளார். 1992ஆம் ஆண்டு' யயாதி' முழு நாவலாக அல்லயன்ஸ் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டு உள்ளது ''1983 ஆம்வருடம் நாங்கள் ஒருமுறை கா. ஸ்ரீ. ஸ்ரீ அவர்களின் இல்லத்தில் 'எரி நட்சத்திரம்'' வெளிவந்த சமயம் பேசிக் கொண்டிருக்கும் போது இந்த 'யயாதி'' பற்றிப் பேச்சு வந்தது. அப்போது அவருக்கு இதை மொழிபெயர்ப்பதில் இஷ்டம் இல்லை. ஆனால் நாங்கள் அவரை இடைவிடாமல் தொந்தரவு என்று கூடக் கூறலாம் — கேட்டுக்கொண்டபடி இன்று காண்டேகர் வாசகர்களின் கையில் இப்புத்தம் கிடைக்கச் செய்த, கா. ஸ்ரீ ஸ்ரீ. அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூல் காலத்தால் அழியக்கூடியது அல்ல; எத்தனை முறை படித்தாலும், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு புதிய சிந்தனைதான் தோன்றும். அத்தகைய சிறந்த நூலை எங்கள் வெளியீடாகக் கொணர்வதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்''[13] என்று பதிப்பகத்தார் இந்நூல் வெளியீட்டைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

---

12. யயாதி. வி ஸ. காண்டேகர் (தமி) கா ஸ்ரீ ஸ்ரீ மங்கள நூலக வெளியீடு, 1973. ப. VII.

13. யயாதி. வி ஸ காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு. 1990. ப VI

கலைமகள் அதிபர் ஆர் நாராயணசாமி ஐயர், அவருக்குப் பின் 'கலைமகள்' 'மஞ்சரி' ஆகிய பத்திரிகைகளை விளங்க வைத்தவரும், அவருடைய புதல்வருமான என். ராமரத்னம், அல்லயன்ஸ் புத்தக வெளியீட்டாளர்கள் வி. குப்புஸ்வாமி ஐயர், கே.வி.எஸ். மணி, வி.சீனுவாசன் ஆகியோர் கா.ஸ்ரீ.ஸ்ரீ யின் மொழிபெயர்ப்பிற்கு ஒத்துழைப்பு நல்கினர். மேலும் கி. வா. ஜ வின் ஆதரவையும் வாழ்வில் நெடுங்காலம் பெற்று வாழ்ந்தவர். இவர்களின் ஆதரவை இன்றும் நினைவு கூர்ந்து போற்றி வருகிறார் அறிஞர் கா.ஸ்ரீ.ஸ்ரீ.

## மொழிபெயர்ப்பு

மராட்டிய இலக்கியம் தமிழில் இடம் பெறவும், தமிழிலேயே எழுதும் எழுத்தாளர்கள் மராட்டிய இலக்கியத்தைப் பின் பற்றும் வகையில் ஒரு பெரும் தாக்கம் ஏற்படவும் காரணமாக இருந்தவர் அறிஞர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. மராட்டிய இலக்கியச் சிற்பி யான வி.ஸ. காண்டேகரை தமிழறிந்தோர் அறிந்து கொள்ள கா.ஸ்ரீ.ஸ்ரீ தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். ''காளி தாசனைப் பற்றித் தெரிந்து கொள்ளாத தமிழர் சிலர் இருக்க லாம்; ரவீந்திரருடைய நூல்களைப் படிக்காதவர்களும் இருக்கக் கூடும். ஆனாலும் கதைகளைப் படித்து இன்புறும் அன்பர் களின் உலகத்தில் காண்டேகரைப் பற்றித் தெரிந்து கொள்ளாத வர்கள் இருக்க முடியாது. அவ்வளவு தூரம் காண்டேகரின் கதைகளும் நாவல்களும் தமிழ்மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்கின்றன. மராட்டிய மொழியில் அவருடைய படைப்புக்களைப் படித்துச் சுவைத்தவர்களை விட அதிகமான அன்பர்கள் இந்த நாட்டில் அவற்றைப் படித் துச் சுவைத்திருக்கிறார்கள். அயல்மொழி எழுத்தாளர் என்று நினையாமல், தமிழிலேயே மூலத்தை எழுதியவராகவே தமிழ் மக்களின் உள்ளத்தில் அவர் தோற்றம் அளிக்கிறார். அத் தகைய நிலைக்குக் காரணம் அவருடைய எழுத்து தமிழ்மக்க ளின் உள்ளத்துக்கு உகப்பாக இருப்பது மட்டும் அன்று; அவற் றைத் தமிழாக்கித் தந்த அன்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழி

பெயர்ப்பாற்றலும் முக்கியமான காரணம். காண்டேகரும் கா.ஸ்ரீ ஸ்ரீ யும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டவர் அல்லர். புறக்கண்ணால் காணாவிட்டாலும் அகக்கண்ணால் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதய உணர்ச்சியைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பரிமாறலின் விளைவாக நாம் எழுத்து வடிவில் தமிழ்நாட்டில் உலவும் காண்டேகரிடம் அபாரமான காதலும் மதிப்பும் வைத்திருக்கிறோம்''[14] என்று கூறுகிறார் கி. வா. ஜகந்நாதன்.

மொழிபெயர்ப்புத் துறையில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. ஆற்றியுள்ளபணி ஈடு இணையற்றது. கா.ஸ்ரீ.ஸ்ரீ. யின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த, கதை கட்டுரைகள் நூற்றுக்கணக்காவை. அவை தினசரி, வாரமாத இதழ்களில் இடம்பெற்றுத் தமிழ் நாட்டு வாசகர்களிடையே பரவலாகச் சென்றடைந்தன. குறிப்பாக இவருக்கு மாபெரும் வாசகர்களின் வரவேற்பைப் பெற்றுத்தந்தவை வி.ஸ. காண்டேகரின் படைப்புகளே!

**வி.ஸ. காண்டேகரின் நூல்களைத் தேர்ந்தெடுக்கக் காரணம்.**

பொதுவாக மொழிபெயர்ப்பாளர், தாம் படித்தது, தமக்குப் பிடித்தது, தம் கொள்கைகளுக்கு உட்பட்டது, பெரும்பான்மை மக்களால் பாராட்டப் பெறுவது, படிக்கப் பெறுவது, புகழ் பெற்றது என்ற வகையில் ஏதாவதொரு காரணத்திற்காக மொழிபெயர்ப்பதற்குரிய நூல்களைத் தேர்வு செய்கின்றனர்.

''எந்த ஒரு மொழிபெயர்ப்பாளரும் எந்த ஓர் அயல்மொழி நூலையும் காரணமில்லாமல் மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுப்பதில்லை. ஒன்று மொழிபெயர்ப்பாளர் தமக்கும் தாம் தேர்ந்தெடுத்திருக்கும் நூலுக்குமுள்ள கருத்து ஒற்றுமையால் கவரப்பட்டிருக்கலாம். அல்லது மொழிபெயர்ப்பு அந்தக் கால மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நினைத்திருக்கலாம். இவ்வாறு ஒருமொழிபெயர்ப்பு வேற்றுமொழி நூல்களுக்

---

14. ஆஸ்திகன், வி, ஸ. கண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி, 1976. ப V

தும், தாய்மொழி நூல்களுக்குமிடையே ஒரு சிறந்த இடைத் தொடர்பாகப் பணிபுரிகிறது."[15]

கா.ஸ்ரீ.ஸ்ரீ, காண்டேகரின் படைப்புகளைத் தேர்ந்தெடுத் தற்கான காரணம் இங்கே கூறப்பட்டுள்ள எல்லா வரையறை களையும் உள்ளடக்கியது.

"1941 இல் ஒருநாள் காலை; அது மிக்க நன்னாளாக இருந்திருக்க வேண்டும் மராட்டிய எழுத்தாளராயினும் அகில இந்திய இலக்கியத்தில் வால்மீகி, வியாசர், காளிதாசர், ரவீந்திரர் முதலியோருடன் விளங்கக் கூடிய மாமேதை என்று நான் நிர்ணயித்த வி.ஸ. காண்டேகரின் படைப்புகளை அன்றைக்குத் தமிழில் வலிமையும் ஒளியும் கூர்ச்சியும் கூட்டி னேன். இன்றும் அந்தப் பணி தொடர்கிறது"[16] என்று கூறும் கா.ஸ்ரீ.ஸ்ரீ, காண்டேகருக்குரிய தனிச்சிறப்பும் தனித்தன்மையும் ஒரு முக்கியக் காரணம் என்றுரைக்கிறார்.

"காதலை ரசமயமாக்கி மிகவும் உச்சத்தில் கொண்டுபோய் நிறுத்தி. ஜாலவித்தைகளைச் செய்யும் திறன் பங்கிம் சந்திர ருக்கு உண்டு. அவருடைய சில நாவல்களைப் படிக்கும்போது, அடே! இவ்வளவு மோசமான ஒரு கதையைக் கூட நம்மைப் படிக்கும்படிச் செய்துவிட்டாரே! என்று நாம் வியக்காமல் இருப்பதில்லை. ரவீந்திரர் வேதரிஷிகளைப் போல மந்திரம் கண்டவர் பாரதநாட்டுக் கலைப்பண்பின் நுணுக்கங்களை அறிந்தவர். மேல்நாட்டு நாகரிகத்திலும் நன்கு பழகியவர். இரண்டையும் கலந்து அவர் நம்மை ஒரு மாய உலகில்கொண்டு போய் விடுகிறார். 'உலகிலுள்ள உயர்ந்த பொருள்கள் யாவும் எங்களுடையனவே' என்று கூறிக்கொண்டு இறுமாப்பும்

---

15. ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்), வை. சச்சிதானந்தன் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், சென்னை. 1985 ப. 166

16. ஆஸ்திகன், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4, 1976 ப. III

கிறுக்கும் பிடித்து உலவும் ஒரு வர்க்கத்தை அவர் வெகுவாக சித்திரிக்கிறார். பாரத நாட்டுப் பெண்களின் உயர்வையும் அமுக்கப்பட்டவர்களின் முனகல்களையும் சரத்சந்திரர் காண்கிறார். நாவல்களின் கட்டுக்கோப்பும் உணர்ச்சித் திறனும் அவரிடம் நன்கு அமைந்துள்ளன. கிராம சமூகத்தையும், நவநாகரிகத்துக்கும் பழமைக்கும் இடையே அல்லற்படும் மத்திய வகுப்பாரையும் தம் கூரிய கண்களால் ஆராய்ந்து, லட்சியமும் உண்மை வாழ்வும் கலந்த கலையை நிருமித்தார் பிரேம்சந்த். இவர்கள் மூவரும் பார்த்தும் கடந்து போய்விட்ட ஒரு பாதையில் இன்று நம்மிடையே வாழும் எழுத்தாளர்களில் பிரமுகரான வி.ஸ. காண்டேகர் செல்கிறார். அன்பு—சிறப்பாகக் காதல் தான் அவருடைய விஷயம். அன்பினால்தான் உலகை ஆள முடியும் என்பது உண்மையாக இருக்குமானால் வி.ஸ. காண்டேகர் அன்புலகப் பூங்காவில் ஒரு ராஜகுமாரனைப் போல உலாவுவதில் சிறிதும் ஆச்சரியம் இல்லை''[17] என்று காண்டேகருக்கு உரிய இந்தத் தனிச் சிறப்பின் காரணமாகக் கா. ஸ்ரீ. ஸ்ரீ. காண்டேகரைப் பெரிதும் போற்றுகிறார். அத்துடன் காண்டேகர் என்ற படைப்பாளியின் இலக்கியப் பொறுப்புணர்வையும் சமுதாய உணர்வையும் மதித்துப் போற்றினார் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

'நல்ல உயர்ந்த இலக்கியம் என்பது எழுத்தாளனது ஆன்மாவின் வெளிக்குரல். அந்த ஆன்மா சிலசமயம் உலகத்துத் துயரங்களைக் கண்டு இரக்கமற்றுக் கலங்குகிறது; சிலசமயம் அநீதிகளை எதிர்த்துக் கொதித்துப் புரட்சிக் கோஷத்துடன் போராடுவதற்கு முனைந்து நிற்கிறது; சிலசமயம் வாழ்விலுள்ள சிறுமையையும் முட்டாள்தனத்தையும் கண்டு எள்ளி நகையாடுகிறது. சிலசமயம் அதைச் சீர்திருத்துவதற்குப் பாடு படுகிறது. ஆன்மாவின் இந்த வெளிக்குரல் பல வகையானது. விதம் விதமான அழகிய உருவங்களில் அது வெளிவருகிறது. இந்த ஒவ்வோர் ஆன்மாவும் இலக்கியம் படைப்பதைத் தனது

---

17 ஆஸ்திகன், வி. ஸ காண்டேகர். (தமி) கா ஸ்ரீ. ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4, 1976, ப. II

கடமையாகக் கருதுகிறது. பணமீட்டும் தொழிலாக அல்ல. ஒருவரது கட்டளையினால் எழுதுவது. ஒரே வகையான வார்ப்பில்-அமைப்பில் எழுதுவது, மக்கள் வாங்கிப் படிக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் விரும்புவதை எழுதுவது, சமூகத்திலுள்ள தீமைகளைத் தேர்ந்தெடுத்து 'இது வாழ்க்கை ஓவியம்' என்று கூறிச் சமாதானம் சொல்வது, இவையெல்லாம் இந்த ஆன்மா விரும்பாதவை. இதனால் எழுத்தாளன் நிறைய எழுதக் கூடாது என்று கருத்தல்ல. அவனது எழுத்து, ஆர்வத்துடன் இதய உந்தலினால் எழுச்சிப் பெற்று அமைந்ததாக இருக்கவேண்டும். வெறும் கூத்தாடும் பொம்மைகளையே அவன் படைத்துக் கொண்டிருக்கக்கூடாது. தன் படைப்புகளுக்குத் தக்க மதிப்பையோ வெகுமதியையோ அவன் பெறக் கூடாது என்பதுமில்லை. எழுத்தாளன் சமூகத்தை மகிழ்வித்து, அறிவூட்டி, உயர்த்துகிற மிகச் சிறந்த நண்பனாவான். இத்தகைய நண்பனை வாழச் செய்வது சமூகத்தின் கடமையே ஆகும். ஆனால், சமூகம் இந்த விஷயத்தில் தன் கடமையில் பெரிதும் ஊக்கமுறவில்லை என்ற கசப்பான உண்மை யாவரும் அறிந்ததே''[18] என்று வி. ஸ. காண்டேகர் ஒரு படைப்பாளியின் இலக்கியப் பொறுப்பினைப் பற்றிக் கூறுகிறார். இலக்கியப் பொறுப்பு என்பது சமூகக் கடமையுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகக் காண்கிறார் வி. ஸ. காண்டேகர். மக்கள் சமூகத்தின் துன்ப, துயரங்களை எடுத்துச் சொல்லவும். அக்குறைகளைப் போக்குவதற்கான வழிமுறைகளை அவர்களுக்குச் சொல்லவும், ஆற்றல் வாய்ந்த கருவியாக இலக்கியத்தை கையாளவேண்டும் என்பதற்கு முன் மாதிரியாக திகழ்ந்தவர் வி ஸ. காண்டேகர். மராட்டியில் புகழ்வாய்ந்த இலக்கியங்களை கா. ஸ்ரீ. ஸ்ரீ தமிழ்மொழியில் மொழி பெயர்த்து வழங்குவது தன்னுடைய சமூகக் கடமையாகக் கருதினார். 1942ஆம் ஆண்டு தொடங்கிய இம்மொழி பெயர்ப்புப் பணியை இன்றுவரை தொடர்ந்து செய்து வருகிறார் அறிஞர். கா. ஸ்ரீ. ஸ்ரீ.

---

18. மனோரஞ்சிதம், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4, பதி செ. 1988, ப. 3.

**கா. ஸ்ரீ. ஸ்ரீயைப் பற்றிக் காண்டேகர்**

ஒரு படைப்பாளர், தனது படைப்பை மொழிபெயர்த்த ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பற்றி பாராட்டி எழுதுதல் அரிதாகவே தென்படுகிறது. காலம், இடம், சூழல் வேறுபாடு இதற்குக் காரணமாக இருக்கலாம். காண்டேகர், கா.ஸ்ரீ.ஸ்ரீ யைப் பறறி 'யயாதி' என்ற நூலின் முன்னுரையில் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதம் பின்வருமாறு:

அன்புள்ளம் வாய்ந்த தமிழ் வாசகர்களே!

என் புதிய நாவல் யயாதியை உங்களுக்குக் காணிக்கை யாக அளிக்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு என் புத்தகங் களைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தி அங்கு ஏராளமான நண்பர்களை எனக்கு அளித்தவர் கா. ஸ்ரீ ஸ்ரீ அவர்களே. சிறந்த மொழிபெயர்ப்பாசிரியர் ஒரு பாலத்தைப் போன்றவர் என்று நான் எப்பொழுதும் நம்புகிறவன்.

கா.ஸ்ரீ.ஸ்ரீயின் பணி இல்லையென்றால் அடக்கத்துடன் ஒதுங்கி வாழும் இயல்புள்ள என் வாழ்வில் இன்று கிடைத் திருக்கும் பெருமகிழ்ச்சியையும் ஆறுதலையும் நான் இழந்திருப் பேன். தமிழ்நாட்டிலிருந்து எனக்குக் கிடைத்திருக்கும் அன்புக் கடிதங்களினாலும் நேரில் வந்து என்னைக் கண்டு பேசிய பல நண்பர்களினாலும் நான் பெற்ற இன்பம் விவரிக்க இயலாதது.

இலக்கியம் காலத்தைக் கடந்தது; நாடுகளின் எல்லை களைக் கடந்தது. திருவள்ளுவரும், டால்ஸ்டாயும், சுப்பிர மணிய பாரதியாரும், சரத்சந்திர சட்டர்ஜியும் தமிழ்நாட்டுக் கும் ருஷ்யாவுக்கும் வங்கத்துக்கும் மட்டும் உரியவர்களல்ல; அவர்கள் உலகனைத்துக்கும் உரியவர்கள். வாழ்விலுள்ள ஜீவனின் ஒளியை அவர்கள் தாங்கிச் செல்கிறார்கள். அவர் கள் அனைவரும் ஒரே குரலில் 'மனிதகுலம் வெல்லும்' என்று பாடுகிறார்கள்.

எழுத்தாளன் என்ற முறையில் என்னுடைய எல்லை எனக்குத் தெரியும். ஆயினும், நான் மிகப்பெரிய இலக்கிய மகாரதர்களின் திருவடிகளில் அமர்ந்து இலக்கியத்தைப் பயின்றிருக்கிறேன், என்னுடைய எளிய பாடலை என் பலவீனக் குரலில் இசைக்க முயன்றிருக்கிறேன்.

என் அன்பார்ந்த நண்பர்களே உளங்கனிந்து தாங்கள் அளித்த பாராட்டுக்களைப் பெற்ற எனக்கு, என் உணர்ச்சியை வெளியிடுவதற்கு ஏற்ற சொல் கிடைக்கவில்லை, நான் என்றும் நன்றியுடன் உங்களது இந்த அன்பைப் போற்றிப் பாதுகாப்பேன்.

மங்கள நூலகத்தார் யயாதியை மிகவும் அழகிய வடிவில் ஆவலுடன் வெளியிட்டிருக்கிறார்கள். இலக்கியத்தில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை அனைவரும் அறிவர். அவர்களுக்கு என் நன்றி உரியது. வாசகர்கள் இந்த நாவலை வரவேற்றுப் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் நண்பன்
வி. ஸ. காண்டேகர்

இக்கடிதம் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் அயராத அறிவு உழைப்பை வி. ஸ. காண்டேகர் நெஞ்சம் நெகிழ்ந்து பாராட்டியதற்குச் சிறந்த சான்றாகும்.

காண்டேகர் மராட்டியில் எழுதிவரும் 'ஓர் இலையின் கதை' என்ற தமது சுயசரிதையில் கா. ஸ்ரீ. ஸ்ரீயைப் பற்றி கருத்துரை வழங்கியுள்ளார். காண்டேகரின் நாவல்கள், சிறுகதைகளைத் தமிழில் படிக்கும் வாசகர்கள் இப்பகுதியைப் படிக்கும்பொழுது கா. ஸ்ரீ. ஸ்ரீயின் மேன்மையை உணருவர். 'இதோ பாலம்!' என்பது அப்பகுதியின் தலைப்பு.

"மொழி அமைப்பிலும் இலக்கிய வழக்கிலும் ஹிந்தி, குஜராத்தி முதலியவை, தமிழைவிட மராட்டிக்கு மிகவும்

அருகில் உள்ளவை; ஆனால், ஹிந்தியில்நடக்காதஅதிசயத்தைத் தமிழாக்கம் இயல்பாகவும் சுலபமாகவும் சாதித்துக் காண்பித்தது, முப்பந்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, என் நூல்களைத் தமிழில் ஆக்க அனுமதி கேட்டு ஒரு கடிதம் வந்தது—தூய மராட்டியிலே! அதை எழுதியவர் சிறுவயதில் தந்தையின் வேலை நிமித்தமாகப் பம்பாயில் இருந்ததனால் மராட்டியில் பழக நேர்ந்தது, பிறகு அவர் இந்த மொழியறிவைத் தாமே நன்கு வளர்த்துக்கொண்டார். எனது இலக்கியத்தைத் தமிழிலாக்கித் தமிழ் மக்களிடையே எனக்கு நிறைந்த புகழையும் பிரியத்தையும் திரட்டித் தந்த அவரே கா. ஸ்ரீ. ஸ்ரீ. எந்த மொழியின் அ ஆ இ ஈ கூட எனக்குத் தெரியாதோ அநத மொழி பேசுவோரின் வீடுகளில் என்னை அவர் கொண்டுவிட்டார்.

கா.ஸ்ரீ.ஸ்ரீயின் தமிழாக்கம் வெளிவந்த பின்பு, பல மாணவ மாணவியரும், இளைஞரும் முதியோரும் எனக்குக் கடிதம் எழுதலாயினர். இவை ஆங்கிலத்தில் இருக்கும். 'மை டியர் ஃபாதர்' என்று ஒரு பெண்ணின் கடிதம் தொடங்கும் ,ஏதேனும் ஒரு மொழியைக் கருவியாகத் கொண்டு மிகமிகத் தொலைவில் சென்று ஒளிகொடுக்கும் மின்சக்தி இலக்கியத்துக்கு உண்டு' என்ற உண்மையை நான் உள்ளூர உணரலானேன். உல்கா, வத்ஸலா, சுலோசனா முதலிய என் கதாநாயகிகளைப்பற்றி இந்தக் கடிதங்களில் பலவகைக் கேள்விகள் இருக்கும். இந்தக் கற்பனைக் கன்னியர் என் வீட்டிலேயே வளைய வருவது போலவும், இவர்களின் இன்ப துன்பம் பற்றிய அனைத்தையும் நெடுந்தொலைவில் உள்ளவர்களுக்குச் சொல்வது எனக்கு எளிது போலவும் இந்த வினாக்கள் எழுப்பியவர்களுக்கு எண்ணம்!

மராட்டிய எழுத்தாளனான எனக்கும் தமிழ்வாசகருக்குமிடையே உதித்த இந்த அரிய நட்பு, கடிதங்களுடன் நிற்கவில்லை. கோல்ஹாப்பூர் எங்கிருக்கிறது என்பதை முன்பு அறிந்திராத பலர், என்னை நேரில் காணவந்தனர். இங்கு வரும் தமிழர் என்னுடனேயே இருப்பர். எங்கள் பேச்சு அனைத்தும் ஆங்கிலத்தில்தான்; ஆனால் ஒரே நிமிஷத்தில்

அவர்கள் எங்களுடன் ஒன்றிவிடுவர். நட்பை வளர்க்கும் கலையில் மராட்டியர் எவ்வளவு பின்னடைந்தருக்கிறார்கள் என்ற கசப்பான உண்மை எனக்குப் புலப்படும். மூன்று வருஷங்களுக்கு முந்திய ஒரு நிகழ்ச்சி; வீட்டை விட்டு வெளிக் கிளம்ப யாரும் துணிய முடியாதபடி அடைமழைக்காலம்; மாலை நேரம்: இந்த முகூர்த்தம் பார்த்து, என்னிடம் அன்புள்ள தமிழிளைஞன் ஒருவன் வாசலில் வந்து நின்றான்; தனியே அல்ல, தன்புதுமண மனைவியுடன் என் ஆசியை வேண்டி அவர்கள் வந்திருந்தனர். இப்படித் தமிழ் வாசகர்களுக்கு என்னிடமுள்ள அன்பு பலவகை உருவம் கொண்டது,

விசாலமான நமது பாரத நாட்டில் பெருஞ்சாலைகளிலும் ரெயில் வழிகளிலும் பாலங்களைக் கட்டுவதனால் மட்டும் ஒற்றுமையை உண்டாக்கிவிட முடியாது. இனம், மொழி, மாநிலம், பண்பாடு முதலிய பிரிவுகளினால் வேறுபட்டுள்ள மாந்தரின் உள்ளங்களை இணைத்து, அவர்களின் உணர்வில் ஒருமையைப் படைக்கும் உறுதியான பாலங்கள் நமக்குத் தேவை. சிறந்த இலக்கிய மொழிபெயர்ப்பாளர்தாம் இத்தகைய பாலங்களை அமைக்க வல்லவர்கள். தமிழில் கா.ஸ்ரீ ஸ்ரீ. எனக்கு இவ்வாறு கிடைத்திருப்பது எனது பெரும் பாக்கியம்.''[19] என்று வி.ஸ. காண்டேகர், கா.ஸ்ரீ.ஸ்ரீயைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் வாசகர்களைப் பொறுத்த மட்டில் வி.ஸ.காண்டேகர் என்றால் கா.ஸ்ரீ.ஸ்ரீயும், கா.ஸ்ரீ ஸ்ரீ என்றால் வி.ஸ. காண்டேகரும், நினைவுக்கு வருவர். இருவரையும பிரித்து பார்த்தல் இயலாதது.

**தமிழில் காண்டேகரின் நாவல்கள்**

காண்டேகர் மராட்டியில் எழுதிய 15 நாவல்களில் 13 நாவல்களை கா.ஸ்ரீ.ஸ்ரீ தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வெறுங்கோயில் (1942), சுகம் எங்கே? (1943), கருகிய மொட்டு (1943), புயலும் படகும் (1943), எரிநட்சத்திரம் (1944), இரு

19. ஆஸ்திகன், வி.ஸ. காண்டேகர், (தமி). கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1976. ப. VII-VIII.

துருவங்கள் (1945), மனோரஞ்சிதம் (1950), இருமனம் (1951), கிரௌஞ்சவதம் (1952), வெண்முகில் (1953), அமுதக்கொடி, (1978) யயாதி (முதல் பகுதி - 1968) யயாதி முழுமையாக (1990) கண்ணீர் (1991) ஆகியன பெயர்களில் கா.ஸ்ரீ ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளன. ஹ்ருதயாசி ஹாகா (இதயக் குரல்), காஞ்சன் மிருக் (தங்கமான்) ஆகிய இரண்டும் மொழிபெயர்க்கப்படவில்லை.

இவற்றுள் வெறுங்கோயில், சுகம் எங்கே? கருகியமொட்டு, புயலும் படகும், இருமனம், கிரௌஞ்சவதம், வெண்முகில், ஆகியன கலைமகள் வெளியீடாகவும். எரிநட்சத்திரம், இரு துருவங்கள், மனோரஞ்சிதம், அமுதக்கொடி; யயாதி (முழுமை யாக) கண்ணீர் ஆகிய அல்லயன்ஸ் வெளியீடாகவும் வெளி வந்தன. புயலும் படகும், கிரௌஞ்சவதம், அமுதக்கொடி ஆகிய மூன்று நாவல்கள் கலைமகள் இதழில் தொடர்கதையாக வெளிவந்தனவாகும். 'வெண்முகில்' குமுதம் இதழின் முதல் ஆண்டில் 1953 ஆம் வருடம் தொடர்கதையாக இடம் பெற்றது. காண்டேகர் அளித்த தலைப்புகளை அப்படியே நேர் மொழிபெயர்ப்பாக தமிழில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. வழங்கியுள்ளார். 'பஹிலே ப்ரேம' என்ற நாவல் மட்டும் 'புயலும் படகும்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. 'பஹிலே ப்ரேம' என்றால் தமிழில் முதற்காதல் எனப்படும்.

இவ்வாறு 1942 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை தமிழில் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் காண்டே கரின் நாவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

### சிறுகதைத் தொகுதிகள்

காண்டேகர் மராட்டியில் சுமார் 300 சிறுகதைகள் எழுதி யுள்ளார். இவற்றுள் 150 சிறுகதைகள் கா ஸ்ரீ.ஸ்ரீ.யின் மொழி பெயர்ப்பில் வெளிவந்துள்ளன. இவை 14 சிறுகதைத் தொகுதி களாக வெளிவந்துள்ளன. கூட்டுக்கு வெளியே (1943) அரும்பு

(1945), கறுப்பு ரோஜா, (1950) ஓடும் ரெயிலிலே (1950) கோடைமழை (1951), ஜமீன்தார் மாப்பிள்ளை (1951), கள்ளக் காதலி (1951), கண்ணாடி அரண்மனை (1952), இருபது ஜூன் (1952), மிஸ் லீலா (1952), நந்தவனம் (1953), ஆஸ்திகன் (1976), கவியும் கனியும் (1967), வாயு கன்னிகை (1968), ஆகிய தலைப்புகளில் காண்டேகரின் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவற்றுள் கூட்டுக்கு வெளியே, அரும்பு ஆகியன கலைமகள் வெளியீடாகவும், கறுப்புரோஜா, ஓடும் ரெயிலிலே, கோடை மழை, ஜமீன்தார் மாப்பிள்ளை, கள்ளக்காதலி, கண்ணாடி அரண்மனை, இருபது ஜூன், மிஸ்லீலா, நந்தவனம், ஆகியன அல்லயன்ஸ் வெளியீடாகவும வெளிவந்துள்ளன. 'ஆஸ்திகன்' என்ற சிறுகதைத் தொகுதி கா.ஸ்ரீ ஸ்ரீ.யின் சொந்த வெளியீடாகும், கவியும் கனியும், வாயுகன்னிகை என்ற இரண்டு கதைத் தொகுதிகள் மங்கல நூலக வெளியீடுகளாகும். இவையல்லாமல் காண்டேகரின் கட்டுரைத் தொகுதி ஒன்று, 'முதல் நாள்' என்ற தலைப்பில் 1952 ஆம் ஆண்டு அல்லயன்ஸ் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

காண்டேகரின் சிறுகதையை மஞ்சரி இதழில்தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளார். 'வாழும் சிற்பம்' என்ற சிறுகதையை அறிமுகப்படுத்தும் பொழுது, 'மராட்டி ஆசிரியர் காண்டேகர். ஆனால் அவருடைய நாவலகள் தமிழ் மொழி பெயர்ப்பில் தமிழ்வாசகர்களிடம் பெருஞ்செல்வாக்கு பெற்று விட்டது. நாவல்கள் மட்டுமல்ல அருமையான சிறுகதைகளும் அவர் எழுதியிருக்கிறார். அவையும் அலாதியான பாணிதான் இதோ ஒன்று [20] என கா.ஸ்ரீ.ஸ்ரீ. அறிமுகப்படுத்தியுள்ளார். தொடர்ந்து அகஸ்தியன வருகிறான் சாபநீக்கம், முதற் காதல், இருபது ஜூன், வீட்டு விளக்கு, கல்லும் கனியும் போன்ற சிறு கதைகள் கா.ஸ்ரீ ஸ்ரீ. யின் மொழி பெயர்ப்பில் இடம் பெற்றன. இவ்வாறு கா ஸ்ரீ ஸ்ரீ தொடர்ந்து காண்டேகரின் படைப்பு களைத் தமிழில் தருவதில் வெற்றி பெறறுக் கொண்டிருந்தார்.

---

20. மஞ்சரி, சன, 1950, ப. 74

# கா. ஸ்ரீ.ஸ்ரீ யின் மொழிபெயர்ப்பு நோக்கும் போக்கும்

ஒருவரின் உள்ளத்தில் எழும் எண்ணங்களை உணர்வுகளை, மற்றவருக்கு தெரிவிக்கவும், கருத்துகளை பகிர்ந்து கொள்ளவும் மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற சிந்தனை எழுந்தபோது மனிதனுக்கு மொழிபெயர்ப்பின் தேவை புரிந்தது. இந்த வளர்ச்சிப் பாதையின் மூலம் மனிதன் எந்த செய்தியையும் எந்த மொழியினரிடத்தும் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். மொழிபெயர்ப்பு என்பது ஓர் அரிய பணி. ஒரு மொழியில் உள்ள மூலநூலின் கருத்து, வடிவம், மொழிநடை, உத்தி ஆகிய அனைத்தையும் பிறிதொரு மொழியில் பெயர்த்து எழுதுவது மொழிபெயர்ப்பு என வரையறுக்கப் பட்டாலும் இதில் முழுமையான வெற்றி கிட்டுவது அருமையிலும் அருமையாகி விடுகிறது.

ஒரு மொழியில் உள்ளதை விளங்கிக் கொள்கிற அறிவும், அதை மற்றொரு மொழியில் விளக்கிக் காட்டுகிற திறனும் பெற்றவரே மொழிபெயர்ப்பாளர்.

படைப்பாளனுக்கும், மொழிபெயர்ப்பாளனுக்கும் அடிப்படையில் சில ஒற்றுமைகளும், சில வேற்றுமைகளும் உண்டு. மூல நூலாசிரியரின் நோக்கம், தான் நினைத்த ஒரு பொருளைப் பற்றி அதன் தொடர்பாக எழுகின்ற கருத்துக்களைக் கோவையாக்கி, காரணகாரிய முறையில் நெறிப் படுத்தி, கற்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அல்லது மனத்தில் பதியும் வண்ணம் எழுத வேண்டும். தன்னை வெளிப் படுத்துதல் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துதல், படைப்பை ஏதாவதொரு வடிவத்தின் வாயிலாக வெளிப்படுத்துதல் ஆகியன மூலநூலாசிரியரின் நோக்கமாகும். மூல நூலாசிரியரின் நோக்கம் வலியுறுத்தும் கருத்து அக்கருத்தில் பொதிந்துள்ள

உணர்வு ஆகியவற்றை மொழிபெயர்ப்பில் கொணர்தல் என்பது மொழிபெயர்ப்பாளனின் நோக்கம், ஆகையால் மூல நூலாசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் உள்ள நோக்கம், வாசகர், வழிமுறை, இடம், காலம் ஆகியன பொதுப்படையில் இருவருக்கும் உரிய ஒன்று எனினும், மூலநூலாசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் தனித்தனி நிலையில் அவரவருக்கு ஏற்ப வேறுபாடு நிலவுகின்றது.

படைப்பாளன் சுதந்திரமான பறவை போலத் தான் நினைத்ததை தனது மொழியில் அல்லது தானறிந்த மொழியில் எழுதிக் கொள்ளலாம். மொழிபெயர்ப்பாளனின் நிலை அப்படியல்ல. சிறைக்கம்பிகளுக்குள்ளே அடைபட்டுச் சுற்றி வரும் பறவையின் நிலைபோல ஆகிவிடுகிறது. மொழி பெயர்ப்புப் பணி சிக்கலானது, சோர்வடையச் செய்வது என்பது மொழிபெயர்ப்புப் பணியில் உள்ளவர்களுக்குத்தான் தெரியும்.

காண்டேகரை மொழிபெயர்த்த கா.ஸ்ரீ. ஸ்ரீயின் அனுப வமும் இத்தகையதே. ''மொழிபெயர்ப்பு எனபது முட்பாதை. நெருஞ்சிமுள்ளும் நாகதாளியும் நிறைந்தது. இதில் நடந்து இலட்சியத்தை எட்டுவது மிகவும் சிரமம். தவிரவும் மூல நூலாசிரியருக்குக் கிடைக்கும் மதிப்பு மொழிபெயர்ப் பாளருக்குக் கிடைப்பதில்லை. ஆனால் விதிவிலக்காகத் தமிழகத்தில் மூல ஆசிரியரான காண்டேகருக்குக் கிடைத்த மேன்மை எனக்கும் கிடைத்தது. தமிழ் வாசகர்கள் என்னிடம் மிக்க அன்பும் பரிவும் கொண்டிருந்தார்கள்''[21] என கா.ஸ்ரீ ஸ்ரீ குறிப்பிடுகிறார்.

கடந்த அய்ம்பது ஆண்டுகளாக மொழிபெயர்ப்புப் பணி யில் உற்சாகமாக ஈடுபட்டுவரும் உழைப்பாளியான கா. ஸ்ரீ. ஸ்ரீ இக்கடின முயற்சியில் வெற்றிபெற்றவர் மொழிபெயர்ப் புப்பணி எவ்வளவு கடினமானது நுணுக்கமானது என்பதைக் கா. ஸ்ரீ ஸ்ரீ தமது அனுபவத்தில் உணர்ந்து கூறுகிறார்.

21. கா. ஸ்ரீ. ஸ்ரீ இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம் 30-9-1993.

"மொழிபெயர்ப்பு என்பது ஓர் நுண்கலை (Fine Art) பாட்டில் பிசிறு தட்டினால் இசை சிறக்காது, நாட்டியத்தில் ஓர் உணர்ச்சிக்குப் பதிலாக வேறோர் உணர்ச்சியை அபிநயித்தால் நாட்டியம் சிறக்காது. அதுபோலவே மொழிபெயர்ப்பில் ஒவ்வொரு சொல்லும் அங்கங்கே பொருத்தமாக அமையவேண்டும். மூல ஆசிரியர் சமைப்பதற்கு வேண்டிய பண்டங்களைக் கொடுக்கிறார். அந்தப் பண்டங்களைக் கொண்டு மொழிபெயர்ப்பைச் சுவைபட அமைப்பது மொழிபெயர்ப்பாளரின் திறமை. சமையலில் உப்போ புளிப்போ காரமோ சிறிது குறைந்தாலும் அதிகமானாலும் உணவை யாரும் சீந்தமாட்டார்கள். மொழிபெயர்ப்பைப் படிக்கையில் எங்கும் தங்குதடையின்றி வாசகம் வேகமாகச் செல்லவேண்டும். இல்லையென்றால் தடை வந்ததுமே வாசகன் புத்தகத்தை மூடி வைத்துவிடுவான். மொழிபெயர்ப்பு என்பது ஒரு நூலை ஆழ்ந்து படிப்பதாகும். மொழியாக்கத்துக்குத் தேவையான கருவிகளை மொழிபெயர்ப்பாளன் முன்னமே சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். மொழிபெயர்ப்பு என்பது எளிதான செயல் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது ஓர் கடுந்தவம். என் தமிழாக்கங்களில் மூல ஆசிரியர் தமிழில் எழுதினால் எப்படிச் சொற்களை அமைப்பாரோ அது போலவே மிகவும் ஆழ்ந்து சிந்தித்தே சொற்களைப் பயின்றிருக்கிறேன். ஆங்காங்கே விளக்கம் கொடுக்க வேண்டிய இடங்களில் அடிக்குறிப்பு விளக்கம் தந்திருக்கிறேன்"[22] என்று கூறுகிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

தேவைப்பட்ட இடங்களில் சில மாறுதல்களைச் செய்துள்ளார் கா. ஸ்ரீ. ஸ்ரீ என்பதற்கு இங்கு ஒரு சான்று காட்டப்படுகிறது. "இருதுருவங்கள் என்ற நாவலில் 'ஸாவ்ளா' என்ற பாத்திரம் வருகிறது. 'ஸாவ்ளா' என்றால் 'கறுப்பன்' என்று பொருள். 'ஸாவ்ளா' என்றே எழுதினால் வாசகருக்குப் படிக்கும்பொழுது அலுப்புத் தட்டும். எனவே 'கறுப்பன்' என்றே குறித்திருக்கிறேன். 'சுகம் எங்கே' என்ற நாவலில் ஓர் இடத்தில் பாபூகெனு என்பவனைப் பற்றிய குறிப்பு வருகிறது: ஆனால் பாபூகெனு என்பவன் யார் என்பது இன்று மராட்டியருக்கே

---

22. கா. ஸ்ரீ. ஸ்ரீ. இந்நூலாசிரியருக்கு எழுதிய 30.9.1993

தெரியாது. 1932 சத்தியாக்கிரகத்தில் பிரிட்டிஷ் ராணுவத்தினர் லாரியில் நசுக்கிக் கொன்ற தொழிலாளச் சிறுவன் அவன்; அவனது தியாகம் விடுதலைப் போரில் மிகவும் சிறந்ததாகப் பெற்றது. இப்படி ஆங்காங்கே விளக்கம் தந்திருக்கிறேன்''[23] என்று குறிப்பிடுகிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ

எந்த மொழியிலிருந்து மொழி பெயர்க்கிறோம் என்பதை மனத்தில் இருத்தி வைத்துக்கொண்டே எந்த மொழியினருக்காக மொழி பெயர்க்கிறோம் என்ற உணர்வோடு மொழி பெயர்ப்பை வெளிப்படுத்துவது சிறந்த மொழிபெயர்ப்பாளரின் அடையாளமாகும். இந்நிலையில்தான் மொழிபெயர்ப்பு என்பது ஒரு தனிக்கலை என்பது தெளிவாகும். "பொன்னாங் கண்ணிக்குப் புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் ஓர் உழக்கு உண்ணும்'' என்ற பழமொழிக்கேற்ப கா. ஸ்ரீ. ஸ்ரீ தமிழ் வாசகர்கள் புரிந்து கொள்ளும் வகையில் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக இந்தி உலகில் பிரேம்சந்திரர் ஓர் இலக்கியச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர். நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும், பல நாவல்களையும் எழுதிப்புகழ் பெற்றவர். இவற்றுள் ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து கா. ஸ்ரீ. ஸ்ரீ தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். இதில் 'புல்லுக்காரி' என்ற கதையினைத் தமிழில் வழங்கும் பொழுது சென்னை, செங்கற்பட்டு மாவட்டத் தமிழில் மொழி பெயர்த்துள்ளதைக் காணலாம்.

''அவள் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள். அவள் வெட்கம் எங்கோ மாயமாய் மறைந்தது. உறுத்தும் குரலில், ''உன்னாண்டே ஒரு விஷயம் சொன்னா, நீ வேறெ விதமா நெனெக்க மாட்டியே? ஒனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா இல்லையா?'' என்ற கேட்டாள்.

சைன்சிங் தாழ்ந்த குரலில் ''கல்யாணம் என்னவோ ஆகி விட்டது. ஆனால் கல்யாணம் என்ன, அது ஒரு விளையாட்டு" என்றான்.

---

23. கா. ஸ்ரீ. ஸ்ரீ. இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம் நாள் 30-9-1993

முலியாவின் உதடுகளில் அவனைத் திரஸ்கரிக்கும் புன் சிரிப்பு ஓடியது. இருந்தாலும் என் வூட்டு மனுசன் ஒன் பெண் ஜாதியாண்டே இப்படி பேசினா ஒனக்கு என்னமா இருக்கும்? நீ அவன் கழுத்தே வெட்டத் தயாராயிருப்பே அல்ல! சொல்லு! மஹாவீரன் சக்கிலியனானா, 'அவன் ஒடல்லே ரத்தம் இல்லே, அவனுக்கு வெக்கம் இல்லே தன் மரியாதெயப் பத்தி அவனுக்கு ஒசனை இல்லே' என்று நீ நெனச்சுக்கிட்டியா? என் அழகு உன்னெப் பிடிச்சிக்கினு இழுக்குது. ஆனா கொளக்கரெலே என்னெ விட அழகான பொம்பளைங்க திரியலே? என்னெ அவுங்க காலுலெகட்டி அடிக்கலாம்: அவ்வளவு அழகானவங்க அவுங்க. நீ அவுங்களாண்டே யாரண்டெ யாவது போயி தயெ கேக்கிறதுதானே? அவுங்களாண்டே தயெ இல்லியா? ஆனா அங்கே நீ போவ மாட்டே. அங்கே போவறதுன்னா நீ பயத்தாலே சாவுறே. என்னாண்டே வந்து தயெ கேக்கிறே. இதெல்லாம் என்னாத்துக்கு? நான் சக்கிலிச்சி: தாழ்ந்த சாதிக்காரி, தாழ்ந்த சாதிக்காரப் பொம்பிளை சித்தே மெரட்டினா இல்லாட்டி கொஞ்சம் பேராசை காட்டினா, ஒன் கையிலே சிக்கிக் கொள்ளுவா. எவ்வளவு மலிவான சரக்கு? என்ன இருந்தாலும் நாயகர் இல்லே! இவ்வளவு மலிவான சரக்கெ விடுவியா? என்றாள்.''

கதாபாத்திரத்தின் தன்மையை அதற்கான மொழி நடையை மொழிபெயர்ப்பில் கொண்டு வருகிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ. இம்மொழி பெயர்ப்பைப் பற்றி கி. வா. ஜகந்நாதன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''நண்பர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.யின் மொழி பெயர்ப்பைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது என் கடமை. இவர் இந்தியை மிகுதியாகப் படித்தவர் தமிழில் எழுதிக் கைதேர்ந்தவர். பிரேம்சந்த் வடஇந்தியாவில் உலவ விட்ட பாத்திரங்களை, இவர் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தபோது பெயரை மாற்றவில்லையே தவிரப் பேச்சை மாற்றித் தமிழராகவே ஆக்கிவிட்டார். சம்பாஷணைகளில் தமிழ்நாட்டில், அதிலும் தம்முடைய சொந்த ஜில்லாவாகிய செங்கற்பட்டில் பேசும் பாஷையை உபயோகப்படுத்தித் தமிழ்

ருவாக்கியிருக்கிறார். இல்லாவிட்டால் புல்லுக்காரி இலக்கண சுத்தமான பாஷையிலே பேசுவதைவிட இந்தக் கொச்சைத் தமிழிலே பேசும்போது நாம் கதை வாசிக்கிறோமென்ற நினைவை மறக்க முடியாதல்லவா? இவர் கதைகளைத் தேர்ந்தெடுத்திருப்பதையும் பாராட்ட வேண்டும்''[24] என கி. வா. ஜ. கூறுகிறார். மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ளதை மற்றொரு மொழியில் பெயர்த்து எழுதுகின்ற ஒரு இயந்திரத்தனமான வேலை அல்ல; உளவியல் ரீதியிலான அறிவியல் கண்ணோட்டம், சமூகக் கண்ணோட்டம். மொழியியல் கண்ணோட்டம், ஆகியவற்றை நுட்பமாக கையாளுகின்ற ஒரு தனிக்கலையே மொழிபெயர்ப்பு என்பது தெளிவாகும்.

தற்காலத்தில் மொழிபெயர்ப்பில் வெளிவருகின்ற நூல்களின் முன்னுரையில் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பின் சிறப்பைப்பற்றி குறிப்புரைகள் இடம் பெறுவதையும் காண முடிகிறது. ஆங்கிலத்தில் தனஞ்சய்கீர் எழுதிய 'டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை தமிழில் வழங்கிய க. முகிலன் தனது முன்னுரையில் மராட்டிய எழுத்தாளரான காண்டேகரின் கதைகளை என் கல்லூரிப் பருவத்தில் பல தடவை படித்து மகிழ்ந்திருக்கிறேன். பல முறை விரும்பிப் படிக்கும் அளவிற்குக் காண்டேகரின் கதைகளை மராத்தி மூலத்திலிருந்து கா.ஸ்ரீ.ஸ்ரீ அவர்கள் தமிழாக்கித் தந்துள்ளார். மொழிபெயர்ப்பு என்றால் அது கா ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பு போல இருக்கவேண்டும் என்று எண்ணுவேன்." என்று கருத்துரை வழங்கியுள்ளார். இவ்வாறு மொழிபெயர்க்கத் துணியும் எவருக்கும் அறிஞர் கா.ஸ்ரீ.ஸ்ரீ வழிகாட்டியாய்த் திகழுபவர் என்பது தெளிவு.

---

24. பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள், (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு, பதி ஜூலை 1989. ப. 11

# தமிழிலா எழுதினார் காண்டேகர்!

'காண்டேகர் தமிழ் எழுத்தாளரே' என்று மக்கள் கருதும் அளவிற்கு காண்டேகரின் இலக்கியம் 1940-50களில் தமிழ் நாட்டில் வேரூன்றியது. புதுமைப்பித்தன், கு.ப.ரா டாக்டர். மு.வ. போன்ற இலக்கியவாதிகளும்,பெருந்தலைவர் காமராசர் அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி ஆகிய தலைவர் களும், இலக்கியச் சுவை மிகுந்த வாசகர்களும் காண்டேகரின் இலக்கியத்திற்குஆதரவளித்துப் போற்றினர்.

எந்த மொழியைக் காட்டிலும், தமிழில் காண்டேகருக்கு வாசகர்கள் மிகுதி என்பதை காண்டேகர் பல இடங்களில் வெளியிட்டிருக்கிறார். கா.ஸ்ரீ.ஸ்ரீயும் இக்கருத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். "காண்டேகர் ஒரு முன்மாதிரியான இந்திய எழுத்தாளர். அவர் மராட்டியில் எழுதினாரே தவிர அவரது எழுத்தை எந்த இந்தியனும் படித்து ரசிக்க முடியும். காண்டேகர் நிறையப் படித்தவர். அவரது கதைகளிலும் நாவல்களிலும் அங்கங்கே இலக்கிய மேற்கோள்கள் இருக்கும். நிறைய உருவகங்கள் உண்டு. காண்டேகர் எழுத்தை நான் மொழிபெயர்க்க, மொழி பெயர்க்க, தமிழ்நாட்டிலே அவருக்கு ரசிகர் குழாமே உருவாகத் தொடங்கிவிட்டது. மராட்டி வாசகர்களைவிட அவருக்குத் தமிழ் வாசகர்கள் அதிகம் என்று வேடிக்கையாகப் பேசப்பட்டது. காண்டேகரை ஒரு தமிழ் எழுத்தாளராகவே கருதிய வாசகர்களும் உண்டு"[25] என்று கா.ஸ்ரீ.ஸ்ரீ. புதுதில்லியில் 'யயாதி' மொழிபெயர்ப்புக்கான பரிசு வாங்கும்போது நினைவு கூர்ந்தார்.

தமிழகத்தில் காண்டேகரின் படைப்புகள் இத்தகைய வரவேற்பைப் பெற கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பின்

---

25. தினமணிசுடர், (கட்) மொழிபெயர்ப்பா, மூலநூலா, தம்பி சீனிவாசன், 13-9-1992. ப. 23.

தன்மை ஒரு முக்கிய காரணம். ''காலை முதல் ஒரே குமைச்சலாக இருந்தது. உடம்பில் வேர்வை வெள்ளமாகப் பெருகியது. காற்று என்பது துளியும் இல்லை. அதற்கும் உலகத்துக்கும் சண்டையாகி அது எங்காவது கோபித்துக்கொண்டு போய் விட்டதோ, என்னவேவோ! காற்று இல்லாமையால் மூச்சை அடைப்பதுபோல இருந்தது. வெயில் நெருப்பாக வீசுவதைக் கூடப் பொறுத்துக்கொள்ளலாம். அடியோடு காற்று இல்லா விட்டால் அதைத் தாங்குவது மிகவும் சிரமந்தான். எந்த உரிமையும் இல்லாத நாட்டில் பேச்சு சுதந்திரம் மட்டும் கிடைத்தாலே போதும் என்று தோன்றவில்லையா? கோடை காலத்தில் சூடான காற்று அடிப்பதும் அதுபோலத்தான். இன்னும் சிறிது நேரத்தில் உஷ்ண அலை தணிந்து சில்லென்று காற்று வீசும் என்ற நம்பிக்கையாவது அதனால் உண்டாகும்.[26] (முகில் எங்கே?)

இப்பகுதி மொழிபெயர்ப்பு என்ற எண்ணம் தோன்றாமல் மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வையே அளிக்கிறது. மூலநூலா? மொழிபெயர்ப்பா? என்று பகுத்துணர முடியாத அளவிற்கு கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பு இயல்பாக, எளிமையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

தமிழில் எழுதப்பட்ட ஒரு மூலநூலைப் படிப்பதுபோலவே எல்லா நூல்களையும் மொழிபெயர்த்துவிட முடியாது. இவற்றுள் வசப்படுவது ஒரு சிலவே. ஆனால் காண்டேகரின் படைப்புகளைத் தமிழில் தருவதில் வெற்றி கண்டவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. மொழிபெயர்ப்பு வெற்றிபெற மிகுந்த உழைப்புத் தேவை என்று கா.ஸ்ரீ.ஸ்ரீ. குறிப்பிடுகிறார். 'வெளிமொழி நூல் ஒன்று தமிழில் வரும்பொழுது அது மொழிபெயர்ப்பு என்ற வடுவுடன் இருக்கலாகாது. தமிழிலேயே எழுதப்பட்ட ஒரு மூலநூலைப் படிப்பதுபோலவே இருக்கவேண்டும். இது எல்லா நூல்களுக்கும் இயலாது என்றாலும் இந்திய மொழிப் படைப்பிலக்கியம் எதையும் சுவை குன்றாமல் மொழிபெயர்க்க

26. வி ஸ. காண்டேகர் கதைகள் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. டிச. 1989. பக். 141-142.

முடியும். கொஞ்சம் பாடுபட வேண்டும். சொல்லைமீறி உள்ள பொருளையும் பாவங்களையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எந்த நூலை நான் தமிழாக்கத்துக்கு எடுத்துக்கொண்டாலும் அதுபற்றிய முழுத்தகவலையும் சேகரிக்க முயலுவேன். உதாரணமாக சாகித்திய அகாதெமிக்காக 'பகவான் புத்தர்' என்ற நூலைத் தமிழாக்கியபோது நான் பாகதமொழி கற்றேன். மூல ஆசிரியர் பல இடங்களில் பாகத வசனங்களையே பயின்றிருந்தார். உதாரணமாக—புத்தரின் கடைசி உபதேசம் 'அபீபதிவோ பவ' என்பது. மூல ஆசிரியர் இதை அப்படியே விளக்கமின்றிக் குறித்திருந்தார். நான் எப்பொழுதுமே மொழிபெயர்ப்பில் நீண்டநாள் எடுத்துக் கொள்வேன்' என் தமிழாக்கம் முடியுமுன்பே, இந்த நூலின் ஹிந்தி மொழிபெயர்ப்பு வெளிவந்து, அதன் ஒரு பிரதியை அகாதெமியினர் எனக்கு அனுப்பியிருந்தனர். அதில், 'உங்களுக்கு நீங்களே தீவாக இருங்கள்' என்பது புத்தரின் கடைசி உபதேசம் என்று ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் குறித்திருந்தார், இது எனக்குப் பொருத்தமாகப்படவில்லை. நான் என்னிடம் இருந்த பாகத அகராதியைக் கண்டு, 'உங்களுக்கு நீங்களே ஒளிவிளக்காக இருங்கள்' என்பது புத்தரின் கடைசி உபதேசம் என்று உணர்ந்தேன். அதாவது—ஒருவருக்கு மற்றவர் வழிகாட்ட முடியாது. அவரவரும் தாங்களே தங்களுக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்து வாழ்வுவழியில் செல்லவேண்டும் என்பதே புத்தரின் கடைசி உபதேசம் இதைக் காண எனக்கு இரண்டு நாள் பிடித்தது''[27] என மொழிபெயர்ப்புப் பணிக்குத் தான் எடுத்துக்கொள்ளும் கடினமான முயற்சியைப் பற்றி கா.ஸ்ரீ.ஸ்ரீ குறிப்பிடுகிறார். இத்தகைய ஆழ்ந்த பயிற்சியும், கடினமான உழைப்பும் ஆர்வமும் கொண்டதால்தான் காண்டேகரின் மராட்டி எழுத்துக்குள் பொதிந்து கிடந்த சிறுசிறு உணர்வுகளைக்கூட சிதறாமல் தமிழில் தருவதில் கா.ஸ்ரீ.ஸ்ரீ வல்லவராகத் திகழ்ந்தார்.

---

27. கா ஸ்ரீ.ஸ்ரீ இந்நூலாசிரியருக்கு எழுதியகடிதம் 9-6-1994.

**சொல்லுக்குள் தேங்கும் சித்திரம்**

மொழிபெயர்ப்பாளர்களுக்கு மொழிபெயர்ப்புப்பணி முட்பாதை என்றாலும் வாசகர்களுக்கு அதை மலர்ப்பாதையாக மாற்றிக்கொடுக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் பணியாகும். காண்டேகரின் படைப்புகள் தமிழில் வெளிவந்த பொழுது அக்காலத்து இளைஞர்கள் அவருடைய மணிமொழிகளை மனப்பாடம் செய்தனர். ''மகாராட்டிரம் என்றால் சிவாஜியை அடுத்து காண்டேகரையே நாம் அறிவோம் என்று புதுமைப்பித்தன் ஓரிடத்தில் எழுதியிருக்கிறார். காண்டேகர் இலக்கியம் தமிழ்நாட்டில் வேரூன்றி, அவரது நாவல்களின் பாத்திரங்கள் தங்கள் அருகிலேயே இருப்பதாக மக்கள் உணர்ந்தார்கள்.''[28] என்று கா.ஸ்ரீ.ஸ்ரீ கூறுகிறார்.

காண்டேகரின் படைப்புகளில் முதலாவதாக 1942ஆம் ஆண்டில் வெளிவந்த 'வெறுங்கோயில்' கலைமகள் வெளியீடாகும். இதில் இடம் பெற்றுள்ள அசோகன், என்ற கதாநாயகன் ஒரு கல்லூரி ஆசிரியர், நாத்திகர், சமூகச் சிந்தனையாளர், சிறந்த பேச்சாளர். இக்கதாபாத்திரம் தானே வாசகர்களிடம் நேரடியாக தனது நிலையை, போக்கை, சிந்தனையை பேசுவதுபோல அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதாபாத்திரமும் இவ்வாறு வாசகர்களிடம் கருத்தை பரிமாறிக் கொள்வதுபோல அமைக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பு தமிழிலேயே இவர்கள் பேசுவது போல அதற்குரிய இயல்புகளோடு, மொழிபெயர்ப்பில் கா.ஸ்ரீ.ஸ்ரீ வடித்தெடுத்துள்ளார்.

''சிந்தனைகள் மண்டையில் கூடி என்ன கொட்டமடிக்கின்றன. இந்தச் சிந்தனைகளினாலேயே நான் பைத்தியமாகி விடுவேனோ என்னவோ என்றுகூட ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது.

ஏதாவது ஓர் அரும்பெரும் செயல் ஆற்ற வேண்டுமானால், ஒருவன் பைத்தியம் ஆகவேண்டியதுதான்! கொலம்பஸ் பித்த

---

28. கா.ஸ்ரீ ஸ்ரீ இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம், 9-6-1994.

னாக இருந்ததனால்தான் அமெரிக்காவைத் தேடிக் கண்டு பிடித்தான். சிவாஜி பித்தனாக இருந்ததனால்தான் சுயராஜ்யத்தை ஸ்தாபித்தான் காலராக் கிருமிகளைக் கண்டுபிடித்தவன், முதல்முதலில் அதைத் தன்மீதே செலுத்திச் சோதனை செய்ய வேண்டியதாயிற்று. இவ்விதம் பைத்தியக்காரனாவதில் தான் உண்மையான புத்திசாலித்தனம் இருக்கிறது. ஆகர்கர், திலகர். கர்வே, காந்தி, ஜவாஹர்லால், ஸாவர்க்கர் இவர்கள் எல்லாரும் பைத்தியக்காரர்களாக இருந்தார்கள், இருக்கிறார்கள் அதனால்தான் இன்று நம் தாய்நாடு தலைதூக்கிப் பார்க்க முடிகிறது."[29] என கா.ஸ்ரீ.ஸ்ரீ எளிமையாக. சரளமாக மொழிபெயர்த்துள்ளார்.

காண்டேகரின் நாவல்களில் அறிஞர்களின் கருத்துரைகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. மராட்டிமொழியில் இடம் பெற்றுள்ளதை கா.ஸ்ரீ.ஸ்ரீ தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ஒரு சில இடங்களில் ஆங்கிலத்திலேயே இடம்பெற்றுள்ளதை கா.ஸ்ரீ.ஸ்ரீ அப்படியே ஆங்கிலத்தில் இடம்பெறச் செய்து பிறகு தமிழில் மொழிபெயர்த்துள்ளார். பொதுவாக மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோர் ஜெர்மன் மொழியில் எழுதும்பொழுது ஆங்காங்கே கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு மொழியில் உள்ள சொற்றொடர்களை அந்தந்த மொழியிலேயே குறிப்பிட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து அக்கருத்தின் சாரம் இடம்பெறுகின்றன. டாக்டர் அம்பேத்காரின் ஆங்கில நூல்களில் இடம் பெறுகின்ற சமஸ்கிருத மொழிச் சொற்கள், சுலோகங்கள் யாவும் அந்த மொழியிலேயே இடம் பெற்றுள்ளதைக் காண லாம். இந்த முறையை கா.ஸ்ரீ.ஸ்ரீ வெண்முகில் என்ற நாவலில் கையாண்டுள்ளார்.

'A thousand and one almost unsurmountable barriers separate people few of which are necessary and most of which are stupid'.

பிரமீலாவின் மொழிபெயர்ப்பு இது.

---

29. வெறும் கோயில், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அலமு நிலையம், சன. 1985. ப. 5

மனிதனுக்கும் மனிதனுக்கும் நடுவே ஆயிரக்கணக்கான கடத்தற்கரிய சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றிலே அவசியமானவை மிகவும் குறைவு. மற்றவை யாவும் நமது முட்டாள்தனத்தின் அடிப்படையிலே நிற்கின்றன.

மற்றொரு வாக்கியம் :

**The honest hard-working intelligent young mechanic is socially as nothing beside the young man of independent means, who spends his time mostly in right-clubs, in knocking a ball hither and thither with wooden clubs, of varying shapes or in killing animals infinitely more beautiful than he is himself.**

தனக்கும் இந்த வாக்கியம் மிகவும் பிடித்திருந்தது அபயனுக்கு ஞாபகம் வந்தது. இந்த வாக்கியத்தைப் படித்தபோது அவன் கண்முன்னால் இரண்டு சித்திரங்கள் தோன்றின; ஒன்று உடல் முழுவதும் வழியும் வேர்வையினால் உலகை மலர்விக்கும் தொழிலாளியின் சித்திரம்; மற்றொன்று, சிரமப்படாமல் கிடைக்கும் பணத்தைத் தண்ணீரைப் போல் அள்ளிவிட்டு. தன் சுகபோக வாழ்க்கையை மலர்விக்கும் காதலனுடைய சித்திரம் ''[30]

தமிழ் வாசகர்களுக்கு ஆங்கில வாக்கியத்தினை குறிப்பிடாமல் தமிழில் மட்டும் குறிப்பிட்டால் போதுமானது. ஆனால் கா. ஸ்ரீ. ஸ்ரீ முழுமையாக அந்த ஆங்கில வாக்கியங்களை குறிப்பிட்டு பின்பு தமிழாக்கத்தையும் அதற்குரிய பொருளையும் வழங்கியுள்ளார். காண்டேகரின் எந்த மொழியையும். கருத்தையும. வார்த்தைகளையும் தமிழில் வழங்குவதல் அடங்காத ஆர்வங் கொண்டவராகத் திகழ்கிறார் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

---

30. வெண்முகில். வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ. ஸ்ரீ அலமுநிலையம். பதி. செப் 1985. பக். 116. 117

மராட்டிய கவிதைகள் பல காண்டேகரின் நாவல்களில் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகளை மொழிபெயர்ப்பதில் மூன்று முறைகளை கா. ஸ்ரீ ஸ்ரீ கையாண்டுள்ளார். ஒன்று மராட்டிய மொழியில் உள்ளதை நேருக்கு நேர் மொழிபெயர்த்தல்—சான்றாக 'ஆஸ்திகன்' என்ற நாவலில் இடம் பெறுகின்ற கவிதையை

"எனது நாக்கே, நீ பேசு
  விட்டோபாவின் இனியபெயர்.
கண்களே திறந்து காணுங்கள்
  விட்டோபாவின் அழகுமுகம்.
காதுகளே உற்றுக் கேளுங்கள்
  விட்டோபாவின் உயர்குணமே
மனமே, ஓடிப் புகல் கொள்வாய்
  விட்டோபாவின் திருவடியில்
துகா சொல்வான்; என் உயிரே
  விடாதே இந்தக் கேசவனை."[31]

என நேராக மொழிபெயர்த்துள்ளார். இரண்டாவதாக மராட்டிய பக்தர்களின் வாசகங்கள் வருமிடத்தில் தக்கபடி ஆழ்வார்களின் பாசுரங்களை அமைத்திருக்கிறார்.

'வெண்முகில்' என்ற நாவலில், இடம் பெறுகின்ற மராட்டிய செய்யுள் ஒன்றை

"சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கருமுகிலே தாலேலோ தேவகி சிங்கமே
தாலேலோ!"[32]

என்ற ஆழ்வார் பாசுரம் ஒன்றை இடப் பெறச் செய்துள்ளார்,

---

31. ஆஸ்திகன். வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி சென்னை. பதி 1976. ப. 8
32. வெண்முகில், வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, பதி. செப். 1985. ப.43

மராட்டி செய்யுளின் பொருளைத் தழுவலாகக் கொண்டு தமிழில் செய்யுள் வடிவாக அளித்துள்ளார்.

“மாடுகளின் மணியோசை
    மங்கியிருள் சூழ்ந்ததுவே
மயினாவும் பேச்சொழிந்து
    மயங்கிக் கண் உறங்கியதே!
தோகைவிரித் தாடுமயில்
    துஞ்சிவிட்ட திந்நேரம்!
துங்கமதி தானுமந்தத்
    துயிலணையை நாடிவிட்டான்!”[33]

இவ்வாறு மொழிபெயர்ப்பு என்ற பணியை வேலைப்பாடு மிக்க அணிகலன்களை உருவாக்குவதுபோல, கதாபாத்திரங்களின் மனவோட்டத்துக்கேற்ப, கருத்திற்கேற்ப, வாசகர்களின் படிப் போட்டத்திற்கேற்ப, சுவைக்கேற்ப சொற்களை வழங்கி அமைப்பதில் மிகுந்த அக்கறை உடைய சிறந்த மொழிபெயர்ப் பாளர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

---

33. வெண்முகில், வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ. அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. பதி. செப். 1985 ப. 28.

## பரிசு பெற்ற படைப்பான 'யயாதி'யைப் பற்றி வி. ஸ. காண்டேகரும், கா. ஸ்ரீ. ஸ்ரீ யும்

புராணக் கதைகளைச் சார்ந்த நாடகங்கள் தோன்றிய அளவிற்கு நாவல்கள் தோன்றி வளரவில்லை என்பது காண்டேகரின் கருத்து. புராணத்தின் கற்பனை வளத்தையும் அதன் திறனையும் நன்கறிந்த காண்டேகர் தன் கலைப்படைப்பை வழங்க உரிய கதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இத்தகைய படைப்பை வழங்க உந்துதல் சக்தியாக இருந்த சமூகச் சூழலை காண்டேகர் பின்வருமாறு கூறுகிறார் ''நான் சிறு வயதுமுதல் புராணக் கதைகள் பலவற்றைப் படித்திருக்கிறேன். என் நாவல்களிலும், புராண நிகழ்ச்சிகளை அங்கங்கே உதாரணமாகக் காட்டியிருக்கிறேன். பல சமூக நாவல்களையும் எழுதியிருக்கிறேன். ஆனால் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, பாரத நாட்டு வாழ்வின் பரப்பு மிகவும் பெரியதாக வளர்ந்துவிட்டது. அந்தப் போரில் எரிந்து சாம்பலான வார்ஸா நகரம், 1942-இயக்கத்தில் தூக்கு மேடையேறின இளைஞனின் கர்ப்பிணியான, பாவமற்ற, புகலற்ற மனைவி, வங்கநாட்டுப் பெரும் பஞ்சத்தில் துடித்து இறந்த லட்சக் கணக்கான மக்கள், பாரதநாடு இரண்டு துண்டானபொழுது பெருகிய ரத்தவெள்ளம், லட்சக் கணக்கான அகதிகளின் பொறுக்க முடியாத துயரச் சுமை, பாரதப் பண்பாட்டின் பெருமையை ஒய்யாரமாகப் பேசிக்கொண்டே சமூகத் துரோகிகள் நடத்திய கறுப்புப் பணவேட்டை, மூவண்ணக் கொடியைத் தற்பெருமையுடன் நோக்கி நிற்கும் கோடிக்கணக்கான மக்களின் துயரம் சூழ்ந்த முகங்கள், முன்பு தூயவையாக மதிக்கப்பெற்ற ஒவ்வொரு நன்னெறிக்கும் சுதந்திரம் கிடைத்த பின்பு சேர்ந்த அவமதிப்பு, பாண்டுரோகத்தினால் அவதியுறு கிறவனுக்கு மேலே தடபுடலாக ஜரிகையாடை அணிவிப்பது போல், ஊக்கமற்ற சமூகத்தை முன்னேற்றுவதற்கு, அரசியல் தலைவர்கள் முனைந்து நடத்திய இயக்கங்கள், ,Those who have no vision perish' (முன்னோக்கு, முன்யோசனை—இல்லாத

மக்கள் அழிவர்) என்ற மாஜினியின் பொன்மொழியைக் கிராமத்துத் தலைவர் முதல் டில்லியில் இருந்த தலைவர் வரையில் அனைவரும் மறந்தமை, விநோபாவின் தன்னிறைவு பெற்ற கிராமம் பற்றிய கனவும் நல்லது, யந்திரசக்தி கொண்டு சமூகத்துக்கு நலம் தரும் நேருவின் லட்சியமும் நல்லது என்ற கருத்தில் அடுத்த வழியில் நடக்கும் சமூக மனிதன்—ஆகிய இவற்றையெல்லாம் வழிவழியாக வந்துள்ள சமூகநாவல்களைக் கொண்டு எப்படிச் சித்தரிக்க முடியும். குளத்தின் அலைகளில், கடலின் கொந்தளிக்கும் அலைகளின் பிரதிபிம்பத்தைக் காணும் முயற்சியாக அது அமையும் என்று எனக்குத் தோன்றிற்று! இந்த மனநிலையில், புராணக் கதையைக் கொண்டு நாவலைப் படைக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டேன்.''[34] என்று 'யயாதி'யின் தோற்றம் பற்றி கூறுகிறார் வி. ஸ. காண்டேகர்.

மராட்டியில் எழுதப்பட்ட இப்படைப்பு தமிழில் மொழிபெயர்த்து வழங்கியபொழுது, காண்டேகருக்குப் கிடைத்த பாராட்டு, கா. ஸ்ரீ. ஸ்ரீக்கும் கிடைத்தது. கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்புப் பணியில் 'யயாதி' என்ற நாவல் தனிச் சிறப்பு வாய்ந்தது. இந்நாவல் தமிழ் மொழிபெயர்ப்பிற்காக 1991 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி பரிசைப் பெற்றது. சாகித்திய அகாதெமி வெளியிட்ட அறிமுக நூலில்.

"Yayathi which receives this year's prize for translation is a remarkable Tamil rendering of the famous marathi novel of the same name by V.S. Khandekar. The epic characteristics of the original work, its insights into the passionate, ambitious human mind, and its innovative modes of expression are conveyed in an economical deceptively simple, and lucid Tamil narrative style The work is significant for its exploitation of various techniques used in recreating the suggestive subtlety of the original. It is therefore regarded as an outstanding to

---

34. யயாதி, வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ., அல்லயன்ஸ கம்பெனி வெளியீடு, டிச. 1990. ப. 661—662.

Indian literature in Tamil Translation.''[35] என கா.ஸ்ரீ.ஸ்ரீயின் பணியைப் பாராட்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் வரிசையில் மொழிபெயர்ப் புத்துறைக்குத் தனிப்புகழையும். பெருமையும் சேர்த்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ என்பதை சாகித்திய அகாதெமியின் பாராட்டுரை தெளிவாக்குகிறது.

''யயாதி என்ற இந்தக் காண்டேகரின் நாவல் முழு வடிவில் தமிழில் வெளிவரும் என்று நான் நினைத்திருக்கவேயில்லை' ஆனால், இது இன்று முழுவடிவில், அல்லயன்ஸ் கம்பெனியின் வெளியீடாக வெளிவருவது கண்டு மிகவும் மகிழ்கிறேன். இதற்கு உரிய பெருமை முழுவதும் இப்போது அல்லயன்ஸ் கம்பெனியை ஆர்வத்துடன் நடத்திவரும் திரு. வி. ஸ்ரீநிவாஸனைச் சேர்ந்தது. அவர் ஊக்கமும் உற்சாகமும் தந்திருக்க வில்லையென்றால் இதை முழுவடிவில் நான் எழுதியிருக்க மாட்டேன். ஆகவே முதல்முதலில் அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்த நாவல் யயாதியின் காமக்கதை, தேவயானியின் குடும்பக்கதை சர்மிஷ்டையின் அன்புக்கதை, கசனுடைய பக்தி வரலாறு' என்று கூறி, புராண காலத்திய யயாதியை இந்தக் காலத்திய யயாதியாக மாற்றுவதற்குத் தாம் கொண்ட முயற்சிகள் பற்றிக் காண்டேகர் தமது 'பின்னணி'யில் விரிவாக விளக்கியிருக்கிறார். காண்டேகரின் இலக்கியம் எப்போதுமே வாழ்வைப்பற்றியது: வாழ்வுக்கு உதவுவது. அதனால்தான் வாசகர்கள் அதை என்றுமே மதித்துப் போற்றி தம் வாழ்வுக்குப் பயன் படுத்திக் கொண்டுள்ளார்கள்.[36] என இப்படைப்பைப் பற்றி கா. ஸ்ரீ. ஸ்ரீ குறிப்பிட்டுள்ளார். யயாதி தேவயானி சர்மிஷ்டை, கசன் ஆகிய கதாபாத்திரங்களின் சித்தரிப்பு மராட்டியிலிருந்து தமிழுக்கு எவ்வகையிலும் குறைவுபடாமல் சேர்த்துவிட்டார் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

---

35. Sahitya Akaoemı Translation prizes. Sahitya Akademi, New Delhi, Ed. 1991.

36. யயாதி, வி.ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ அல்லயன்ஸ் வெளியீடு, டிச, 1990 ப. 6

# தமிழகத்தில் காண்டேகரின் இலக்கியத் தாக்கம்

ஒரு காலகட்டத்தில் ஒரு மொழியில் உருவாகின்ற சிறந்த படைப்பு மொழிபெயர்ப்பு வாயிலாகப் பிறமொழிகளிலும் அதன் தாக்கத்தை உருவாக்கமுடியும் என்பதற்கு காண்டேகரின் இலக்கியப் படைப்புகளை ஒரு சிறந்த சான்றாகக் கொள்ளலாம். "அழகானது, சத்தானது, பயனுள்ளது தேவையானது என்பதை எங்குக் கண்டாலும் அதைத் தனதாக்கி மகிழும் பேறு மனிதனுக்கு உண்டு. இதை மொழியாக்கப் பணிகள் நடைமுறைச் சாத்தியமாகியுள்ளன. மனித இனம் முழுவதின் சாதனைகளும் மனிதன் மிக இயல்பாகத் தனதாக்கிக்கொள்ளும் முயற்சியில் அரும்பெருங்கருவியாக அமைவது மொழி பெயர்ப்பு. அதனால் ஒட்டுமொத்தமான மனித இனவளர்ச்சி வரலாற்றில் அது பேரிடம் பெறுகிறது."[37] மனித இன வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது சமூக உணர்ச்சி. சமூக உணர்ச்சி என்பது முன்னேறத் துடிக்கும் மக்கள் சமுதாய வாழ்வின் உயிர்.

சமூக உணர்வினால் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள முரண்பாடுகளைக் களைய ஆயுதங்கள் ஏந்தும் போராளிகளும் உண்டு. எழுத்தை ஆயுதங்களாக ஏந்தும் படைப்பாளிகளும் உண்டு. 'தன்னை அறிந்துகொள்ள மனிதனுக்கு உதவுதல், தன் மீதான நம்பிக்கையை வலுப்படுத்த உதவுதல், உண்மையைநாடும் முயற்சியில் அவனுக்கு உதவுதல். மக்களிடம் உள்ள சிறந்த பண்புகளைக் கண்டுபிடிக்கவும் கயமைப் பண்புகளை ஒழிக்கவும் உதவுதல், வெட்கம், சினம், வீரம் ஆகியவற்றை மனித நெஞ்சங்களில தூண்டிவிடுதல். குறிக்கோள்களுக்காகத் தம்மையே அளிக்கும் வலிமையைப் பெற உதவுதல். அழகு என்னும தூய உணர்வால் மக்களின் வாழ்க்

---

37. மொழிபெயர்ப்பியல் கொட்பாடுகளும உத்திகளும், சேதுமணி மணியன், செண்பகம் வெளியீடு. மதுரை, மார்ச் 1990. ப. 5.

கையைப் புனிதப்படுத்துதல் ஆகியன ஒரு உயரிய இலக்கியத்தின் நோக்கமாக அமைதல் வேண்டும்.''[38] என ஒரு சமூக அக்கறை கொண்ட இலக்கியத்தைப் பற்றி மார்க்சிம் கோர்க்கி குறிப்பிடுகிறார்.

ஒரு மொழியில் இத்தகைய சமூக அக்கறையுடன் கூடிய இலக்கியப் படைப்பு பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் பொழுது இந்தச் சமூக அக்கறையுடன் இடம் பெயருகின்றது அல்லது இடம் பெயரவேண்டும் என்பதுதான் கருத்து. ஒரு மொழியில் ஒரு புதிய காலகட்டத்தை உருவாக்கும் இலக்கியப் படைப்புகள் பெறுகின்ற வெற்றி அந்தப் படைப்புகள் வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்பொழுது அதே மாதிரியான புதிய காலகட்டத்தை உருவாக்க முடியுமா என்பது ஒவ்வொரு மொழியினரின் சிந்தனை வளத்தைப் பொறுத்தே அமைகிறது.

1850ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டுவரை 300க்கும் மேற்பட்ட புதினங்கள் தமிழில் மொழிபெயர்ப்பாகவும் தழுவலாகவும், சுருக்கமாகவும் வெளிவந்தன. அய்ம்பதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் இத்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். மேலைநாட்டுப் புதினங்களின் பாத்திரங்களை மாற்றி தமிழ்நாட்டுப் பாத்திரங்களைப் போலச் செய்யும் முயற்சியை முதன்முதலில் மேற்கொண்டவர் ஆரணி குப்புசாமி முதலியார் ஆவார்.

ஆன்மீகத் தத்துவங்களை விளக்கும் உவமைக் கதைகளையும், உபநிடதங்களில் இடம்பெற்ற நீதிக்கதைகளையும், இதோபதேசங்களையும், பூலோக விநோத கதைகளையும் படித்தும், கேட்டறிந்தும் வந்த தமிழ் மக்கள் மேனாட்டு புதிய இலக்கிய வகை தமிழில் இடம்பெற்றதும், அதற்கு மிகுந்த வரவேற்பு அளிக்கத் தொடங்கினர். இவர்களின் சிந்தனை மடை மாற்றத்திற்கு வழிகோலிய பெருமை தமிழ் மொழிபெயர்ப்பாளர்களையே சாரும்.

---

38. சோவியத் இலக்கியம்—நோக்கும் போக்கும் (தமி) செகத்ரட் சகன், புதுமைப் பதிப்பகம், மே. 1984, ப. 11?.

பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் ஆங்கிலமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. 1935இல் பங்கிம் சந்திரரின் 'விஷவிருட்சம்' என்ற வங்கமொழி நாவலை த. நா. குமாரசுவாமி தமிழில் வழங்கினார். தொடர்ந்து 1. பங்கிம் சந்திர சட்டர்ஜி, 2. இரவீந்திரநாத் தாகூர், 3. தாராசங்கர் பந்தோபாத்யாயா, 4. மாணிக்பந்தோத்யாயா 5. பிரபோத் குமார்ஸின்யால், 6. சரோஜ்குமார்ராய் செளதுரி, 7. கல்யாணி முகோபாத்யாயா, 8. பாலாய்காமத் முகோபாத்யாயா, 9. சரண்தாஸ்கோஷ், 10. சரத்சந்திரர், 11. ஹரண்மாய்ஹோகல், 12. தாஸ்ரஹல் பானர்ஜி, ஆகியோரின் வங்க இலக்கியப் படைப்புகள் த நா. குமாரசுவாமி, த. நா. சேனாபதி, அ. கி. ஜெயராமன், ஆர். சண்முக சுந்தரம், வி. எஸ். வெங்கடேசன், குகப்பிரியை ஆகியோரின் மொழிபெயர்ப்புகளாக தமிழில் வெளிவந்தன. 'வங்கமொழி நாவல்கள் பல தமிழில் கிடைத்தது வாசகரின் இலக்கிய ரசிகத் தரத்தை உயர்த்தி தமிழில் அவை போன்ற படைப்புகளை வரவேற்கும் சூழ்நிலையையும் உருவாக்கிற்று. இந்தச் சூழ்நிலை நிறைவுபெற்று தமிழ் நாவல் படைப்பில் இலக்கிய உணர்வு முக்கியத்துவம் பெறுவதற்கு, மராத்தி மொழிப் படைப்புகளும் 1940-ம் ஆண்டு தொடங்கிய காலத்தில் ஊக்கமளித்தன. வி. ஸ. காண்டேகரின் 'கருகிய மொட்டு' என்ற நாவலை கா.ஸ்ரீ.ஸ்ரீ தமிழில் வழங்கியபோது தமிழ்ப் படைப்பாளிகளிடையே ஒரு புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தது. ஆண் பெண் உறவுகளை உளவியல் ஆய்வுப் பாணியில் காண்டேகர் கையாண்டது, பின்னர் பல தமிழ்ப் படைப்பாளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. அதையடுத்துத் தொடர்ந்து இருபது ஆண்டுக் காலத்தில் மேலும் பல வங்க, மராத்திய மொழி நாவல்களும், ஒரு சில கன்னட, மலையாள, தெலுங்கு நாவல்களும் தமிழ் வடிவம் பெற்றன. தமிழ் நாவல் படைப்பு வரலாற்றில் இந்திய மொழிகளின், சிறப்பாக வங்க மராத்திய மொழிகளின் பாதிப்பு பெரும்பயனைக் கொடுத்த முக்கிய அம்சமாகும். இலக்கிய உணர்வுடன் பின்னர் எழுதப்பட்ட தமிழ் நாவல்களில் சில மற்றைய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ்

நாவலின் போற்றத்தக்க வளர்ச்சியை உலகத்துக்கு அறிவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.[39] என 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும், வளர்ச்சியும்' என்ற நூலில் சிட்டி, சோ. சிவபாத சுந்தரம் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

காண்டேகர் எழுத்துக்கள் ஏற்படுத்திய தாக்கம் காரண மாக சில தமிழ் எழுத்தாளர்கள் காண்டேகர் பாணியில் நாவல் கள் எழுத முற்பட்டார்கள் என்பதை எழுத்தாளர் வல்லிக் கண்ணன், கி.வா.ஜ. போன்றோர் எடுத்துரைத்துள்ளனர். குறிப்பாக டாக்டர். மு. வரதராசனார் காண்டேகரின் பாணியை பின்பற்றியதில் குறிப்பிடத்தகுந்தவர். ''கவிஞனாக வும், கதையாசிரியனாகவும், மராட்டிய எழுத்தாளன் காண்டே கரைக் காணும் எனக்குக் கட்டுரையாளரும், கதையாசிரியரு மான ஒரு கலப்பு உருவமாகவே-மு.வ அவருடைய புதினங் களில் காட்சி தருகிறார்.[40] என்று கூறுகிறார் டாக்டர் தமிழன்பன். மு வ. எழுதியசெந்தாமரை, கள்ளோ காவியமோ, அந்த நாள், பாவை, மலர்விழி, பெற்றமனம், அல்லி, கரித்துண்டு, கயமை, நெஞ்சில் ஒரு முள், அகல்விளக்கு, வாடாமலர், மண்குடிசை, ஆகிய நாவல்கள் மக்களின் உள்ளங் களில் சிந்தனைத் தெளிவினையும் சீர்திருத்தப் போக்கினையும் ஏற்படுத்த வல்லனவாகும். வி.ஸ. காண்டேகரின் இலக்கியப் பின்னலை தமிழில் அதே வகையான உத்தியைப் பின்பற்றி யவர் டாக்டர் மு. வரதராசனார்.

இன்றைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களும் காண்டேகரின் படைப்புத் திறனை வியந்து போற்றுவதையும், அவரை ஒரு இலக்கிய முன்னோடியாகக் கொள்வதையும் காண முடிகிறது. பெண் எழுத்தாளர் திலகவதி இ.கா.ப. அவர்கள்

---

39. தமிழ்நாவல் நூறாண்டு வரலாறும், வளர்ச்சியும், சிட்டி, சோ. சிவபாதசுந்தரம், கிறித்துவ இலக்கிய சங்கம், 1977 ப. 155-156.

40. மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒரு திறனாய்வு, பா. சம்பத்குமார் ராஜ்காந்தி பதிப்பகம், கோயம்புத்தூர் டிச. 1988. ப. VII.

''நான் எழுத்துலகில் அடியெடுத்து வைக்க காண்டேகரின் இலக்கியத் தாக்கம் ஒரு காரணம். சிறு வயதிலிருந்தே காண்டேகரின் நூல்கள் எனக்கு அறிமுகமாயின. காண்டேகரின் உவமைநயமும், சிந்தனை வளமும், புதிய அணுகுமுறைகளும் அவருடைய நாவல்களை மீண்டும், மீண்டும் படிக்கத் தூண்டின. சொல்ல வேண்டிய செய்தியை மிகச் சுருக்கமாக எளிமையான உவமைகள் மூலம் புரிய வைத்துவிடலாம் என்ற உத்தியை நான் கற்றுக்கொண்டது காண்டேகரின் எழுத்துக்களில்தான்'[41] என்று கூறுகிறார். இவ்வாறு தமிழ் எழுத்தாளர்கள் பலரும் இன்றும் நினைவில் கொள்ளத்தக்க வகையில் பெரும் பணியை மேற்கொண்டவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ.

காண்டேகர் நாவல்களில் இடம்பெறுகின்ற கதாபாத்திரங்ளான பாபூராவ், திலீபன், உல்கா, நந்தா, போன்ற பெயர்களை தமிழ் வாசகர்கள் பலர் சூட்டிக் கொண்டனர். 1960 களில் அறிஞர் அண்ணா தனது சொற்பொழிவுகளில் காண்டேகரின் கருத்துகளை, உவமைகளை ஆங்காங்கே எடுத்துக் காட்டிப் பேசினார். ஆகையால் திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர்கள் இம்முறையைப் பின்பற்றி பேசியதும் குறிப்பிடத்தக்கது. இதனால் காண்டேகரின் சிந்தனைகள் மக்களிடம் அறிமுகமாயின. 1961 ஆம் ஆண்டு செங்கற்பட்டு இலக்கிய மாநாட்டில் (தி.மு.க) அறிஞர் அண்ணா கா.ஸ்ரீ.ஸ்ரீக்கு கேடயம் வழங்கினார். காண்டேகருக்கு ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி சிவாஜி உருவமும் அவருடைய கொள்கையும் பதித்த பட்டயம் 1976 ஆம் ஆண்டு அளிக்கப் பட்டது.

### காண்டேகரைப் பற்றி அறிஞர் அண்ணா

காண்டேகரின் நாவல்களும், சிறுகதைகளும் தமிழில் வெளிவந்தபொழுது அறிஞர் அண்ணாவும் காண்டேகரின் வாசகராக இருந்தார். 47 ஆண்டுகளுக்கு முன்பே காண்டேகரின் இலக்கிய ஆற்றலைப் புரிந்து கொண்டு 'இலக்கியத்துக்

---

41. நேர்காணல், திலகவதி, நாள் 8.8 94.

குப் பெருமை சேர்த்த காண்டேகர்' என்ற தலைப்பில் 'திராவிடநாடு' (21-7-46) இதழில் ஒரு நீண்ட திறனாய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரை 'கழகக்குரல்' (28-3-76) இதழில் மீண்டும் இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில் காண்டேகரின் கருத்து கவிஞர் பாரதிதாசனின் கருத்துப் போன்றதே என்றும் புரட்சிக் கவிஞர் கவிதைகளில் கூறுவதைக் காண்டேகர் உரைநடையில் கதை வடிவிலே கூறுகிறார் என்றும் அண்ணா குறிப்பிடுகிறார்.

''வாழ்க்கைக் கீதத்தை விளக்கி விட்டு, வெறும் இலட்சிய வாதியாக இருந்துவிடவில்லை காண்டேகர்; இன்றையச் சமூகத்தின் நிலை அவருக்கு விளங்காமற் போகவில்லை; இன்று சுகம் அனுபவிப்பவர்கள் யார் என்பதையும் அவர் தெரிந்து கொள்ளாமல் இல்லை; நொந்த மனதுடன்—நீங்களும் நானும்—வாழ்க்கையின் ரசத்தைப் பருகும் வீணர்களைப் பற்றி என்ன கூறுவோமோ, அதனைக் காண்டேகர் அழகுபட 'சுகம் என்பது ரசவாதிகளின் ரசக் குளிகையைப் போல் கிடைப்பதற்கு அரிய ஒரு பொருள். அது கேவலம்—கவியின் கற்பனையில்தான் கிடைக்கக்கூடியது. இவ்உலகில், மனிதத் தன்மைக்கும்—சுகத்துக்கும் சம்பந்தமே இல்லை. இவ்வுலகில்: சுகமாக இருக்கவேண்டுபவன், புலியைப்போல் மற்றவர்களின் இரத்தத்தைக் குடிப்பதையே ஆனந்தமாகக் கருதவேண்டும். நியாயம்—தியாகம்— கடமை— மனிதத்தன்மை— நாணயம்— நம்பிக்கை ஆகிய சொற்களை மறக்க முடியாதவன், இந்த உலகத்தில் சுகம் அனுபவிக்கத் தகுந்தவனல்லன்!'' என்று கூறுகிறார். ஆகா எவ்வளவு சரியான சவுக்கடி...பிறர் உழைப்பிலே சுகம் தேடுபவர்களுக்கு! வாழ்க்கை ஏழைமக்களுக்கு பாட்டாளி குடும்பங்களுக்கு! எப்படி இனிப்பாக இருக்க முடியும்?[42] எனக் காண்டேகரின் கருத்து வீச்சை அனுபவித்துப் பாராட்டுகிறார் அறிஞர் அண்ணா.

42. கழகக்குரல், (கட்) இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த காண்டேகர், நாள் 28.3.76. ப. 7

காண்டேகரின் பாத்திரப்படைப்பின் தன்மையையும் சுட்டிக் காட்டியுள்ளார் அறிஞர் அண்ணா. சூழ்நிலை நமக்கு உண்டாக்கும் எண்ணங்கள் உள்ளனவே. அவைகளையே காண்டேகர் பாத்திரங்களாக்கிக் காட்டுவதால்-கதை உண்மையில் கருத்தோவியமாகிறது. காண்டேகர் புதுமையை விரும்புபவர்;புதுமையின்பளபளப்பை அல்ல.அதன் ஆழ்ந்தபாடத்தை! அவருடைய முயற்சி அவ்வளவும்—திறமை முழுவதும் முன்னால் ஏற்பட்ட எண்ணங்கள்—ஏற்பாடுகள்—முறைகள் ஆகியவற்றை முறியடித்து மனிதத்தன்மையின் மேன்மையை உயர்த்த வேண்டும் என்பதுதான்![43] காண்டேகரின் படைப்பாற்றலை இத்தகைய மாபெரும் அறிஞர்கள் படித்து சுவைக்க வாய்ப்பை அளித்தவர் அறிஞர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

**டாக்டர் மு.வ. கண்ட காண்டேகர்**

டாக்டர் மு. வ. மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்தபொழுது 1973-இல் சிவாஜி பல்கலைக் கழக வேலையாகக் கோல்ஹாபூருக்குச் சென்றார். அப்பொழுது அவர் காண்டேகரை நேரில் சந்தித்தார். ‘காண்டேகரைக் கண்டேன்’ என்ற தலைப்பில் அவர் கலைமகள் மார்ச் 1973 இதழில் இந்தச் சந்திப்பை இவ்வாறு விளக்குகிறார் :—

காண்டேகரைச் சந்திக்க நான் பல்கலைக் கழகப் பதிவாளரின் உதவியை நாடியதும் அந்த அம்மையார் உடனே ஒரு வண்டியைக் காட்டி, டிரைவருக்கு மராட்டி மொழியில் சொல்லி எனக்கு விடைகொடுத்தார். காண்டேகர்ஸ் ஹவுஸ்?’’ என்றேன். ‘எஸ்’ என்று வீட்டைச் சுட்டினான். வீட்டின் பெயர்ப் பலகையைக் கண்டேன். ஆங்கிலத்தில் இல்லாமையால் திகைத்தேன். திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒருவர் நாற்பது நாற்பத்தைந்து வயது உள்ளவர் எழுந்தார். அவரை அணுகி, ‘‘நான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறேன் எழுத்தாளர். காண்டேகரைப் பார்க்க வேண்டும்’’ என்று ஆங்கிலத்தில் கூறினேன். உடனே அவர் தம் கைகளைக் கூப்பி

43 கழகக்குரல். (கட்) இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த காண்டேகர். நாள் 28 3.76.ப.7

வணக்கம் கூறினார், இதோ இருக்கிறார்; வந்து பார்க்க லாம்'' என்று உள்ளே சென்று உடனே திரும்பி வந்து ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துச் சென்றார்.''

நடுத்தரக் குடும்ப வீடு அது. பெரிய வீடு அல்ல; சிமெண்ட் காங்கிரீட் வீடு, அதன் நடையில் ஒற்றைக் கட்டி லின்மேல் இருந்த மெலிந்த உருவத்தைக் கண்டேன். என்னை அழைத்துச் சென்றவர் மராட்டியில் ஏதோ சொன்னார். உடனே அவர் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து வணக்கம் தெரிவித்து, ''வாருங்கள் உட்காருங்கள்,' என்றார். ''நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன். நானும் ஓர் எழுத்தாளன். உங்களைப் பார்த்து வணக்கம் தெரிவித்துவிட்டுப் போக வந்தேன். நான் உங்களுக்குக் கடிதம் எழுதியதுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் நீங்கள் பதிலும் எழுதியிருக்கிறீர்கள்'' என்று அவருடைய இரு கைகளையும் பற்றி வணக்கம் தெரி வித்தேன்.

எங்கள் பேச்சு முழுவதும் ஆங்கிலத்திலேயே நடந்தது. எளிய ஆங்கிலத்தில் தெளிவான குரலில் காண்டேகர் பேசினார். வேட்டியும் வெள்ளைச் சட்டையும் அணிந்து, அந்தச் சட்டைக்கு மேல் கறுப்பு வெயிஸ்ட் கோட் அணிந்திருந்தார். முகத்தில் அன்பு மலர்ந்து விளங்கியது. மெல்லிய உடலும் உடைகளும் கட்டில் மெத்தையும் தூய்மையை காட்டின. ஆனால், அந்த மென்மையையும் தூய்மையையும் கெடுப்பன போல், முகம், கை, கால் முழுவதும் வெள்ளைத் தழும்புகள் பரவலாக இருந்தன. கண்ணாடி அணிந்திருந்தார். பார்வைக் காக அணிந்திருந்தது அல்ல அது. பார்வையிழந்த கண்கள் அந்த அன்பு முகத்தின் அழகைக் கெடுக்காமலிருப்பதற்காக அணிந்தது அது.

''தமிழ்நாடு என்றால் எனக்குத் தனி அன்பும் மதிப்பும் உண்டு. தமிழ்நாடு என் நூல்களுக்கு மிகுதியாக ஆதரவு தந்தது இப்போதும் என் நூல்களைப் படிப்பவர்கள் அங்கே மிகுதியாக இருக்கிறார்கள். கா,ஸ்ரீ.ஸ்ரீ எப்படி இருக்கிறார்?' என்றார் காண்டேகர்.

''நல்லபடி இருக்கிறார். அவருக்கு அடிக்கடி உடல் நலம் குறைகிறது'' என்றேன். அது எழுத்தாளர்களுக்கு இயற்கை. அவர் என் நூல்களை மொழிபெயர்ப்பு நூல்களாகத் தர வில்லை, மூல நூல்கள் போலவே ஆக்கித் தந்திருக்கிறார். உணர்ச்சியோடு ஈடுபட்டுப் படைத்துக் கொடுக்கும் உழைப்பு ஆகையால்அவருக்கும் உடல்நலம் கெடுகிறது.'' என்றார்.

அவர் முகத்தில் மலர்ச்சியே இருந்தது. ''உங்கள் பழைய புத்தகங்கள் படித்திருக்கிறேன். புதிய நூல் தமிழில் மொழி பெயர்ப்பாகி வர இருக்கிறதா?'' என்றேன்.

''புதிய நூல் தமிழில் வரப்போகிறது கா.ஸ்ரீ.ஸ்ரீ தான் மொழிபெயர்ப்பார், விரைவில் எதிர்பாருங்கள்'' என்றார்.

''மகிழ்ச்சியான செய்தி தமிழ்நாடு தங்களுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு அளிக்கும். உங்கள் கதைகளைப் படிக்கும் போது மொழிபெயர்ப்பைப் படிக்கிறோம் என்ற எண்ணம் தோன்றுவதில்லை. தமிழ்க் கதைகளைப் படிப்பதாகவே உணர்கிறோம்" என்றேன்.

''மொழிபெயர்ப்பு அவ்வளவு செம்மையாக அமைகிறது. கா ஸ்ரீ.ஸ்ரீயை என் உள்ளத்தில் பாராட்டிக் கொண்டேன். அவருடைய உடல்நிலையைப் பற்றி மேலும் அறிய விரும்பி னேன். ''பசியும் தூக்கமும் எப்படி?'' என்று கேட்டேன்.

''பசி போதுமான அளவுக்கு உள்ளது. எழுத்தாளனுக்கு வேண்டிய சிறிதளவு உணவை வயிறு ஏற்றுக்கொள்கிறது. குறை இல்லை. தூக்கமும் போதிய அளவுக்கு இருக்கிறது" என்றார்.

''இரவில் தொடர்ந்து சில மணிநேரம் ஆழ்ந்து உறங்க முடிகிறதா? எவ்வளவு நேரம்?''

''மூன்று நான்கு மணிநேரம் உறங்குகிறேன்.''

''ஆழ்ந்த உறக்கமா?''

''ஆமாம்.''

''அப்படி இருந்தால் உடம்பு நன்றாக இருக்கவேண்டுமே?"

''ஆனால, எழுத்தாளன் இரட்டை வாழ்வு வாழ வேண்டி யிருக்கிறதே, அதனால் உடம்பு மெலிந்து போகிறது மற்ற நேரங்களில் மற்ற மனிதர்களைப்போல் வாழ வேண்டியிருக் கிறது. கற்பனைகளைப் படைத்து எழுதும்போது வேறோர் உலகத்தில் வாழ்ந்து உழைக்க வேண்டியிருக்கிறது.''

''மூளை உழைப்பு பொல்லாதது.''

''சாதாரண மூளை உழைப்பாக இருந்தால் கவலை இல்லை. கற்பனை உழைப்பு மிகப் பொல்லாதது.''

அவருடைய முகத்தில் இருந்த மலர்ச்சி எங்கோ நீங்கியது. எங்கோ தொலைவில் பார்ப்பவர் போல் முகத்தை மாற்றிக் கொண்டு கூறினார். உடம்பு நோயால் துன்புறும் நாட்களில் மருத்துவர் மிகவும் கடுமையான பத்தியம் சொல்கிறார். ஐந்து மைல் வேண்டுமானாலும் தொடர்ந்து நடந்துபோக லாம்; ஆனால், ஐந்து நிமிஷமும் சிந்தனை செய்யக்கூடாது என்று வற்புறுத்துகிறார். சிந்தனை நரம்புகளில் சூடு உண்டாக்கிக் கெடுக்கிறது என்றார். உண்மைதான்; அதையும் உணர்கிறேன். ஆனால், நடக்காமல் இருக்கலாம். சாப்பி டாமல் இருக்கலாம், உழைக்காமல் இருக்கலாம். சிந்தனை செய்யாமல் எப்படி இருக்க முடியும்? அதுதான் என்னால் முடியவில்லை என்ன செய்வது?''

''வறுமையும் போராட்டமும் கொடுமையும் இல்லாத நல்ல பொதுஉடைமைச் சமுதாயத்தைப் பற்றி நீங்கள் கனவுகண்டு 'எரிநட்சத்திரம்' முதலான உங்கள் நூல்களில் எழுதியிருக் கிறீர்களே.''

''ஆமாம்.''

''முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் கண்ட கனவுகள் பலிக்கும் என்று தோன்றவில்லையே? இன்றைய இளைஞர்கள் புதிய முன்னேற்றமும் பெறவில்லை. பழைய பண்பாட்டிலும் நம்பிக்கை இல்லை. அதனால் உங்கள் உள்ளம் சோர்வு அடையவில்லையா?

''அப்படி ஒன்றும் சோர்வு இல்லை. இளைஞர்களைப் பற்றி எண்ணும்போது கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது உண்மைதான். பழைய பண்பாட்டில் நல்ல பகுதிகள் உண்டு. அவற்றையும் விட்டுவிட்டு, மனம்போன போக்கில் பெரும் பாலோர் வாழ்கிறார்கள். அமெரிக்கர்களைப் பார்த்து பின் பற்றி வாழ விரும்புகிறார்கள். சிந்திக்கும் ஆற்றலையும் இழந்துவிட்டார்கள். ஆனால் நான் நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்துவிடவில்லை. இரண்டு தலைமுறைகள் இப்படிக் கெட்டுக் கலங்கிய பிறகு, நல்ல நிலையைத் தேட முன்வருவார்கள். ஒருவகைச் சீரான வாழ்க்கையை அப்போது தேடுவார்கள். ஆகையால் இன்றைய நிலைமையைப் பார்த்து நம்பிக்கை இழந்துவிடக் கூடாது.''

கடைசியாக கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்கவேண்டிய தொடர்பு பற்றிக் கேட்டேன்.

''கடவுளை மக்களிடத்தில் காண்பதுதான் என் மதம் மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் என் வழிபாடு. அதனால் தான் இன்றும் எழுதவேண்டுமென்று முயல்கிறேன். கடவுள் மனிதனுக்குத் தந்த ஆற்றலை, மற்றவர்களுக்கு உதவியாகப் பயன்படுத்த வேண்டும். அதுபோதும்'' என்று முடித்தார்.

விடைபெற எழுந்து நின்றபோது, அவருடைய இரண்டு கைகளும் என்னை நோக்கி நீண்டன. நான் கை நீட்டினேன்.

'இருதுருவம்' முதலான அருமையான பல கற்பனைக் களஞ்சியங்களை—உரைநடைக் காவியங்களை—எழுதித் தந்த மென்மையான கைகளைப்பற்றி, வணக்கம் சொல்லி விடை பெற்றேன்.''

டாக்டர் மு.வ. காண்டேகரின்மீது கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும், அவர் படைப்பின்மீது கொண்டிருந்த பற்றுதலும் இவ்உரையாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சமூக சீர்திருத்தத்திற்கு இலக்கியம் ஓர் அற்புதக் கலைவடிவம் என்று பிறருக்கு எடுத்துக்காட்டி வாழ்ந்தவர் வி. ஸ. காண்டேகர். இதனை தமிழ் எழுத்தாளர்கள் பலரும் உணர்ந்திருந்தனர்.

கா.ஸ்ரீ.ஸ்ரீ யால் இந்த உணர்வு மேலோங்கியது என்பதை தமிழ் இலக்கிய உலகம் மறுக்கமுடியாது.

**தமிழில் காண்டேகர் நாவலின் வெற்றிக்குக் காரணம்**

கா. ஸ்ரீ. ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் காண்டேகரின் நூல்களைப் படிக்கும் வாசகர்கள் மொழிபெயர்ப்பு என்பதை மறந்து கதாபாத்திரங்களோடு, கருத்துகளோடு, அழகான உவமைகளோடு ஒன்றிவிடுகின்றனர். காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீயும் மறைந்து வாசகர்களின் கண்முன் கதாபாத்திரங்களே நடமாடுகின்றனர். இது மொழிபெயர்ப்பில் கா. ஸ்ரீ. ஸ்ரீ க்கு கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.

''ஆசிரியர் காண்டேகர் நவீன முறையில் உயர்ந்த நாவல்கள் எழுதும் ஆற்றல் படைததவர். அவருடைய நாவல்கள் மிகவும் பாராட்டப்பெற்றிருக்கின்றன. மராட்டியிலிருந்து இவற்றை மொழிபெயர்த்துத் தரும் பொறுப்பை வகித்து வரும் நண்பர் கா. ஸ்ரீ. ஸ்ரீ மூலத்திற்கும் மொழிபெயர்ப்புக்கும் வேற்றுமை புலப்படாதவாறு செவ்வையான முறையில் தம் கடமையை நிறைவேற்றி வருகிறார். ஆசிரியர் நம் நாட்டுக்குப் பொதுவான சமூகப் பிரச்னைகளைப் பற்றியே எழுதுவதால் அவருடைய நாவல்கள் நமக்காக நம் மொழியில் எழுதப்பட்டவை போலவே இருக்கின்றன. கொஞ்சம் படிக்க ஆரம்பித்ததும் கதாபாத்திரங்கள் கூட நமக்குப் பழக்கமான பேர்வழிகளாகவே தோன்றுகிறார்கள்''[44] என்று ப.ராமசாமி, 'இருதுருவங்கள்' நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். மொழிபெயர்ப்பாளர் கா. ஸ்ரீ. ஸ்ரீ இதற்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

''காண்டேகர் இலக்கியம் வெற்றியுலா வந்ததற்குப் பல காரணங்கள். அவற்றில் முக்கியமான ஒன்று—வங்க—ஹிந்தி நாவல்கள் பெரும்பாலும் தமிழில் வந்து, அந்த அலை ஓய்ந்திருந்தபோது காண்டேகர் இலக்கியம் தமிழகத்தில் சென்ற

44. இரு துருவங்கள், வி.ச. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ அல்லயன்ஸ் வெளியீடு. சென்னை, ப. 5. டிச. 1889.

லாக வீசியது. அது கற்பனை இலக்கியமன்று. வாழ்விலக்கியம்; எனவே அதைத் தமிழ் வாசகர்கள் ஆர்வத்துடன் வரவேற்றார்கள். அந்தநாளைய பிரபலத் தமிழ் எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், கு.ப.ரா, தி.ஜ.ர, ரா.நா முதலியோர், அண்ணா உட்பட காண்டேகர் இலக்கியத்தைத் தமிழ் வார மாத ஏடுகளில் விமரிசித்தார்கள். அந்த விமரிசனங்களை இன்று திரட்ட முடிந்தால் சுமார் 150 பக்கம் கொண்ட ஆய்வு நூலாகும். காண்டேகர் என்னைத் தவிர வேறு எவருக்கும் தமது இலக்கியத்தைத் தமிழில் மொழிபெயர்க்க அனுமதி கொடுக்கவில்லை. அவர் என்னிடம் மிக்க நம்பிக்கையும் அன்பும் கொண்டிருந்தார். தவிரவும் மராட்டியிலிருந்து தமிழில் திறமையுடன் மொழிபெயர்க்கக் கூடிய தமிழ் எழுத்தாளர் அன்று முதல் இன்றுவரை இல்லை எனலாம். எனவே இந்தத் துறையில் நான் எதிரியில்லாத மன்னனாகத் திகழ்ந்தேன்''[45] என்று கூறுகிறார் கா.ஸ்ரீ.ஸ்ரீ.

### கா. ஸ்ரீ ஸ்ரீ யின் பிற மொழி பெயர்ப்புகள்

கா. ஸ்ரீ. ஸ்ரீ காண்டேகரைத் தவிர வேறு பலரின் படைப்புகளையும், தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தர்மானந்த கோஸம்பி' எழுதிய 'பகவான்புத்தர்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது, சாகித்திய அகாதெமி தமிழ் மொழிபெயர்ப்பு வரிசையில் 1857 ஆம் ஆண்டு வெளியிட்ட முதல்நூல் 'பகவான் புத்தர்' தர்மானந்த கோஸம்பி எழுதிய இந்நூலுக்கு காகா கலேல்கர் முன்னுரை வழங்கியுள்ளார்' ''இந்த நூலின் மூல நூலாசிரியரான ஸ்ரீ தர்மானந்த கோஸம்பி, பாலிமொழியிலும் இலக்கியத்திலும் பெரும்புலவராக இருந்தவர். பௌத்த சமயத்தைப் பற்றிய மூல இலக்கியம் அனைத்தையும் ஆழ்ந்து பயின்று, அவர் உலகப்புகழ்பெற்ற அறிஞரானார். ஆயினும் அவருடைய முயற்சி அவ்வளவும், வெறும் புலமை பெறுவதற்காக அமையவில்லை. அவர் புத்தர் பெருமானின் ஒப்பற்ற பக்தராக விளங்கியவர். ஆதலால் அவர் பெற்றதும், செய்த

45. கா.ஸ்ரீ.ஸ்ரீ இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம், நாள், 30-9-1993.

தும் இலக்கியத்தொண்டின் வாயிலாகக் கொடுத்ததும் ஆகிய எல்லாம், பெரும்பாலான மக்களின் நன்மைக்காகவே, பெரும் பான்மையோரின் இன்பத்துக்காகவே பயன்படுவனவாம்.

அவர் எழுதிய புத்தர் பெருமானின் சரித்திரம் பலவகை நோக்கத்தினால் மூலநூலாக விளங்குகிறது. நாம் இதைப் படித்து, புத்தர் பிரானைப் பற்றிய உண்மையானவையும், ஆதாரமுள்ளவையும். மேற்கோளாதற்குரியனவுமானச் செய்தி களை அறிகின்றோம்''[46] என தர்மானந்த கோஸம்பி எழுதிய 'பகவான்புத்தர்' என்ற இந்நூலைப்பற்றி அறிஞர் காகா கலேல்கர் முன்னுரை வழங்கியுள்ளார்.

பிணி, மூப்புச் சாக்காடு ஆகியவற்றைக் கண்டு வியந்த அரச குமாரரான சித்தார்த்தர் இல்லத்தைத் துறந்து மறை வாக ஓடிவிட்டார் என்னும் கருத்து வெறும் கற்பனைக் கதை யாகும் என்பதற்கு இந்நூல் ஆதாரமாகும். மேலும் ஆரியரின் வெற்றி, அக்கால அரசியல்நிலை, சமயநிலை, புத்தரின் தவமும் தத்துவஞானமும், சிராவகர் சங்கம், ஆன்மவாதம், கர்ம யோகம், வேள்வி, சாதிப்பிரிவினை, புலால் உணவு, அன்றாட வாழ்க்கை ஆகியனப் பற்றி தகுந்த சான்றுகளுடன் விளக்கும் முக்கியத்துவமுடையது இந்நூல். மராட்டிய மொழியிலிருந்து தமிழில் இந்நூலை மொழிபெயர்த்து வழங்க கா.ஸ்ரீ.ஸ்ரீ பெரிதும் முயன்றுள்ளார். தத்துவக் கருத்துகளை தகுந்த முறையில் எளிய மொழியில் அனைவருக்கும் புரியும் வகையில் மொழிபெயர்த்து கா.ஸ்ரீ.ஸ்ரீ வழங்கியுள்ளார்.

இந்தி இலக்கிய உலகில் புகழ்பெற்ற பிரேம்சந்த் எழுதிய 'நிர்மலா' என்ற நாவல் கலைமகள் இதழில் 1940ஆம் ஆண்டு தொடர்கதையாக, கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் வெளி வந்துள்ளது. பின்பு 1941ஆம்ஆண்டு கலைமகள் வெளியீடாக, நூல் வடிவில் வெளி வந்தது. 'பிரேம்சந்தின் சிறந்த சிறு

---

46. பகவான்புத்தர், தர்மானந்த கோஸம்பி (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. சாகித்திய அகாடமிக்காக பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு. 1957. ப. 1

கதைகள்' என்ற தலைப்பில் ஈத்பண்டிகை, நாயகர் வீட்டுக் கிணறு, வைகுண்டச் சல்லா மண்டைக் கிறுக்கு, அன்னை, கடைசிச் சாக்கு, புல்லுக்காரி, இலவசப்புகழ், மார்கழி இரவு, குற்றச்சாட்டு ஆகிய சிறுகதைகள் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழி பெயர்ப்பில் இந்நூலில் அடங்கியுள்ளன. 1943ஆம் ஆண்டு அல்லயன்ஸ் வெளியீடாகும் இந்நூல். பிரேம்சந்தின் 'இரு மலர்கள்' என்ற நாவலும் கா. ஸ்ரீ. ஸ்ரீயின் மொழிபெயர்ப் பாகும்.

கா.ஸ்ரீ ஸ்ரீ. கலைமகள் இதழில் துணை ஆசிரியர் பொறுப் பில் இருந்தபொழுது மஞ்சரி இதழில் அவருடைய மொழி பெயர்ப்பில் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் பலவும் 1947ஆம் ஆண்டு முதல் 1970 ஆண்டு வரை தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளன.

போர்கர் எழுதிய தேவதாசி, காகாகலேல்கரின் ஸப்த நதிகள், வாழ்க்கைக் கலை (கட்), பர்லபக் எழுதிய பழஞ்சுவர், மாட்கோல்கர் எழுதிய நாக கன்னிகை, புதுக் குடித்தனம், பிரமத் சௌதுரி எழுதிய ஜோட்டனும் லோட்டனும், ரகுநாத பிரஹ்மபட்ட எழுதிய அருந்ததி, சரத்சந்திரரின் சஞ்சீவினி, கல்ப—ஸ்ஸார—மாலா என்ற இந்திக்கதைகள், ஆகியனவும், மற்றும் பலரின் படைப்புகளையும் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார் அறிஞர் கா.ஸ்ரீ ஸ்ரீ.

வேறு மொழிப் படைப்பாளர்களைத் தமிழில் அறிமுகப் படுத்தும்பொழுது மூல நூலாசிரியரைப் பற்றிய குறிப்புகளை யும் நூலின் முக்கியத்துவத்தையும் வழங்கி வாசகர்களுக்கு அறிமுகஞ்செய்யும் பாங்குடையவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. சான்றாக போர்கர் எழுதிய 'தேவதாசி' என்ற மராட்டிய நாவல் 1950ஆம்ஆண்டு மஞ்சரியில் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளது. இந்நாவலை அறிமுகப்படுத்தும்பொழுது, "பெல்காமில் சமீபத்தில் நடந்த இலக்கிய மாநாட்டில் பொற் பதக்கம் பரிசு பெற்ற நாவல் 'தேவதாசி'. இதை எழுதிய போர்கர் கோவா விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண் டவர். லலிதமான கற்பனைக் காவியங்கள் பல புனைந்திருக்

கிறார். காந்தியடிகளின் சரிதத்தை விவரிக்கும் 'மகாத்மாயனம்' என்ற மகா காவியத்தைச் சிருஷ்டிப்பதில் இப்போது முனைந்திருக்கிறார். வாழ்வை வழிபாடாகக் கருதும் தேவதாசியின் சித்திரம் உன்னதமான எண்ணங்களைப் பரப்புகிறது''[47] என்று குறிப்பிட்டுள்ளார் கா.ஸ்ரீ.ஸ்ரீ. வாசகர்கள் படைப்பாளியைப் பற்றியும், படைப்பை ப்பற்றியும் அறிந்துகொள்ள இந்தக் குறிப்பு ஏதுவாகிறது.

**கா.ஸ்ரீ ஸ்ரீ யின் இன்றைய பணி**

கா.ஸ்ரீ.ஸ்ரீ சென்னையில் 1934 முதல் 1988 வரையில் வாழ்ந்தார். இவருக்கு நான்கு புதல்வர்கள். மூன்று பெண்கள்; ஒரு ஆண்; அனைவரும் உயர்கல்வி பயின்று நல்ல நிலையில் உள்ளனர். ஒரு மகனும் ஒரு மகளும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். டாக்டர் பட்டம் பெற்ற மகள் அமெரிக்காவில் அரசுப் பணியில் இருக்கிறார். புதல்வர்களுக்குத் தனது இலக்கியப் பணி பற்றிப் பெரும்பாலும் தெரியாது. தலைமுறை மாறுதலினால் அவர்களின் வாழ்க்கை வேறு வகையாக அமைந்து விட்டது என்று கூறுகிறார் கா.ஸ்ரீ ஸ்ரீ. இவரது மனைவி காலமானதும் நாசிக்கில் உள்ள தனது மகனுடன் வாழ்ந்து வருகிறார். உடல் நலம் குன்றினாலும் தொடர்ந்து தனது தமிழ்ப் பணியைச் செய்து வருகிறார்.

தற்பொழுது ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம், ஆகியவற்றை எளிய தமிழில், இனிய தற்கால நடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்து பல பகுதிகளாக வெளியிட முயன்றுள்ளார். மேலும் 'யோகா' வாசிஷ்ட்டம்' இரண்டு பகுதிகளாகத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட பணியாற்றி வருகிறார்.

கா.ஸ்ரீ.ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் ஆழ்ந்து ஆராய்ந்து, தொடராக 'ஸுதர்சனம்' என்ற வைணவ மாத இதழில் எழுதி வருகிறார். இன்றும் தொடர்ந்து இலக்கியப் பணி

47. மஞ்சரி, தேவதாசி, போர்கர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ மார்ச்-1950

செய்து வரும் இவ்வறிஞர் தன்னடக்கம் மிக்கவர், காட்சிக்கு எளியவர், பிறரை மதித்துப் போற்றும் பண்புடையவர். எந்தப் பணியையும் மிகச் சரியாக, திருத்தமாகச் செய்ய வேண்டும் என்ற நோக்குடையவர், அவரைப் போல ஒரு சிறந்த மனிதரைக் காணுதல் அரிது எனப் பலரும் அவரைப் போற்றி மகிழ்கின்றனர்.

காண்டேகரும், கா.ஸ்ரீ.ஸ்ரீயும் சிந்தனையிலும் செயலிலும் ஒன்றுபோல வாழ்ந்ததைக் காணலாம். காண்டேகரும், கா.ஸ்ரீ.ஸ்ரீயும் சீர்திருத்த சிந்தனை நோக்குடையவர்கள்; இருவரும் தாழ்த்தப்பட்ட, ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலில் ஈடுபட்டவர்கள்; இருவரும் மனவளம், கருத்து வளம், செயல்வளம் இருந்த அளவிற்கு உடல் நலமின்மையால், துன்புற்றவர்கள். இருவரும் இலக்கியப் பணியையே தங்களது வாழ்நாள் பணியாக மேற்கொண்டவர்கள். பத்திரிகை, திரைப்படத்துறை ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்தவர்கள். ஒரே நூலுக்காக (யயாதி) பரிசு பெற்றவர்கள் எனப் பலவிதங்களில் ஒன்றுபோல வாழ்க்கையை நடத்தியவர்கள். இத்தகைய நல்லறிஞர்களின் புகழ் நீடுவாழ வாழ்த்துவோம்!

## காண்டேகரின் படைப்புகள்

### நாடகம்

| | | தமிழில் | மராட்டியில் வெளிவந்த ஆண்டு |
|---|---|---|---|
| 1. | ரங்காசே ராஜ்ய | ஏழையின் அரசு | 1928 |

### நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹ்ருதயாசி ஹாகா | இதயக்குரல் | 1930 |
| 2. | காஞ்சன் மிருக் | தங்கமான் | 1931 |
| 3. | உல்கா | எரிநட்சத்திரம் | 1934 |
| 4. | தோன் த்ருவ | இருதுருவங்கள் | 1934 |
| 5. | தோன்மனே | இருமனம் | 1938 |
| 6. | ஹிர்வ சாப்பா | மனோரஞ்சிதம் | 1939 |
| 7. | ரிகாமா தேல்ஹாரா | வெறுங்கோயில் | 1939 |
| 8. | ஸுகாசா சோதா | சுகம் எங்கே | 1939 |
| 9. | பாண்டரே டக | வெண்முகில் | 1939 |
| 10. | பஹிலே ப்ரேம (புயலும் படகும் என்ற பெயரில் தமிழில் வெளிவந்தது) | முதற்காதல் | 1940 |
| 11. | ஜளலேலா மோஹர் | கருகிய மொட்டு | 1941 |
| 12. | க்ரௌஞ்சவத | கிரௌஞ்சவதம் | 1942 |
| 13. | அஷ்ரு | கண்ணீர் | 1953 |
| 14. | யயாதி | யயாதி | 1959 |
| 15. | அமிருத்வேல் | அமுதக்கொடி | 1967 |

### சிறுகதைத் தொகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வித்யுதி—ப்ரகாஷ் | மின்னலொளி | 1917 |
| 2. | நவமல்லிகா | புதுமல்லிகை | 1929 |
| 3. | ஜீவன்கலா | வாழ்க்கைக் கலை | 1934 |

| | | | |
|---|---|---|---|
| 4. | தத்தக ஆணி இதர கோஷ்டி | தத்துமகன் முதலிய கதைகள் | 1934 |
| 5. | தவபிந்தூ | பனித்துளி | 1937 |
| 6. | நவசந்த்ரிகா | புதுநிலவு | 1937 |
| 7. | பூஜன் | வழிபாடு | 1938 |
| 8. | பாகள்யா | மலரிதழ்கள் | 1939 |
| 9. | ஸமாதீவரீல் புலே | சமாதி மலர்கள் | 1939 |
| 10. | ஹஸ்தாசா பாவூஸ் | ஹஸ்தநட்சத்திரமழை | 1939 |
| 11. | ஸூர்ய கமளே | சூரியகாந்தி மலர்கள் | 1941 |
| 12. | ஊன் பாவூஸ் | வெயில் மழை | 1942 |
| 13. | கல்சர்ட் மோதீ | கல்சர் முத்து | 1942 |
| 14. | ஆஜசீ ஸ்வப்னே | இன்றையக்கனவுகள் | 1944 |
| 15. | கால்சீ ஸ்வப்னே | நேற்றையக் கனவுகள் | 1944 |
| 16. | கரட்யா காஹேர் | கூட்டுக்கு வெளியே | 1944 |
| 17. | நவா ப்ராதஹ்கால | புதிய விடிவு | 1944 |
| 18. | பஹீல்யா வஹில்யா | முதல் வேகம் | 1944 |
| 19. | பஹில் லாட | முதல் அலை | 1944 |
| 20. | புலே ஆணி தகட | மலரும் கல்லும் | 1944 |
| 21. | ஸ்த்ரீ ஆணி புருஷ | ஆணும் பெண்ணும் | 1944 |
| 22. | சந்தேரீ ஸ்வப்னே | நிலவுக் கனவுகள் | 1947 |
| 23. | ஸாஞ்ஜ—வாத | மாலை விளக்கு | 1948 |
| 24. | அஷ்ரு ஆணி ஹாஸ்ய | கண்ணீரும் சிரிப்பும் | 1949 |
| 25. | ப்ரீதீசா சோத | காதலைத் தேடி | 1952 |
| 26. | ப்ரஸாத | அருள் | 1957 |
| 27. | முரலீ | வேய்ங்குழல் | 1960 |
| 28. | உச்—சாப | சாப விளக்கு | 1961 |
| 29. | டகா ஆட்சே சாந்தணே | முகிலின் பின் நிலவு | 1972 |

**இலக்கியத் திறனாய்வுகள்**

| | | |
|---|---|---|
| 1. கட்கரீ—வ்யக்தி ஆணி வாங்மய | கட்கரி—Person and literature | 1932 |
| 2. மராடீசா நாட்யஸம்ஸார | மராட்டி நாடக உலகம் | 1945 |
| 3. வி. எம். ஜோஷி—வ்யக்தி ஆணி விசார | வி.எம். ஜோஷி | 1948 |
| 4. ஆகர்கர் —வியக்தி ஆணி விசார | ஆகர்கர் | 1949 |
| 5. கேசவஸுத—காவ்ய ஆணி கலா | கேசவ ஸுதர் காவியமும் கலையும் | |

**சொற்பொழிவுகளின் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 1. ஸஹா பாஷணே | ஆறு பேச்சுக்கள் | 1940 |
| 2. தீன ஸம்மேளனே | மூன்று மாநாடுகள் | 1947 |
| 3. அபிஷேகா | அபிஷேகம் | 1958 |

**ஆராய்ச்சிக் கட்டுரைகள்**

| | | |
|---|---|---|
| 1. துந்துர்மாஸ | மார்கழிப் பொங்கல் | 1929 |
| 2. கோகர்ணீசி புலே | கோகர்ணக்கொடியின் மலர் | 1944 |
| 3. ஜீவன் கலா | வாழ்க்கைக் கலை | 1944 |
| 4. வனபோஜன | வனபோஜனம் | 1944 |
| 5. கோஂபன ஆணி கோஂபன | சாட்டையும் கவண் கல்லும் | 1946 |
| 6. புலே ஆணி காண்டே | மலரும் முள்ளும் | 1946 |
| 7. ரங்க ஆணி கந்த | வண்ணமும் மணமும் | 1961 |
| 8. ரேஷா ஆணி ரங்க | கோடும் வண்ணமும் | 1961 |
| 9. படகதா தருயா | கொடியைப் பறக்கவே வைப்போம் | 1975 |

## சரிதை மற்றும் சுயசரிதை

| | | |
|---|---|---|
| 1. ஆகர்கர் சரித்ர | ஆகர்கர் வரலாறு | |
| 2. தே திவஸ தீ மா்ணஸே | அந்த நாள் அந்த மாந்தர் | 1961 |

## மொழிபெயர்ப்பு

| | |
|---|---|
| 1. துரங்காதீல பத்ரே (பாக 1, 2, 3) | சிறைக் கடிதங்கள் பகுதி 1, 2, 3. |
| 2. அர்னெஸ்ட் டோலர்ச்யா காஹீ நிவடக பத்ராஞ்சா அநுவாத | அர்னெஸ்ட்டோலர் எழுதிய சில கடிதங்களின் மொழி பெயர்ப்பு |

## திரைக்கதைகள்

| | |
|---|---|
| 1. சாயா | நிழல் |
| 2. ஜ்வாலா | ஜ்வாலை |
| 3. தேவதா | தெய்வம் |
| 4. ஸுகாசா சோத | சுகத்தைத் தேடி |
| 5. அம்ருத | அமுதம் |
| 6. லக்ன பஹாவே கருன | கல்யாணம் பண்ணிப்பார் |
| 7. ஸர்க்காரீ பாஹுணே | சர்க்கார் விருந்தினர் |
| 8. துஜாச | உன்னுடையவனே |
| 9. ஸங்கம | சங்கமம் |
| 10. தர்ம பத்தினி (தெலுங்கு) | தர்ம பத்தினி |
| 11. மாஜே பாள | என் குழந்தை |
| 12. படீ மா | பெரியம்மா |
| 13. ஸுபத்ரா | சுபத்திரை |
| 14. தானா பானீ | உணவும் நீரும் |

## உருவகக் கதைகள்

| | | |
|---|---|---|
| 1. கலிகா | அரும்பு | 1941 |
| 2. ம்ருகஜளாதல்யா கள்யா | கானல்நீர்மொட்டுகள் | 1944 |

| | | |
|---|---|---|
| 3. ஸ்வர்ண கண | பொன்துளி | 1944 |
| 4. வேச லேலி புலே | பறித்த மலர்கள் | 1948 |
| 5. ஸோனேரீ ஸாவன்யா | பொன் நிழல்கள் | 1948 |
| 6. வனதேவதா | வனதேவதை | 1960 |

கட்டுரைத் தொகுதிகள்

| | | |
|---|---|---|
| 1. வாயு லஹரீ | காற்றலை | 1936 |
| 2. சாந்தண் யாந்த | நிலவிலே | 1938 |
| 3. அவிநாச | அவிநாசன் | 1941 |
| 4. மந்தாகினி | மந்தாகினி | 1942 |
| 5. ஸாயங்கால | மாலை வேளை | 1944 |
| 6. ஸெளர்யகமள | சூரிய காந்தி | 1944 |
| 7. கல்பலதா | கற்பகக்கொடி | 1945 |
| 8. மஞ்ஜிர்யா | மலர்க்கொத்துகள் | 1945 |
| 9. நவகிரண | புதிய புதிர் | 1946 |
| 10. திஸரா புஹர | மூன்றாம் யாமம் | 1946 |
| 11. ஜிம் ஜிம் | அடைமழை | 1948 |
| 12. பாரிஜாத | பவழ மல்லிகை | 1952 |
| 13. மஞ்ஜதார | நட்டாற்றில் | 1959 |
| 14. ரிம் ஜிம் | நூற்றல் | 1961 |
| 15. அந்தரிசா திவா | மனத்தக விளக்கு | - |
| 16. விஸ்வாமித்ர | விசுவாமித்திரர் | - |
| 17. ஸோனேரி ஸாவ்லி | பொன் நிழல் | - |
| 18. மாணஸாலா பங்க அஸதாத | மனிதனுக்கு இறகுகள் உண்டு | - |

# துணை நூற் பட்டியல்


1. அமுதக்கொடி, வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. 1978

2. அரும்பு, வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ, பாரதி பதிப்பகம், சென்னை, பதி. 1945.

3. ஆஸ்திகன், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ. ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. 1976.

4. இருதுருவங்கள், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ. ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. டிச. 1989.

5. ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்), வை. சச்சிதானந்தன், ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடிபிரஸ், சென்னை, பதி 1985.

6, கண்ணீர், வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை. பதி. டிச. 1991.

7. கருகியமொட்டு, வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ, பாரதிபதிப்பகம், சென்னை, பதி. 1985.

8. காண்டேகர் மணிமொழிகள், அன்புப்பழம் நீ, பாரி நிலையம், சென்னை, பதி. 1986.

9. கிரௌஞ்சவதம், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, கலைமகள் காரியாலயம், சென்னை, பதி. 1971

10. கூட்டுக்கு வெளியே, வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அலமுநிலைய வெளியீடு, பதி. 1984.

11 சோவியத் இலக்கியம் நோக்கும் போக்கும் (தமி) செகத்ரட்சகன், புதுமைப் பதிப்பகம், பதி. மே, 1984.

12. தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும்,வளர்ச்சியும், சிட்டி, சோ. சிவபாதசுந்தரம், கிறித்துவ இலக்கிய சங்கம் பதி. 1977.

13. பகவான் புத்தர், தர்மானந்த கோஸம்பி (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, சாகித்திய அகாடமிக்காக பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, பதி. 1957

14. பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, பதி. ஜூலை 1989

15. புயலும் படகும், வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ ஸ்ரீ, கலைமகள் காரியாலயம் வெளியீடு, சென்னை, பதி. 1940.

16. மனோரஞ்சிதம், வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ.ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. டிச. 1988

17. மு. வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒரு - திறனாய்வு, பா. சம்பத்குமார் ராஜ்காந்தி பதிப்பகம், பதி, டிச. 1988.

18. மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும், சேது மணி மணியன், செண்பகம் வெளியீடு, மதுரை, பதி, மார்ச். 1990

19. யயாதி, வி ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ.ஸ்ரீ, மங்கள நூலகம், சென்னை, பதி. டிச. 1973

20. யயாதி, வி. ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ. ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி டிச. 1990

21. வி. ஸ. காண்டேகர் கதைகள் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. டிச. 1989

22. வெண்முகில், வி.ஸ. காண்டேகர் (தமி) கா. ஸ்ரீ ஸ்ரீ, அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை, பதி. டிச. 1988

23. வெறுங்கோயில், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ.ஸ்ரீ, அலமு நிலைய வெளியீடு, சென்னை, பதி. சன. 1985

24. ஹரி நாராயண ஆப்தே, ஆர். பி. ஜோஷி, (தமி) சரோஜினி பாக்கியமுத்து, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, பதி. 1985

25. V. S. Kandekar, M.D. Hatkanagaleker, sahitya Akademi, New Delhi, Ed. 1986

**இதழ்கள்**

1. அமுதசுரபி, (கட்) தமிழ்மொழிக் குடும்பத்தில், கா. ஸ்ரீ,ஸ்ரீ, தீபாவளி மலர், 1978.
2. கலைமகள் (கட்) கலைமகளின் கோயிலிலே, கா.ஸ்ரீ.ஸ்ரீ, பொன்விழா மலர், டிச. 1981
3. கழகக் குரல் (கட்) இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த காண்டேகர், அறிஞர் அண்ணா, 28.3.76
4. தினமணி சுடர், வாசகர்களைக் கிறங்க வைக்கும் காண்டேகர் கதைகள், வல்லிக்கண்ணன், 8.9.1990
5. தினமணி சுடர் (கட்) மொழிபெயர்ப்பா, மூலநூலா, தம்பி சீனிவாசன், 13.9.1992
6. மஞ்சரி, 'வாழும்சிற்பம், வி. ஸ. காண்டேகர் (தமி) கா.ஸ்ரீ. ஸ்ரீ, சன. 1950
7. Sahitya Akademi Trsnslation prizes, Sahitya Akademi, New Delhi, Ed. 1991

**நேர்காணல்**

1. எஸ்.வி.ரமணி, கலைமகள் இதழாசிரியர், நாள் 12.8.93.
2. வி. சீனிவாசன், அல்லயன்ஸ் புத்தக நிறுவனத்தார், நாள். 20.7.94
3. ஜி. திலகவதி, இ. கா. ப, நாள், 8.8.94.

**கடிதங்கள்**

கா. ஸ்ரீ. ஸ்ரீ. இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதங்கள்

நாள் : 19.7.1993
,, 30.9.1993
,, : 18.10.1993
,, : 2.12.1993
,, : 14.12.1993
,, : 25.12.1993
,, : 9.6.1994
,, : 12.9.1994

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# உலகத் தமிழராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

## 1994

1) தொல்காப்பியம்—பொருளதிகாரம்—பொருளியல் ... 32 00

2) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ... 60.00

3) இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு ... 20.00

4) கனகாபிஷேக மாலை — திறனாய்வு ... 16.00

5) புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் ... 20.00

6) தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள் ... 14.00

7) வ. உ. சி.யும் தமிழும் ... 18.00

8) தமிழ் ஆய்வுக் களங்கள் ... 70.00

9) தமிழும் தெலுங்கும் ... 15.00

10) விலங்கியலும் தமிழியலும் ... 10.00

11) பெண்ணியம் ... 25.00

12) தமிழும் பிறதுறைகளும் ... 35.00

13) A Comparative Study of Tamil and Japanese ... 15.00